www.padippakam.com

இலவச கம்பியூட்டர்

GB:90p Euro:1.50

# நம்நாடு

பிரதம ஆசிரியர்: தீ.வே.ரா

மலர்: 01 09 - 15 மார்ச் 2002 இதழ்: 020

Vee Kay Autos

- MOT Servicing
- Brakes Overhauls
- Car Electricals
- All Types of Repairs

48 Belfast Road
London N16 6UH
**Tel: 020 8806 1965**
Fax: 020 8806 0161



## வெற்றிப்பாதையில் சமாதானப் பயணம்

## குழப்ப சந்திரிக்கா தீவிரம்!



## பிரபாகரனிடம் ஆசிபெற்ற கண்காணிப்புக் குழு

## மறியலுக்கு போகும் அடுத்த அமைச்சர் யார்?

## யாழில் புலிகளின் அரசியல் நடவடிக்கை ஆரம்பம்

## வன்னிக் காட்டுக்குள் பிரபாகரனுடன் ஒரு சந்திப்பு:

## The Island of Blood: இரத்தத் தீவு

TILKO ESTATES

கடந்த பத்து வருடங்களாக வீடுகளை வாடகைக்கு வழங்குவதில்
East London, Essex பகுதிகளில்
நம்பிக்கை, நாணயம் மிக்க சேவை வழங்குவதில் முன்னணியில் திகழ்பவர்கள்

* ESTATE AGENTS
* LETTING MANAGEMENT
* PROPERTY MAINTENANCE

| New Branch | East Ham Branch | Docklands Branch | Walthamstow Branch |
|---|---|---|---|
| Bethnal Green<br>193 Roman Road<br>London E2 0QY | 213 High Street North<br>East Ham, London E6 1 JD<br>Tel: 020 8472 0029 | 607 Comercial Road<br>London E14 1JD<br>Tel: 020 7791 1234 | 252 Hoe Street, Walthams-tow<br>London E17 3AX |

Web: telko.co.uk Email: info@tilko.co.uk

நம்நாடு கனடா . இலண்டன். பரிஸ் . சுவிஸ். ஜேர்மனி முதல் உலகத் தமிழகமெங்கும்

படிப்பகம்

www.padippakam.com




# நம்நாடு

வயலில் விளைச்சல் வாராது எனினும்
புயம்செய் வியர்வை பூக்களாய் விரியும்
காலம் கனியாது என்றில்லை கனியும்
நாளை சுமப்போம் சுதந்திரப் பூக்கள் -புதியபாரதி

**நிர்வாக ஆசிரியர்:**
**S. செல்வா**

**பிரதம ஆசிரியர்:**
**T. V. இராசலிங்கம்**

**ஆசிரியர் குழு:**
ஐ. தி சம்பந்தன்
பாலரவி

**Director of publication:**
S. Selva

**Editor In Chief:**
T.V.Rajalingam

**Editor:**
I.T Sampanthan



1a Sibley grove
Eastham
London E12 6SD
Tel: (020) 8472 2900
news@namnaadhu.co.uk

**பிரான்ஸ் தொடர்புகளுக்கு:**
**எஸ். சரவணமுத்து**
Tel: 0613 010199



**நம்நாடு பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்கள் அரசியல், கலை விமர்சனங்கள் யாவும் படைப் பாளிகளின் சொந்தக் கருத்தேயன்றி நம்நாடு பத்திரிகையின் கருத்துக் கள் ஆகமாட்டாது. இவ்விதழில் வெளியாகும் விளம்பரங்களில் உள் ள விபரங்களுக்குச் சம்பந்தப்பட்ட விளம்பரதாரர்களே பொறுப்பு. மேற்கூறிய விடயங்கள் எவற்றிற்கும் நம்நாடு பத்திரிகை எவ்வித பொறுப் பும் ஏற்கமாட்டாது. நம்நாடு பத் திரிகையில் வெளியாகும் விடயங்களை முழுமையாகவோ அன்றி பகுதியாகவோ முன் அனுமதிபெற்று மறுபிரசுரம் செய்துகொள்ள முடியும்.**

The **Namnaadhu** is published weekly in UK, Toronto, Ontario Canada, Paris. The views expressed are those of the contributors and do not necessarily reflect the opinion of **Namnaadhu**. The advertisers are responsible for their respective advertisements. **Namnaadhu** will not bear any responsibility.


# நினைந்து நினைந்து நெஞ்சம்...

போரால் இரண்டாக்கப்பட்டிருக்கும்
எமது அழகியநாடு ஒன்றாக்கப்பட
வேண்டும்.-பிரதமர் ரணில்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா,
சிறீலங்காப் பாராளுமன்றத்தில்
உரையாற்றும் பேச்சுக்களில் இருந்து
வந்து கொண்டிருக்கின்ற செய்தி
வடிவங்களைக் கிரகித்தபடியே
எழுதப்படுகின்ற தலையங்கம் இது.

சமாதானமும் அமைதியும் தீர்வும்
இந்த நாடு பெற்றுக்
கொள்ளவில்லையானால்-சுதந்திர
இலங்கையின் ஆரம்பங்களில் இருந்த
மனித வாழ்வுக்கு நாம்
செல்லவில்லையானால் நாடு
இரண்டாகவே நகர்த்திக் கொள்ள
வேண்டியிருக்கும் என்பது
அவரின் வேண்டுகோள்.

மக்கள் மனங்களைப்
பொறுத்தவரையில், சிறீலங்காவில்
சமாதானம் என்பதை நிலைநிறுத்திய
ஐக்கிய மக்கள் முன்னணியின்
இன்றைய நகர்வை ஏற்றுக்
கொண்டிருப்பதை அவர்களின்
எண்ணப்பாடுகள் எடுத்துரைக்கின்றன.

ஆனாலும் பதவிக்கு இனக்கொள்கை
என்ற பண்டாவின் பால பாடத்தில்
காலபாடம் நடத்திக்
கொண்டிருக்கிறது ஜே.வி.பி. என்னும்
சிங்கள ஜனதா விமுக்தி பெரமுன.

தீர்வும் சமாதானமும்
எட்டப்படுவதற்கான இன்றைய
நகர்வை பலம் கொண்டமட்டும்
தகர்க்கதெறிய முனைகிறது
ஜே.வி.பி.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம்
ஆளும் அரசியல் கட்சியும்-
விடுதலைப் புலிகளும் ஒரு
நிரந்தர போர் நிறுத்தத்திற்கு
சம்மதிக்கப்பட்டிருக்கும் இந்த
நேரத்தில் இன்றைய சனாதிபதி
சந்திரிகாவும் அவரது
தலைமையிலான பொதுசன ஐக்கிய
முன்னணியும் ரணிலின்
தலைமையிலான அரசின்
நடவடிக்கைகளுக்கு பாதகமான
நகர்வையே சேர்த்துக்
கொண்டிருக்கிறார்கள்.

ஒட்டுமொத்த அமைச்சர்கள்
இலாகாக்களையே அலக்காகத்
தூக்கிக் கொள்ள என்னால் முடியும்
என்பது சந்திரிகாவின்
பிந்திய வார்த்தைகள்.

பாராளுமன்ற ஜனநாயகத்தை தன்
சனாதிபதி அதிகாரத்தால் தூக்கிக்
கொள்ள முடியும் என்பது அவரது
அதிகார எச்சரிக்கை.

அவர் சனாதிபதி.

அவருக்கான நிதி ஒதுக்கீட்டை
இந்தப் பாராளுமன்றமே நிர்வகிக்கிறது.

சனாதிபதி கொண்ட அரசியல்
அமைப்பை சில நேரங்களில்
பாராளுமன்றமே தூக்கி எறியக் கூடிய
தொனிகளே அவதானிகள் மட்டத்தில்
பேச்சுக்களாக வருகின்றன.

சுதந்திரக் கட்சியின் அரசியல்
அதிகாரத்திற்கு யார் யார் அடுத்த
வாரிசுகள் என்பதற்கான உட்கட்சிப்
போரே ஓங்கியிருக்கும் நேரம் இது.

இன்றைய எதிர்க்கட்சித் தலைவர்
மஹிந்தவின் போக்கிலே
சந்திரிகாவுக்கு அடுத்த பதவிக்குத்
தன்னைத் தயார் செய்யும் போக்கிலே
அநுரா அச்சம் கொள்ளத்
தொடங்கிவிட்டார்.

சுதந்திரக்கட்சி பண்டா குடும்பத்தின்
சொத்து என்றிருக்கிறார் அநுரா.

தான் தானேஅடுத்த வாரிசு-
இந்த ஆளும் அதிகாரக் கட்சிகளில்
ஒன்றான சுதந்திரக்கட்சி
சந்திரிகாவுக்குப் பின் தனக்கே
உரியது என்பதை
வெளிப்படையாகவே உரத்துக்
கூவுகிறார் அநுரா என்றால் அது
உட்கட்சியின் வெட்டுப்பாடுகளில்
விசுவரூபமானது.

நகர்வுகள் எங்கே நிற்கின்றன என்பது
இந்த இதழில் தெரிந்துவிடும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் புலிகளுக்குக்
கொடுக்கின்ற முக்கியத்துவம்-
நிரந்தர யுத்த நிறுத்தத்திற்கான
சத்தத்தைப் பாராளுமன்றம் எவ்வாறு
பகிரப்போகிறது என்பதற்கான
செய்திகள் இந்த இதழிலேயே
மொய்த்துவிடும்.

இந்தத் தலையங்கம் அவசிய
தேவை ஒன்றுக்காய் சற்று
முன்னேயே எழுதப்படுகிறது.

ஆனாலும், கடந்தகால சம்பவங்களில்
ஒரு நினைவாக, மணலாற்றிலே
தனது மறக்க முடியாத வீரர்களைப்
பறிகொடுத்த ஒரு நிலையில் தனது
இடுப்பில் இருந்த துப்பாக்கியை
இறக்கி வைத்து மரியாதை செலுத்திய
அந்தப் பொழுதில், உங்கள் இறப்பு
எனது பாதையின் இறக்க முடியாத
துருப்பு என்ற சத்தியம் செய்த
பிரபாகரனையும்,

பேராளிகள் போருக்குப் போகும்
போதும், மாவீரர்கள் நினைவின்
போதும், இறந்துபோன இதயங்களின்
சத்தியங்களை நினைத்துப்
பார்க்கும்-அவர்கள் வேட்கை
ஒருநாள் சுதந்திர பூமியாகும் என்ற
பிரபாவின் உரத்த குரலும்,
சுதந்திர விடியலுக்காக
இதந்தரு மனையைத் துறந்த
அந்த வீர பரம்பரைக்காகவும்,
தான் எந்தச் சத்தியப் பிரமாணங்களை
எடுத்துரைத்தாரோ அந்த
வாக்குக்களைக் காக்கின்ற
விடுதலைப் புலிகள் தலைவர்-
இன்றைக்கு உலக ஆய்வாளர்கள்
விதந்து உரைக்கின்ற-
தமிழீழ தேசியத் தலைவர் என்ற
சொற்பதத்திற்குச் சொந்தமான
வேலுப்பிள்ளை பிரபாகரனை
தலையில் வைத்துச் சுமக்கும்
ஆயிரமாயிரம் சனக்கூட்டத்தை
அம்பாறை, திருமலை, மன்னார்,
மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம்
என வருகின்ற மக்கள் மயத்தை
சிறீலங்கா ஊடகங்களே
உலகப் பந்தில் பதிய வைக்கின்றன.

துப்பாக்கியை இறக்கி வைத்துச்
சமாதானத்திற்காக வந்திருக்கும்
பிரபாவை சிங்கள இனமே
ஒட்டுமொத்தமாக கட்டி
அணைத்துப் பேசுங்கள்.

உலக அரங்கில் எடுத்து வரப்படும்
இந்த ஒருங்கு சேர்ந்த
இந்தச் சமாதான வரவேற்பில்
சமாதானப் பெண்புறாவாக பெயர்
பொறித்து அரசியலுக்கு வந்த
சந்திரிகா அவர்களைச்
சேர்ந்து கொள்ளுமாறு அழைக்கிறோம்

தலைவர் சிவாவின் இவ்வாரக் கூற்று
இன்னுமொன்றைக் கூறுகிறது.
நாடு பிளவுபடுவதை வெளிநாடுகள்
வரவேற்றுக் கொள்ளவில்லை.

ஆனாலும் ஒரு விடுதலைப் புலிகள்
தலைவரால்தான் இந்த உலக
இணைப்பு ஏற்பட்டிருக்கிறது.

சிங்கள மக்களே, அரசியல் கட்சிகளே
இறக்கிய துப்பாக்கியை ஏற்ற
வைத்து விடாதீர்கள்-தீ.வே.ரா


**வியாபரம் பெருக விளம்பரம் செய்க.....**

நம்நாடு பத்திரிகையில் உங்கள் விளம்பரம் ஏறத்தாள பத்தாயிரம் ஆயிரம் வாசகர்களை சென்றடைகின்றது. இதற்கு நீங்கள் செலவழிக்க வேண்டியது ஒரு சதுர அங்குலத்திற்கு இரண்டு பவுண்கள் மட்டுமே! ஆகவே இன்றே உங்களது விளம்பரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

*நம்நாடு - 020 8472 2900 - 07956 301559*

# சமாதானப் பயணம் வெற்றிகரமாகத் தொடருகிறது!
# தலைவர் பிரபாகரனைச் சந்தித்து
## ஆசிபெற்ற யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு!

சமாதானப் பயணம் வெற்றிகரமாகத் தொடருகிறது.

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து அவரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுவிட்டார்.

"பணியைத் தொடங்குங்கள். கண்டி றோட்டைத் திறப்பதற்கும் வன்னியில் கண்ணி வெடிகளை அகற்றுவதற்கும் உதவுங்கள்" என்று தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் புதன்மாலை தன்னைச் சந்தித்த கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் புருக்கோவேட்டைக் கேட்டுக் கொண்டார்.

புதன் இரவை மல்லாவியில் புலிகளின் விருந்தினராகக் கழித்த நோர்வேயின் முன்னாள் படைத்தளபதி வியாழன் காலை கிளிநொச்சிக்குப் போய் அங்கிருந்து இராணுவ ஹெலிகொப்டரில் கொழும்புக்குத் திரும்பவுள்ளார்.

நோர்வே மத்தியஸ்துக்கு எதிராக பௌத்த பிக்குகள் கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டம் பிசுபிசுத்துவிட்டது. இருநூறு பிக்குமாரையே அவர்ளால் திரட்ட முடிந்தது.

ஜே.வி.பியினரின் கோரிக்கையின் பேரில் திங்களும் செவ்வாயும் நடந்த "பாராளுமன்ற விவாதமும் பிசுபிசுத்துப் போய்விட்டது.

அத்துடன் சமாதான கோஷம் வலுவடைய ஆரம்பித்து விட்டது. வியாழன் மாலை கொழும்பு கோட்டையில் சமாதான தீபம் ஏற்றப்படவுள்ளது.

சிங்கள மக்களிடையே சமாதானத்துக்கு ஆதரவான உணர்ச்சி வலுக்கிறது. அந்த உணர்ச்சியை பாராளுமன்ற உறுப்பினரான பௌத்த பிக்கு பத்தேகம தேரோ செவ்வாக்கிழமை மக்களுக்கு விளக்கும் வகையில் எடுத்துச் சொன்னார்:

இரத்த ஆறு ஓடுவது நின்றுவிட்டது.

அது போதாதா யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் சாதனைக்கு."

புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் சமாதானப் பயணத்தைத் தொடர அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளில் தாங்கள் திருப்தியடைந்துள்ளதாக பிபிஸிக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

"அரசாங்கம் நடந்து கொள்ளும் விதத்தில் நாங்கள் திருப்தியடைந்துள்ளோம்" என்றார் அவர்.

கொழும்பிலுள்ள வர்த்தக சமூகமும் இதுவரை ஏற்பட்ட சமாதான முன்னேற்றத்தில்திருப்தியடைந்துள்ளது.

வர்த்தக சேம்பர்களின் கூட்டு அமைப்பான பிஸ்னஸ் போறம். போரத்தின் செயலாளர் அசோகா தென்னக்கோன். "சமாதானப் பயணம் திருப்திகரமாக முன்னேறுகிறது... அதையிட்டுநாங்கள் மகிழ்ச்சியடைந்துள்ளோம்" என்று சொன்னார்.

சமாதானத்தின்பால் மக்கள் காட்டும் உற்சாகம் அதைக் குழப்புவதற்கு முயன்ற சந்திரிகாவையும் பாதித்துள்ளதாகத் தெரிகிறது. அவரின் ஊடகச் செயலாளர் ஹரிம் பீரிஸ் புதன் கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் கைச்சாத்திட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விமர்சனம் செய்தாலும் அரசாங்கம் மேற்கொள்ளும் சமாதான

## குடாநாட்டில் அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க விடுதலைப் புலிகள் ஏற்பாடு

யாழ்ப்பாண மாவட்டத்தில் தனது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வருகிறார்கள். இதன் முதற்கட்டமாகஅவர்கள் திருநெல்வேலிப் பகுதியில் தங்கள் அலுவலகத்தைத் திறக்கவுள்ளனர்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் படையினரின் கட்டுபாட்டுப் பகுதியில் புலிகள் அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாமென்பதால் அவர்கள் இப்பகுதிகளில் தங்கள் அலுவலகங்களைத் திறக்கவுள்ளனர். இராணுவத்தினருக்கு அறிவித்த பின்னர் கடந்த திங்கட்கிழமை சந்திரன் என்பவர் தலைமையில் ஏழு புலிகள் குடாக்கடலில் வள்ளங்களில் குருநகர் இறங்குதுறை ஊடாக யாழ்ப்பாணம் வந்து திரும்பியுள்ளனர். ஆயுதங்கள் எதுவுமின்றி வாக்கிடோக்கியுடன் வந்த இவர்களை படையினரும் வரவேற்று உபசரித்துள்ளனர். இந்த ஏழு விடுதலைப் புலிகளும் யாழ். செயலகம் வரை சென்று சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களுடன் உரையாடித் திரும்பியுள்ளனர். தங்கள் அரசியல் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இவர்கள்மாணவர்களைக் கேட்டுள்ளனர்.



முயற்சிகளுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்குவார் என்று ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கைச்சாத்திட்ட பின்னரே பெப்பரவரி 21ம் திகதி மாலை அந்த உடன்படிக்கை தொடர்பான ஆவணம் ஜனாதிபதிக்கு பிரதமரினால்

சொல்லுவார் என்று சொல்லமுடியாது. யாராவது ஒருவர் போய் தூண்டிவிட்டால் போதும். பின்பு மாறிக் கதைப்பார்.

''மடம்! சர்வ அதிகாரமும் உங்கள் கையில் தான் என்று சொல்லித் தூண்டிவிட்டால் அதைப் பிடித்துக் கொண்டு தொங்குவார்..

எந்த அதிகாரம் இருந்தென்ன?

## யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவுக்கு எமது இயக்கம் பூரண ஒத்துழைப்பு!

### தலைவர் பிரபாகரன் உறுதிமொழி!

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ள யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாக அமுல் படுத்துவதில் புலிகள் இயக்கம் தமது பங்களிப்பை வழங்கும் என்று தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உறுதியளித்துள்ளார்.

அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்குமிடையில் யுத்த நிறுத்தத்தை கண்காணிக்க இலங்கை வந்துள்ள குழு தலைவர் அடங்கிய மூவர் குழு புதன்கிழமை மல்லாவி சென்று தமிழ் ஈழ விடுதலை புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை சந்தித்த போதே அவர் இந்த உறுதியை வழங்கினார்.

நோர்வே நாட்டின் மேஜர் ஜெனரல் ரெண்டுபுருஹோட் தலைமையிலான கண்காணிப்புக் குழு பிரபாகரனுடன் சுமார் இரண்டு மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தியது. கண்காணிப்பு குழு செயல்படும் முறை தொடர்பாக கருத்து பரிமாறிக் கொள்ளப்பட்டது.

கையளிக்கப்பட்டது. ஆகையால் உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் முன்னர் ஜனாதிபதி தமது கருத்தை தெரிவிக்க அவகாசம் வழங்கப்படவில்லை. அதில் உள்ள குறைபாடுகளை சுட்டிகாட்டினார் என்பதற்காக ஜனாதிபதி சமாதான முயற்சிகளை எதிர்க்கிறார் என அர்த்தம் கொள்ளக் கூடாது என்றும் ஜனாதிபதியின் பேச்சாளர் கூறினார்.

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது தொடர்பாக ஜனாதிபதி தமது கருத்துக்களை தெரிவித்து விட்டார். இனி சமாதான முயற்சிகளை தொடர்ந்து முன் எடுத்துச் செல்ல ஜனாதிபதி முழுப் பங்களிப்பையும் செலுத்துவார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை ஜனாதிபதி எதிர்க்கிறார் என்று கூறுவதில் எந்த வித உண்மையும் இல்லை. உடன்படிக்கையில் உள்ள குறைபாடுகள் தவறுகள் என்பவற்றை மாத்திரமே அவர் சுட்டிக் காட்டினார். என்று அவர் சொன்னார்.

சந்திரிகா நேரத்துக்கு ஒன்று சொல்லுபவர்.

அவர் எந்த நேரம் என்ன

இறுதியில் பல பாராளுமன்றத்துக்கே அதிகாரம் உண்டு என்பதை ரணில் நைசாகப் புரிய வைத்து வருகிறார்.

ஜே.வி.பியைத் தான் சந்திரிகா நம்பினார். பல்கலைக்கழக மாணவரையும் பாடசாலை மாணவர்களையும் றோட்டக்குக் கொண்டு வரப் போவதாக ஜே.வி.பியினர் திங்கட்கிழமை அவரைச் சந்தித்த போது கயிறு கொடுத்துள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர் வெறும் ஆர்ப்பாட்ட வீரர்கள். றோட்டுக்கு குறுக்கே படுக்கத்தான் அவர்கள் லாயக்கு.

அவர்கள் வெறும் ஆர்ப்பாட்ட வீரர்கள். கொழும்பு பல்கலைக்கழக வாசலில் செவ்வாக்கிழமை நடந்த

சம்பவம் இது.

நூறு மாணவரும் மாணவியரும் பேர் நிறுத்த ஒப்பந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். சிலர் தெருவுக்கு குறுக்கே படுத்தனர்.

வாகன நெருக்கடி ஏற்பட்டது.

ஒரு பிரபல வர்த்தகர் காரை விட்டு இறங்கினார். மாணவர்களை அழைத்து "எதற்கு ஆர்ப்பாட்டம் செய்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

"யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை எதிர்த்து"

"அதற்கு நீங்கள் இங்கே ஏன் றோட்டில் படுக்கிறீர்கள்? யுத்த முனைக்கல்லவா போக வேண்டும்"

அப்போது பொலிஸ் சுப்ரீன்டன்ட் ஒருவர் வந்தார் வர்த்தகருக்கு அவரைத் தெரியும்.

"இவர்கள் யுத்தம் தொடரவேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்"

பொலிஸ் இன்ஸ்பெக்டர் மாணவர்களிடம் கேட்டார்.

"உங்களிடம் எத்தனை பேர் ஆதரவு தருவார்கள்"

"ஐம்பதாயிரம் பேர்"

பொலிஸ் அதிகாரி வர்த்தகரின் கைத் தொலைபேசியை வாங்கினார். இராணுவ அதிகாரி ஒருவருக்கு டெலிபோன் செய்தார்.

"இங்கே பல்கலைக்கழக வாசலில் நிற்கிறேன். உடன்படிக்கைக்கு எதிரான மாணவர் தலைவர் ஒருவரும் பக்கத்தில் இருக்கிறார். இராணுவம் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தால் 50 ஆயிரம் வாலிபர்களை தந்து உதவலாம் என்று சொல்கிறார். அவருடன் பேசுகிறீர்களா?" என்று சமூக வேலையாளர் சொன்னார்.

இப்படி கூறியபடியே மாணவர் தலைவன் நின்ற பக்கம் திரும்பினார்.

பாவம் அவரைக் காணவில்லை. அவருக்கு துணையாக வந்த சகாக்களையும் காணவில்லை. எல்லோரும் மறைந்து விட்டனர்.

மாணவிகளும் நிலைமைகளை உணர்ந்து நழுவிவிட்டனர். வீதி ஆர்ப்பாட்டம் புஷ்வாணமானது.

நம்நாடு

www.padippakam.com



### சுயநிர்ணய உரிமை, தாயக தனித்துவத்தை வலியுறுத்தி ஜெனீவாவில் இம்மாதம் 25ஆம் திகதி

# ஈழத் தமிழர்கள் மாபெரும் பேரணி!

ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, தேசிய தனித்துவம் என்பவற்றை வலியுறுத்தி எதிர்வரும் 25ஆம் திகதி ஜெனீவாவில் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது. ஜெனீவாவின் முக்கிய நகர மொன்றில் இருந்து ஆரம்பிக்கும் இந்தப் பேரணி ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் ஐரோப்பிய தலைமை அலுவலகம் வரை நடைபெறும். பிரான்ஸ், இத்தாலி, பிரிட்டன், டென்மார்க், சுவீடன், நோர்வே, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் வசிக்கும் பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் இந்தப் பேரணியில் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழீழ மக்களின் ஏக பிரதிநிதிகள்- தமிழீழ மக்களின் தேசியம், தாயகத் தனித்துவம், சுயநிர்ணய உரிமை ஆகியவை அங்கீகரிக்கப் படவேண்டும் -விடுதலைப் புலிகள் மீதான தடையை இலங்கை அரசும் ஏனைய நாடுகளும் நீக்கவேண்டும்- தமிழீழ மக்களின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடை, மீன்பிடித் தடை போன்றவை முற்றாக அகற்றப்படவேண்டும் - இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்படும்வரை தமிழ் அகதிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவது முற்றாக நிறுத்தப் படவேண்டும்.

மேற்படி கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் பேரணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# பிறப்பறுக்கும் சிவராத்திரி

**அ. சிவானந்தநாதன்**



சிவபெருமான் ஆணாய் பெண்ணாய் தோன்றி எல்லா உயிர்களுக்கும் அருள்புரிகின்றார். எம்பெருமான் முத்தி நிலைக்கு மூலவித்தாக திக்ழ்கின்றார். படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழில்களையும் செய்கின்றார். அதற்கு அப்பாலும் நின்றும் என்றும் நிலையாகவும் உள்ளார். இப்பெருமாள் தன் மெய்யன்பர்களை ஆட்கொள்ள ஆடும் திருவிளையாடல்கள் அற்புதமும் அதிசயமும் ஆகும். 'அவனின்றி ஓர் அணுவும் அசையாது' என்ற நம்பிக்கையோடு இறைவனைப் போற்றி சிவராத்திரியில் வழிபாடு செய்தால் நற்பயன் தோன்றும். சிறப்பாக சிவராத்திரியில் வரும் இலிங்கோற்பவ காலத்தில் இறைவன் எல்லோருக்கும் காட்சியளித்து நல்லருள் புரிகின்றார். மெய்ப்பொருளாகிய இறைவனை இத்தினத்தில் காண்பவர்கள் முத்தியின்பத்தைப் பெறுகின்றார்கள். ஏனையோருக்கு இறைவன் மறைபொருளாக நின்று நல்வழி காட்டுகின்றார். சிறப்பாக நாயன்மார்கள் இறைவனின் திருக்கோலத்தைக் கண்டு முத்தியின்பத்தைப் பெற்றுள்ளார்கள். இதற்கு காரணம் அவன் அருளால் உள்ளத்தில் பரிபக்குவ நிலையைப் பெற்றமையே ஆகும். எனவே நாமும் இறைவனை தூய்மையாக தினமும் வழிபாடு செய்தால் அவன் அருள் நமக்கு துணையாக நின்று அருள்புரியும் என்பது உண்மை.

இறைவனின் திருக்கோலக்காட்சியை திருஞான சம்பந்த சுவாமிகள் 'பிரமாபுரமேவிய பெம்மானிவன்றே' என்று போற்றுவதினால் தெளியலாம். திருநாவுக்கரசு சுவாமிகள் 'கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்' என்று இறைவனைப் போற்றுவதினால் அறியலாம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'பித்தா பிறை சூடி பெருமானே' என்று வாழ்த்துவதினால் உணரலாம். மாணிக்கவாசக சுவாமிகள் 'கண்ணால் யானும்கண்டேன் காண்க' என்று திருவாசகத்தில் அருளியமையால் தெளியலாம். இவ்வாறு பெருமைக்குரிய கருணைக் கடவுளை யாவரும் காணலாம். இதற்குரிய சிறந்த நாளாக மகாசிவராத்திரி விளங்குவதைக் காணலாம். நம்முன்னோர்கள் எவ்வுயிரும் பராபரன்றன் சந்நிதி என்றும் இலங்கும் உயிர் அனைத்தும் ஈசன் கோயில் என்றும் போற்றியதை உணர முடிகின்றது. இறைவனின் சுயம்பு இலிங்கத் தோற்றம் அற்புதமானதாகும். இறைவன் தன் மெய்யன்பர்களுக்கு சிவலிங்கத்தில் தோன்றி முத்தியின்பத்தை நல்கியுள்ளார். இதனால் ஆலயங்கள் இறைவனின் உறைவிடமாக விளங்குகின்றது. திருக்கோயில் அல்லது ஆலயம் என்ற எண்ணம் மனத்தில் தோன்றும் பொழுது முன்நிற்பது ஆதிசிதம்பரம் என்னும் பெருங்கோயிலாகும். இத்திருக்கோயில் உள்ள மூலவர் ஆதிசிவலிங்கம் என்ற பெயுரைக் கொண்டுள்ளது. இப்பெருமானை மகாசிவராத்திரி தினத்தில் தூய்மையாக வழிபாடு செய்தால் அவன் அருள் நமக்கு முன்னின்று சுரக்கும். மகாசிவராத்திரியில் சிதம்பர தரிசனம் கிடைக்கப் பெற்றால் பிறவிப்பயன் நிறைவுபெறும். இத்தலத்தில் உள்ள இறைவனின் ஆனந்த தாண்டவத்தை நேரில் கண்டால் கண்ணீர்மல்லி நிற்கும். மெய்சிலிர்க்கும். உள்ளத்தில் என்றும் காணாத தெய்வீக உணர்வு நிலைபெற்று விளங்கும். பிறவிப்பயன் நோக்கமும் அவன் அருளால் கைகூடும். சிவராத்திரியில் சிதம்பரத் தரிசனம் கோடிபுண்ணியமாகும்.

இறைவனின் திருடனம் ஓயாது நிகழ்வதினால் அண்டங்கள் அனைத்தும் ஆடும் இயல்பினைக் கொண்டுள்ளது. எல்லாவுயிர்களும் செயலற்று வல்லிருளில் மூழ்கிக்கிடக்கும் பேழிக் காலத்திலும் இறைவனின் திருக்கூத்து ஓய்வதில்லை. இதுபெருங்கூத்தாக நின்று மீண்டும் உயிர்களின் தோற்றத்தை உருவாகின்றது. இவ்வாறு ஆடும் இறைவனின் கூத்து குளிப்பு என்ற திருநாமத்தைப் பெற்றுள்ளது. இதனை மாணிக்கவாசக சுவாமிகள் குளிப்புடையானுக்கே சென்றதாய் கோத்தும்பி என்று வரும் அடிகளால் தெளியலாம். இறைவனில் திருக்கூத்தில் சிறிதளவு மாற்றம் ஏற்பட்டால் பெரும்மாற்றங்களை மண்ணுலகில் உருவாக்கும் என்பது உண்மை. இதனைச் செய்யும் ஆற்றல் எம்பெருமானின் திருக்கூத்தில் உண்டு. இவ்வாறுமகிமைக்குரிய பெருங்கடவுளின் திருநடனத்தின் மகிமை

வேதங்களாட மிகு ஆகமமாட
கீதங்களாட கிளரண்டம் ஏழாடப்
பூதங்களாடப் புவன முழுதாட
நாதங் கொண்டானான் ஞானானந்தக்
கூத்தே என்றும்

தத்துவம் ஆடச் சதாசிவம் தானாட
சித்தமும் ஆடச் சிவசக்தி தான் ஆட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் அம்பலக்கூத்தே

என்றும் திருமந்திரத்தில் வருவதினால் அறியலாம்.

இறைவன் ஆடும் கூத்தினை திருஞானசம்பந்த சுவாமிகள் 'நன்னிருணட்டம் தாடுவார்' என்றும் திருநாவுக்கரசு சுவாமிகள் நட்டமாடுவர் நன்னிருகளேமமும் என்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் நன்னிருள் நட்டமதாடல் நவின்றோர் என்றும் மாணிக்கவாசக சுவாமிகள் நன்னிருளில் நட்டப் பயின்றாடும் நாதனே என்றும் வரும்அடிகளால் நன்கு தெளியலாம். இத்தகைய திருக்கூத்தினைக் கொண்ட இறைவன் மாசிமாத மகாசிவராத்திரியில், நடுயாமத்தில் வரும் இலிங்கோற்பவ காலத்தில் காட்சியளித்து மெய்யன்பர்களுக்கு முத்தியை வழங்குகின்றார். எனவே சிவனுக்குரிய சிவராத்திரியில் நாமும் விழிப்பாகஇருந்து அவன் புகழைப் பாடி உள்ளத்தால் போற்றினால் எம்பெருமான் நமக்குத் துணையாக நின்று நல்லருள் தருவார்.

மனிதப் பிறவி மிகச் சிறப்புடையது. நாம்இப்பிறவியில் கண்டதேகாட்சி கொண்டதே கோலம் என்று வாழ்கின்றோம். இது பிறவிப்பயனை நிறைவு செய்யாது. இதனால் நாம் இறைவனை உள்ளத்தால் சிக்கனப்பிடித்து ஒழுகினால் சிறுநெறிகள் சேராமல் காத்து அருள்புரிவார். நமது பழவினைகள் மாறும் வண்ணம் சித்தமலர் அறிவித்து சிவமாக்கி எம்மை ஆட்கொண்டு பிறவாத பேரின்பத்தை நல்குவார். இதனால் மீண்டும் பிறந்து இளைக்கவேண்டிய வாய்ப்பு நமக்கு என்றும் வராது. இறைவன் பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான் என்றும் போற்றப்படுவதினால் உணரலாம். நாம் செய்த வினைப்பயனால் வரும் பிறவியாகிய மலத்தை வேரோடறுக்கும் ஆற்றல் இறைவனுக்கே மட்டும் உண்டு. பிறவியை வேரோடுங்களைந்தாண்டு கொள் என்றும் என்பிறவிக்கருவேரறுத்த பின் யாவரையும் கண்டதில்லை என்றும் என்பிறவியை வேரறுத்துப் பெரும்பிச்சுத் தரும்பெருமான் என்றும் நின்திருவருளால் என்பிறவியைவேரறுப்பனே என்றும் திருவாசகத்தில் வரும் அடிகளால் தெளியலாம். நாம் பெருடங்கடலாகிய பிறவியப்பயனில் இருந்து விடுதலை பெறுவதற்குரிய சிறந்த நாளாகத் திகழ்வது மகாசிவராத்திரியாகும். இத்திருநாளில் இரவும் பகலும் செல்வமாகிய சிவபெருமானை நமச்சிவாய என்னும் மகாமந்திரத்தினாலும் பூசை வழிபாடழ்டினாலும் பக்திப்பாடல்களினாலும் போற்றினால் பிறவிப்பயன் அவன்அருளால் நீங்கப்பெறும்.

உலகிலுள்ள எல்லாத் திருக்கோயில்களிலும் சிவராத்திரிக்குரிய நான்கு யாமச்பூசைகளும் மிகத்தூய்மையாக நடைபெறும் இத்தினத்தில் நாம்வாழும் இல்லங்கள் ஒவ்வொன்றும் தூய்மை பெற்று விளங்குவது அவசியம். இதனை சைவ சமயத்தவர்கள் ஒவ்வொருவரும் மனத்தில் நினிறவாகக் கொள்ளல் வேண்டும். இறைவன் மிகத் தூய்மையானவர். தூய்மைத்தன்மை எங்கு உண்டோ அங்கே இறைவனின் அருள் நிலை பெற்று விளங்கும் என்பது உண்மை. இறைவன் நம்மிடம் எதனையும் எதிர்பார்ப்பது இல்லை. ஆனால் நமது உயர்ந்த அன்பிற்கு இறைவன் எளியவனாக வந்து துணைபுரிகின்றார் என்பது நிச்சயம். மேலும் எம்பெருமான் எல்லா உயிர்களின் முற்பிறவிக்கு எற்ப அருள் நல்கும் தினமே மகாசிவராத்திரியாகும். நமக்கு வழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும், தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனாகிய ஈசனை தலைவனாகிய ஈசனை இத்திருநாளில் வில்வம் இலைகளால் போற்றி வழிபாடு செய்தால் உள்ளத்தில் இன்பம் தோன்றும்.

### பிரபல தமிழ்த் தொழிற்சங்கவாதி எழுத்தாளர், வெளியிட்டாளர் உலக சமாதான மனிதமன்ற செயலாளர் ஐ.தி. சம்பந்தன் தம்பதிகளின் புதல்வன் ஞானானந்தன்- செல்வி பகிரதி திருமணம்



பிரபல தமிழ்ச் தொழிற்சங்க வாதி எழுத்தாளர், வெளியிட்டாளர் உலக சமாதான மனித மன்ற செயலாளர் ஐ. தி. சம்பந்தன் தம்பதிகளின் புதல்வன் திரு ஞானானந்தன் (ஆனந்தன்) செல்வி பகிரதி ஆகியோரின் திருமணம்அண்மையில் கொழும்பில் கப்பிதாவத்தையி பிள்ளையார் விநாயகர் ஆலயத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது. பல சமய சமூக அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டு வாழ்த்துத் தெரிவத்தனர். இலண்டனிலிருந்து கவிஞர் செ. நாகேந்திரன் பத்திரிகையாளர் திரு. போன்பாலசுந்தரம் ஆகியோர் வாழ்த்து மடலை தமிழ் அபிமானி ஈழவேந்தன் விசிப்பதையும் அகில இலங்கை இந்துமாமன்ற பொதுச் செலாளர் திருநீலகண்டன் வாழ்த்து மடலை தம்பதிகளுக்கு வழங்குகிறார்.



படிப்பகம்

www.padippakam.com



# ரத்வத்தைக்கு அடுத்ததாக மறியலுக்குள் போகும் முன்னாள் அமைச்சர் யார்?

முன்னாள்அமைச்சர் அனுருத்த ரத்வத்தை விளக்க மறியலில் தள்ளப்பட்டுவிட்டார்.

இன்னுமொரு முன்னாள் அமைச்சரும் அரச விருந்தினராவாரா?

அரசியல் வட்டாரங்களில் இக் கிசுகிசுப்பு கிளம்பியுள்ளது.

"செய்தியாளர் நிமலராஜன், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் 'சட்டன் ஆசிரியர் ரோஹன ஆகியோர் படுகொலை பற்றிய விசாரணை அறிக்கைகள் இன்னும் இரண்டொரு வாரங்களில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்குக் கொடுக்கப்படும் என்று துப்பறியும் பொலிஸ் வட்டாரம் கிசுகிசுக்கிறது.

அதன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

''செய்தியாளர் நிமலராஜன் கொலை பற்றி முன்பு நடத்தப்பட்ட விசாரணைகள் போலியானவை. விசேட பொலிஸ் குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டது குற்றப் புலனாய்வுப் பிரிவும் அங்கு சென்று தடயங்கள் என்று பலவற்றை உருவி எடுத்து விசாரணை செய்தது. சுமார் பத்துக்கும் மேற்பட்டநீதிமன்ற அமர்வுகளில் கனல் பறந்த விசாரணைகள் இடம் பெற்றன முடிவில் ஒன்றும் நடக்கவில்லை. அதெல்லாம் மக்களை இரு குற்றங்களிலிருந்தும் தப்ப முடியாது என்றே சட்ட வல்லுநர்கள் கருதுகிறார்கள்.

தேர்தல் காலப் படுகொலைகளில் சம்பந்தப்பட்ட 'பவர்' வாய்ந்த ஜனாதிபதியின் மாமனாரையே அமுக்கியபொலிசார் இவர்களை விட்டு வைப்பார்களா? என்றார் சட்டத்தரணி ஒருவர்.

இவ்விடயத்தில் அரசு மௌனம் சாதிப்பதை காரணம் காட்டி அரசு தட்டிக் கழிக்கிறது என்று கூறிவிட முடியாது. அனுருத்த கைது கூட அமைதியாக நடைபெற்ற அதிரடி நிகழ்வுதான். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூரில் இருந்து வந்து திடீரென சட்டமா அதிபரை அழைத்தார். பணிப்புரை வழங்கினார். மிகுதி படிப்படியாக நடந்தேறியது.

பிரதமரின் கவனத்திற்கு இந்த விடயங்களை விரிவாகச் சமர்ப்பிப்பது உள்ளகப் பாதுகாப்பு அமைச்சின்அலகு. இந்த அலகில் அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ். ஜோன் அமரதுங்க ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இவ்வலகு புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தவுடனேயே நிமலராஜன் கொலை தொடர்பாக உடன் விசாரணைகளை மேற் கொண்டு உடனுக்குடன் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்படி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவிட்டிருந்தது.

முக்கியத்துவம் அளித்தார்.

தேர்தல் பணிகளுக்காக தேர்தல் நடைபெறுவதற்கு சில நாட்களுக்கு முன் 15 பேர் கொண்ட இராணுவ வீரர்களையும் அதிகாரி ஒருவரையும் தமக்கு வழங்க வேண்டுமென்ற

**SPOTLIGHT**

வேண்டுகோளை அனுருத்த ரத்வத்தை விடுத்திருந்தார்.

இதன் பின்னணியைக் கொண்டு உடுகம்பொல விசாரணைகளைத் தொடங்கினார். அனுருத்தவின் கோரிக்கையின் பின்பு குருநாகல் போயகம இராணுவ முகாமில் இருந்து 15 பேருக்குப் பதிலாக ஓர் அதிகாரி உட்பட 29 பேர் அனுப்பப்பட்டனர். அவர்களுக்கு 29 துப்பாக்கிகளும் வழங்கப்பட்டன. இவை. ரி 56 ரக துப்பாக்கிகள்.

அவர்களுக்கு தலைமை வகித்த அதிகாரி லெப்டினன்ட் டபிள்யூ.எ.எம்.ஆர்.எம்.விஜயரத்தின. அனுருத்தவின் வேண்டுகோளின்படியே அவர்கள் குருநாகலில் உள்ள தமது முகாமில் இருந்து அனுப்பப்பட்டனர். இந்த இராணுவ வீரர்களில் 15 பேர் நேரடியாக அனுருத்தவின் கீழ் பணிபுரிந்தனர். ஏனையோர் கண்டி இராணவ முகாமுடன் இருந்து இந்த வாகனங்கள் இரண்டும் மீட்கப்பட்டன. இப்போது இந்த வாகனங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றை ஓட்டிய இரு சாரதிகளும் சிக்கினர். அவர்கள் கொடுத்த தகவல்களின் விளைவாக ரி 56 ரக 29 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன.

அடுத்து கொலைகளுடன் சம்பந்தப்பட்ட பலரது பெயர்கள் வெளியாகின. இவர்களில் அனுரத்த ரத்வத்தையின் புதல்வர்களான லொஹானும் சானுக்கவும் அடங்குவர்.

தெல்தெனிய மாஜிஸ்திரட் செல்வி இனோகா ரணசிங்கவிடம் சந்தேக நபர்களான இரு இராணுவ வீரர்களும் அளித்த வாய்மொழி வாக்கு மூலங்கள் இதற்குப் பெரிதும் உதவின.

இந்த நிலையில் அனுருத்தவின் இணைப்பு அதிகாரியான பிரிகேடியர் ஸ்ரீலங்கமுவ என்பவரிடம் பொலிசார் வாக்கு மூலங்களைப் பெற்றனர். இலக்கத் தகடு இல்லாத டிபெண்டர் வாகனத்தைப் பயன்படுத்தியமைபற்றி அவர் கூறினார். இது பற்றிய விளக்கத்தைப் பெற கண்டிக்கு வருமாறு அனுருத்த கேட்கப்பட்டார்.

# அடுத்து வருகிறது நிமலராஜன் வழக்கு: கறுப்பு வானில் வந்து கொலை செய்தவர்கள் தீவுப்பகுதிக்குச் சென்றதிற்கான சாட்சியங்கள் உள்ளன

ஏமாற்ற நடத்தப்பட்ட சோடனைகள்,'' என்றார் அந்த அதிகாரி.

சோடனை என்ற சொல் பொலிஸ் வட்டாரங்களில் பயன்ப:த்தப்படும் வார்த்தை. 'மக்களுக்கு ஒரு கூக்காட்டல். விநாரணை நடத்துவதாக போக்குக் காட்டுதல்.

கொலை நடந்த அன்று நிமலராஜனின் வீட்டுக்கு அருகிலிருந்து விரைந்த கறுப்பு நிற வான் ஒன்று நகரின் மத்திய பகுதிக்குப் போய் அங்கிருந்து தீவுப் பகுதிக்குச் சென்றமைக்குச் சாட்சியங்கள் உள்ளன.

நிமலராஜன் வீட்டருகில் கிடந்த சைக்கிள் விவகாரம் என்ன?

நாரந்தனை விவகாரம்

ஊர்காவல்துறை நாரந்தனையில் தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பினர் தாக்கப்பட்டமை தொடர்பான சந்தேக நபர்களின் பட்டியலில் ஈபி.டிபி நெப்போலியன் இடம் பெற்றிருக்கிறார்.

மற்ற பிரதான சந்தேக நபர்களான ஈபி.டிபியின் மதனராஜா கொஞ்சக் காலம் தலைமறைவாக இருந்து விட்டு நீதிமன்றில் ஆசரணடைந்தார். நெப்போலியன் இன்னமும் சட்டத்துக்கு தண்ணி காட்டிக் கொண்டுதான் இருக்கிறார். நிமரலராஜன் கொலையையும் சேர்த்துத் தன்னை ஒரேயடியாக உள்ளே தள்ளிவிடுவார்களோ என்ற அச்சம் அவருக்கு.

குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும்

அதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்ந்தும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

அவ்விசாரணை பற்றிக் கசிந்த தகவலக்படி நிமலராஜன் கொலை தொடர்பாக முன்னாள் அமைச்சர் ஒருவர் பல மணி நேரமாக விசாரிக்கப்பட்டுள்ளார். நிமலராஜன் கொலை செய்யப்பட்டமை நியாயமானதுஎன்று அவர் சொன்ன கருத்துப் பற்றி பல கேள்விகள் கேட்கப்பட்டனவாம்.

மடவளைப் படுகொலைகள்

மடவளை முஸ்லிம் இளைஞர்களின் படுகொலைகள்பற்றிய விசாரணைகள் கட்டம் கட்டமாக, ஆற அமர நடத்தப்பட்டன. குண்டுகள் துளைத்த வான் பற்றியும் கண்டெடுக்கப்பட்ட துப்பாக்கிகள் ரவைகள் பற்றியும் பொலிசார் ஆராய்ந்த போது படுபாதக் செயல்களைப் புரிந்தவர்கள் யார் என்ற விவரம் பொலிசாருக்கு கிடைத்தது.

காயப்பட்டு கண்டி பேராதனை ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தவர்களிமிருந்தும் ஓரளவு விவரங்களைப் பொலிசார் பெற்றுக் கொண்டனர்.

இராணுவத்தைச் சேர்ந்தோரே இந்தப் பாதகத்தைப் புரிந்தார்கள் என்ற விவரம் வெளியாகியது. பொலிஸ் சுப்ரிண்டன்ட் உடும்பொல மிக முனைப்பாக இருந்து துப்புத் துலக்கும் பணிகளுக்கு இணைக்கப்பட்டனர்.

கண்டியில் உள்ள இரண்டாவது படை அணி முகாமை இவர் சோதனையிட்ட போது அங்கு இருக்க வேண்டிய வீரர்கள் காணப்படவில்லை. போயகம முகாமுக்குச் சென்று கேணல் சமரதுங்காவை உடுகம்பொல சந்தித்து சில தகவல்களைப் பெற்றுக் கொண்டார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் பாதுகாப்புக்கு இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்கள் என்ற பதிவு எங்கும் காணப்படவில்லை.

விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் அலுகம்வெஹர என்னும் இடத்தில் இரண்டு இராணுவ வீரர்கள் ஒளிந்துள்ளனர் என்ற தகவல் கிடைத்தது. மடவளை படுகொலைக்குப் பயன்படுத்திய டிபெண்டர் வாகனத்தின் சாரதியும் அவர்களில் ஒருவர். மற்றவரும் ஒரு இராணுவச் சாரதிதான்.

அவர்கள் கைதானதை அடுத்து இந்தக் கொலைகளுடன் சம்பந்தப்பட்டவை என்று கருதப்படும் பெற்றொலிய கூட்டுத் தாபனத்துக்கு சொந்தமான இரு டிபெண்டர் வாகனங்கள் பற்றிய தகவல்கள் கிடைத்தன.

வாகனங்கள் மீட்பு

ரங்கல என்னும் இடத்தில் அவரோ போகவில்லை. மீண்டும் இரகசியப் பொலிசாரிடம் இந்த விவகாரம் ஒப்படைக்கப்பட்டது.

இரகசியப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் லிண்டன் ரத்னாயக்கா விசாரணைகளை மீண்டும் தொடங்கினார். கடநத 19ம் திகதி இரகசியப் பொலிசார் அனுருத்தவிடம் வாக்கு மூலத்தைப் பெற்றனர்.

கொலைக்கு உடந்தையாக இருந்து சரி செய்தமை உதவி ஒத்தாசை புரிந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் அவர் கைதானார். கடந்த 20ம் திகதி அவர் தெல்தெனிய மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்பட்டார். விசேட பாதுகாப்பின் கீழ் மார்ச் 4ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

சில நாட்களின் பின்னர், 23ம் திகதி, அனுருத்தவின் மகன்களான லொஹான் சானுக்க ஆகியோர் இரகசியப் பொலிசாரிடம் சரணடைந்தனர். இவர்கள் இருவரும் 24ம் திகதி தெல்தெனிய நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு மார்ச் 4 வரை விளக்க மறியலில் வைக்ககப்பட்டனர்.

மார்ந் 4ல் அவர்கள் 18ம் திகதி வரை மீண்டும் வளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

நிமலராஜன் கொலை விசாரணை அடுத்த பரபரப்பு செய்தியாகப் போகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# மண்வாசனை

## வட தமிழீழக் கடிதம்

தமிழீழத்தின் கிழக்குப் பிரதேசம் மூன்று மாவட்டங்களையுடையது. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகியவையே அவை. அவற்றில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இரண்டாவது இடத்தைச் சிங்களவரும் மூன்றாவது இடத்தைத் தமிழரும் வகிக்கின்றனர். திருகோணமலை மாவட்டத்தில் இன்றைய நிலைமைப்படி மூன்று சமூகத்தினரும் கிட்டத்தட்ட சம அளவினராக வாழ்கின்றனர்.

இத்தகைய சன பரம்பலின் விளைவாக கிழக்கு மாகாணம் பல சிக்கல்களைக் கொண்டுள்ளது. அவற்றில் முக்கியமானது தமிழ் - முஸ்லிம்கள் உறவு. மேலோட்டமாக எல்லாரையும் சேர்த்து தமிழ் பேசும் மக்கள் என்று கூறிப் பிரச்சினையை மூடி மறைக்க முடியாது.

முஸ்லிம் மக்களை தனி இனத்தவராகக் கொள்ள முடியாவிட்டாலும் மதம் காரணமாக அவர்கள் தனி இயல்புகளை வாழ்க்கை முறையை அடையாளத்தை கொண்டுள்ளனர். அதைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும்.தந்தை செல்வா அதை 1952 திருமலை மகாநாட்டிலேயே ஏற்றுக் கொண்டார். முஸ்லிம்கள் தனித்துவத்தைப் பேனுவதற்கான ஆட்சி முறையை அமைக்க வேண்டும் என்று திருமலை மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசை ஆரம்பித்த அஷ்ரப் முஸ்லிம்களுகென தனி மாகாணம் உருவாக்கப்பட வேண்டும் கோரினார். பின்பு இறங்கி வந்து தமிழீழத்துக்குள் முஸ்லிம்களுக்கென்று ஒரு சுயாட்சி அலகு உருவாக்கப்பட வேண்டு மென்று சொன்னார்.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்குப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கப்படவுள்ள இச் சந்தர்ப்பத்தில் தமிழரும் முஸ்லிம்களும் தமக்கிடையேயுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றைக் காணுதல் அவசியம். இல்லாவிட்டால் அரசியல் அரசியல் பேச்சுக்களின் போது முஸ்லிம்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி குட்டையைக் குழப்புவார்கள்.

அத்தகைய குழப்ப வேலையைச் செய்வதற்கு ஜெயவர்தனவும் சந்திரிகாவும் முஸ்லிம்களை பயன்படுத்தி வந்துள்ளனர். சிங்களவரும் முஸ்லிம்களும் தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் விளைவாகப் பாதிக்கப்பட்டு வந்திருப்பதாகவே சிங்களவர் உலகுக்கு காட்டிவந்துள்ளனர்.

### கரிகாலனுடன் சந்திப்பு

இச் சூழ்நிலையில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பிரமுகர்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு. அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர். கரிகாலன் அடுத்த வாரத்தில் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

இது தொடர்பாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிவாசல்களின் முக்கியஸ்தர்கள் கல்விமான்கள். சட்டத்தரணிகள் ஆகியோர் சாய்ந்தமருது பள்ளிவாசலில் கூடி ஒரு கலந்துரையாடலை நடத்தினர். இக்கலந்துரையாடலின் போது முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் தற்போதுள்ள பிரச்சினைகள் பற்றியும் போர் நிறுத்தம் பற்றியும் இதற்கு முஸ்லிம்களின் பங்களிப்பு பற்றியும் இதற்கு முஸ்லிம்களின் பங்களிப்புகள் என்ன என்பது பற்றியும் பல்வேறு கோணங்களிலிருந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசயில் பொறுப்பாளர் கரிகாலனை சந்திப்பதற்கு முன்பு ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மேலும் பல முஸ்லிம் புத்திஜீவிகளையும் அழைத்து கலந்துரையாட ஏற்பாடுகள் செய்யப்படவிருக்கின்றன.

இதேவேளை வடகிழக்கு முஸ்லிம் பேரவை வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் நிலைப்பாடும் நிரந்தர சமாதானமும் என்பது தொடர்பாக ஆறு அம்சங்களைக் கொண்ட கோரிக்கை ஒன்றை தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு அனுப்பியிருந்தது.

பேரவையின் தலைவர் வைத்திய கலாநிதி எஸ்.எம்.அப்துல்ஜப்பார் இதனை அனுப்பியிருந்தார். அதன் பிரதிகள் பிரதம மந்திரி ஜனாதிபதி. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### விடுதலைப் புலிகளால் ஏற்பட்ட நன்மைகள்!

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சுதந்திரமாக நடமாட ஆரம்பித்துள்ள இந்தக் குறுகிய காலப்பகுதியில் மட்டக்களப்பில் குறிப்பிடத்தக்க பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன.

மட்டக்களப்பு வாழ் தமிழ் சமூகத்துக்குள் ஊடுருவி. பலவிதமான சமூகச் சீர்கேடுகளை உருவாக்கி வந்த விடயங்களில் புலிகள் தரப்பும் புலிகளுடன் தொடர்புள்ள சில சக்திகளும் முழு மூச்சுடன் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளன.

கடந்த காலங்களில் மட்டக்களப்பில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த பல பிரதேசங்களில் பலவிதமான சமூகச் சீர்கேடுகள் இடம் பெற்றுவந்தன. கசிப்பு உற்பத்தி, குழந்தைத் தொழில், விபசாரம், கொள்ளை, கப்பம், லஞ்சம், மற்றும் கலாசாரச் சீர்கேடுகள் என்று பலவிதமான சீர்கேடுகள் இப்பிரதேசங்களில் பரவலாக இடம்பெற்று வந்தன.

இவைகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்கு பிரதேசவாசிகள் சமூக அமைப்புகள் பத்திரிகைகள் என்பன பலத்த முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும் இப்பிரச்சினைக்கு பிடிவைத் தேடித்தருவதில் அவைகளால் முழுமையாக வெற்றிபெற முடிவில்லை.

இது போன்ற சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவர்களுக்கு பக்கத்துணையாக அரச படைகள் மற்றும் அரசின் கைக்கூலிகள் தொடர்ந்தும் இருந்து வந்ததன் காரணத்தினால் சமூக நல் ஒழுக்கம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் பயனற்றவையாகவே இருந்துவந்தன.

தற்போழுது புலிகளின் கைகள் இப்பிரதேசங்களில் வலுவடைய ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்து இதுபோன்ற நடவடிக்கைகள் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுகின்றன.

### கசிப்பு உற்பத்தி

மட்டக்களப்பு, வாழைச்சேனையிலுள்ள கண்ணன் கிராமம், பேய்த்தாழை போன்ற பிரதேசங்களில் கசிப்பு உற்பத்தி கடந்த காலங்களில் மிகவும் அதிகரித்துக் காணப்பட்டது. இப்பிரதேசங்களில் வசிப்பவர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் கசிப்பு உற்பத்தியை ஒரு குடிசைக் கைத்தொழிலாகவே மேற்கொண்டு வந்தார்கள். கசிப்பு அருந்தியதால் இப்பிரதேசங்களில் பலர் மரணம் அடைந்ததுடன் பல குடும்பங்கள் நடுவீதிக்கும் வந்திருந்தன.

இப்பிரதேசங்களில் கசிப்பை ஒழிப்பதற்கென்று வீதிகளில் இறங்கிய சமூர்த்தி உத்தியோகத்தர்கள் சமூக அமைப்புகள் என்பன வெற்றிகரமாகச் செயற்படுவதற்கு இராணுவம் தடையாக இருந்தது. அரச படைகளுடன் இணைந்து இயங்கிவந்த தமிழ் அமைப்பொன்று சம்பந்தப்பட்ட சமூக அமைப்பைச் சேர்ந்தவர்களை தமது முகாமுக்கு அழைத்து கசிப்பு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்று நேரடியாகவே எச்சரிக்கை விடுத்தது.

திடீரென்று இப்பிரதேசங்களில் ஓர் ஆச்சரியமான மாற்றம் தற்போது ஏற்பட்டுள்ளது. எவரும் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடக் கூடாது என்று அண்மையில் புலிகள் உத்தரவு பிறப்பித்தததைத் தொடர்ந்து இப்பிரதேசங்களில் கசிப்பு உற்பத்தி முற்றாகவே இல்லாதொழிந்துள்ளது. புலிகளின் இந்த உத்தரவைத் தொடர்ந்து இப் பிரதேசங்களில் கசிப்பு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுவந்த சுமார் நூற்றுக்கும் அதிகமான குடும்பங்கள் இந்தச் சமூக விரோத தொழிலைக் கைவிட்டு வேறு தொழிலுக்கு திரும்பியிருப்பது இங்குள்ள பலரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது.

தமிழ் கலாசாரத்திற்குப் புறம்பாக தவறான உறவுகள் வைத்திருப்பது. விபசாரத்தில் ஈடுபடுவது, சிறுவயதில் திருமணம் முடிப்பது, என்று மட்டக்களப்பு தமிழ் பிரதேசங்களில் நிலவிவந்த பலவிதமான கலாசார சீர்கேடுகள் தற்போது ஒரு கட்டுக் கோப்புக்குள் வர ஆரம்பித்துள்ளன.

புலிகளின் மகளிர் படையணியினர் சமூகச் சீர்திருத்தங்கள் பற்றி ஆலோசனைகளை வழங்கி வெளியிட்ட துண்டுப் பிரசுரங்கள் மற்றும் அவர்கள் மேற்கொள்ள ஆரம்பித்திருக்கும் ஒரு சில நடவடிக்கைகள் என்பவற்றைத் தொடர்ந்து மட்டக்களப்பில் சில மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்துள்ளன.

அதேபோன்று தெருக்களில் பெண்களை கேலிசெய்வதும் குறைந்துள்ளது.

சாதாரணமாக நேரம் கடந்தே வேலைக்கு வந்து பழகிப் போன அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஆசிரியர்கள் தற்போது சரியான நேரத்துக்கு தமது கடமைகளுக்கு சமூகம் அளிக்கின்றனர்.

இப்பிரதேசங்களில் அடிக்கடி கேள்விப்படும் திருட்டுகள். வழிப்பறிகள், கப்பம் வாங்குதல் போன்ற செய்திகளை தற்போது இங்கு கேட்கமுடியவில்லை.

இப்பிரதேச வாழ் மக்களை மிரட்டிவந்த தெருச் சண்டியர்கள், தமிழ் குழு உறுப்பினர்கள், அரசியல் இடைத்தரகர்கள் வியாபாரிகள் போன்றோா தற்போது தமது வால்களைச் சுருட்டி வைத்துக் கொண்டுள்ளார்கள்.

எமது தமிழ் சமூகத்தில் இடம்பெற்றுவந்த சீர்கேடுகளைக்களைந்தெறிவதில் தற்போது புலிகள் காண்பிக்க ஆரம்பித்திருக்கும் அக்கறை மட்டக்களப்பு வாழ் தமிழ் மக்களது ஒட்டுமொத்த ஆதரவையும் பெற்றுவருகிறது.

தமிழ் மக்கள் எதிர்பார்த்து வந்த சமூகவிடுதலையின் வாசல் மிக அருகே தெளிவாகத் தெரிவதாக மட்டக்களப்பு மக்கள் தமக்குள் பேசிக்கொள்ள ஆரம்பித்துள்ளார்கள்.



www.padippakam.com



# அரசாங்க-விடுதலைப் புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்த்து முறிவடையச் செய்யும் முயற்சியில் சந்திரிகா-கதிர்காமர்-ஜே.வி.பி தீவிரம்!

அரசாங்க-விடுதலைப் புலி புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்த்து முறிவடையச் செய்யும் முயற்சியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீவிரமாக செயற்பட ஆரம்பித்துவிட்டார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான சக்திகளை ஒன்று திரட்டுவதில் அவரும் அவரின் ஆலோசகருமான முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

உள்ளூரில் ரணில் விக்கிரமசிங்கவையும் விடுதலைப் புலிகளையும் எதிர்க்கும் சக்திகளை ஒன்றுதிரட்டும் வேலையை சந்திரிகாவே செய்கிறார். வெளியூரில். புலிகளுக்கெதிரான சக்திகளைத் திரட்டுவதில் கதிர்காமர் ஈடுபடுகிறார்.

ஜே.வி.பியுடன் கூட்டு

திங்கட்கிழமை அவர் ஜே.வி.பி தலைவர்களை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்தார். ஜே.வி.பியின் பொதுச் செயலாளா தில்வின் சில்வா. பாராளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ச. அனுரா திசநாயக்க ஆகியோர் அச்சந்திப்பில் பங்கு பற்றினார்.

அவர்களை வரவேற்ற சந்திரிகா புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தோற்கடிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

"நான் வெளிப்படையாக என் எதிர்ப்பைக் காட்டவோ மக்களைத் தூண்டிவிடவோ முடியாத நிலையில் உள்ளேன். நீங்கள் தான் அதைச் செய்ய வேண்டும்" என்று சந்திரிகா சொன்னார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை வெற்றி பெற்றால் ரணிலின் கை ஓங்கிவிடும் என்பதில் இரண்டு தரப்பினரும் இணக்கம் கண்டனர்.

"நீங்கள் உங்களால் இயன்ற யாவற்றையும் செய்யுங்கள் நான் என்னாலான தடைகளைப் போட்டுகிறோன்" என்று உத்தரவாதமளித்தார் சந்திரிகா.

பௌத்த பிக்குகளையும் மாணவர் சமூகத்தினையும் தூண்டிவிடும் தமது திட்டத்தை ஜே.வி.பியினர் விவரித்தனர்.

சிங்கள மக்களிடையே எதிர்ப்பலையை உருவாக்கி விட்டுத் தன் அதிகாரத்தை உபயோகித்து ஒப்பந்தத்தை ரத்துச் செய்வதற்கு முயலுவதே சந்திரிகாவின் திட்டமாகவுள்ளது.

அதைச் செய்யும் போது அவர் தான் சமாதானத்தை ஆதரிப்பவராக முகமூடி அணிய வேண்டும். சமாதானத்துக்காக யுத்தம் என்ற பழைய முகமூடியை ஒத்த முகமூடி.

"புலிகளோடு சமாதானம் செய்ய நான் முயன்றேன். சிங்களவரின் நன்மையைப் பாதுகாத்துக் கொண்டு அந்தச் சமாதானத்தை ஏற்படுத்த முயன்றேன். அதற்கு புலிகளை இணங்க வைப்பதற்காக இராணுவ ரீதியில் அவர்களைப் பலவீனப் படுத்த முயன்றேன். அதைத் தொடருவரை விட்டு புலிகள் பலமான நிலையில் இருப்பதாக ஏற்றுக் கொண்டு ரணில் பேச்சுவார்த்தை நடத்துகிறார்" என்று சந்திரிகா சுட்டிக் காட்டினார்.

எதிர்ப்பு வளர்ப்பு

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினைத் திரட்டுவதில் சந்திரிகா இப்பொழுது ஈடுபட்டு வருகிறார்.

சந்திரிகாவும் ஜே.வி.பியும் சிங்கள தீவிரவாத சக்திகளும் கூட்டாகச் சேர்ந்து ரணில் மீதும் நோர்வேக்கு எதிராகவும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகிறார்கள். அக்குற்றச் சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் நிர்ப்பந்தத்தை ரணிலுக்கு அமைச்சர் ஜீ.எல்.பீரிசுக்கும் உண்டாக்கி வருகிறார்கள்.

அவர்களின் குற்றச் சாட்டுகள்.

- சந்திரிகாவுக்கு ஒப்பந்த நகலை பிரபாகரன் கையெழுத்திட்ட பின்பே ரணில் காட்டினார். இதற்கு அரசாங்கம் பதிலளிக்கவில்லை.

- ஒப்பந்தத்தின் மூலம் புலிகள் சில பகுதிகளைத் தம் கட்டுப் பாட்டில் வைத்திருப்பதை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.

அதற்கு அரசாங்கம் அளித்த பதில்: உண்மை நிலை அது தான்.

- கட்டுப்பாட்டுக் கோட்டை ஏற்றுக் கொண்டதால் காஷ்மீரிலுள்ளது போன்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் பதில்: யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கான ஒழுங்குக்கு இத்தகைய எல்லை நிர்ணயம் தேவை. காஷ்மீர் எல்லை இரண்டு

**Expose**
**நம்நாடு செய்திப்பீட**
**ஆய்வு**

நாடுகளுக்கு இடையிலான ஒப்பந்தம். இது அப்படியல்ல.

- நோர்வேக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தில் பதில்: சமாதானத்தை அடைவதற்கு அது தேவைப்படுகிறது. நோர்வேயில் செயல்பாட்டைக் கட்டுப்படுத்தினால் சமாதானம் கிட்டாது.

இந்தியாவில் கதிர்காமர்

சர்வதேச ஆதரவைத் திரட்டும் பணியின் முதல் கட்டமாக கதிர்காமர் இந்தியா போயுள்ளார்.

முதலில் சென்னைக்குப் போன அவர் முதலமைச்சர் ஜெயலலிதாவை சந்தித்து நீண்ட நேரம் பேசினார். புலிகளுடன் அரசு செய்துள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக அவர் மகாநாயக்கரைச் சந்தித்துப் பேசினார்.

"புலிகளுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் வடக்கு-கிழக்கிலிருந்து அரசுத் துருப்புக்கள் வாபஸ் பெறப்படும் சாத்தியம் இருக்கிறதா?" என்று மல்வத்தை பீடாதிபதி ரம்புக்வெல ஸ்ரீ விபஸ்ஸி மகாநாயக்க தேரர் வினாவினார்.

"வடக்கு-கிழக்கிலிருந்து அரசுத் துருப்புக்கள் எக்காரணம் கொண்டும் வாபஸ் பெறப்படமாட்டா. தற்போதைய படை நிலைகள் பலப்படுத்தப்பட்டு துருப்புக்கள் உஷார் நிலையில் வைத்திருக்கப்படும்." என்று பிரதமர் உறுதியளித்தார்.

வடக்கு - கிழக்கில் படையினரின் உஷார்நிலையை எந்தநேரமும் பேணும்படி தேரர் பிரதமரைக் கேட்டுக்கொண்டார்.

"நாட்டுக்கும் நாட்டின் சமாதானத்துக்கும் இது இறுதிச் சந்தர்ப்பம். இதை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். போரா. சமாதானமா என்பதைத் தீர்மானிப்பதற்கு இந்த ஆண்டு இறுதியானது. அதை உணர்ந்து அரசு செயற்படும். சமாதானப் பேச்சு முயற்சிகளுக்குச் செயல்வடிவம்

## நீங்கள் உங்களால் இயன்ற யாவற்றையும் செய்யுங்கள் நான் என்னாலான தடைகளைப் போடுகிறோன்-சந்திரிகா

ஜனாதிபதிக்குள்ள ஆதங்கத்தையும் சொல்லி வைத்திருக்கிறார்.

பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இலங்கை அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்கு எங்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஆதரவு தெரிவித்து வருகிறது. ஆனால் பிரதமர் ரணில் கையாண்டு வரும் நடைமுறைகளையிட்டுத் தான் ஜனாதிபதி கவலைப்படுகிறார். இப்பொழுது அவர் புதுடில்லி சென்றிருக்கிறார். மத்திய அரசின் தலைவர்களுடனும் இது பற்றி பேசியுள்ளார்.

இதனை தெரிவித்துத் தான் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் காமன்வெல்த் தலைவர்களின் மகாநாட்டில் கலந்து கொண்டுள்ள நமது வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ இதே மகாநாட்டில் பங்கு பற்ற வந்திருக்கும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங்கை சந்தித்து புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றி விரிவாக எடுத்துரைத்திருக்கிறார். விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வருவதற்கு இந்த உடன்படிக்கை வழிவகுத்திருக்கிறது என்று சொன்னதோடு இலங்கை அரசின் இந்த முயற்சி வெற்றியளிக்க இந்தியாவின் காத்திரமான பங்களிப்பையும் கோரினார்.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா முதலமைச்சராக பதவியேற்பதற்கு பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்து ஜனாதிபதி கடிதமொன்றை பாக்ஸ் மூலம் அனுப்பி வைத்திருக்கிறார்.

உடன்படிக்கையை எதிர்க்கும் ஜே.வி.பி தோழர்கள் ஜனாதிபதியை சந்தித்து உடன்படிக்கையிலுள்ள பாதகமான சரத்துக்கள் குறித்து விரிவாக பேசியிருக்கிறார்கள்.

உடன்படிக்கைக்கு எதிரான பிரசாரத்தை எவ்வாறு முன்னெடுப்பது பற்றித்தான் பேசினர்.

உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் ஜனாதிபதியுடன் கலந்தாலோசிக்காமல் பிரதமர் கைச்சாத்திட்டது தவறு என்ற பிரசாரம் அவ்வளவாக எடுபடவில்லை. அதனால் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டை நிர்ணயிக்கும் அதிகாரம் நோர்வேயைச் சேர்ந்த கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு ஏற்பட்டிருக்கிறது. இது நாளடையில் இந்தியாவின் காஷ்மீர் பிரச்சினையாக மாறும் அபாயம் உண்டு என்று கூறி எதிர்ப்பிரசாரத்தை முடுக்கி வருகிறார்கள்.

சதியை முறியடிக்க

சந்திரிகாவின் சதியை முறியடிப்பதில் ரணில் கவனம் செலுத்துகிறார். திங்கட்கிழமை கண்டியில் கொடுக்கப்படும் என்றும் தேரரிடம் பிரதமர் கூறினார்.

புலிகள் குற்றச்சாட்டு

விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டைமுறியடிப்பதற்கு சந்திரிகாவும் கதிர்காமரும் ஒன்றிணைந்து சதி செய்வதாகப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்..

"சமாதான உடன்பாட்டில் உள்ள விதிகள் நாட்டின் இறைமைக்கும் பாதுகாப்புக்கும் தீங்குவிளைவிப்பதாகஜனாதிபதி முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் அர்த்தமற்றவை அபத்தமானவை" என்று பாலசிங்கம் சொன்னார்.

"இப்போர்நிறுத்த உடன்படிக்கையை ஐரோப்பிய ஒன்றியம். பொதுநலவாய நாடுகள். இந்தியா. அமெரிக்கா உட்பட அனைத்துலக சமூகமும் வரவேற்றுப் பாராட்டிவரும் இவ்வேளையில் சந்திரிகா அம்மையார் மட்டும் கடும் எதிர்ப்புத் தெரிவிப்பது வேடிக்கையாக இருக்கிறது. இந்தத் தவறான. பொறுப்பற்ற போக்கை கைப்பிடிப்பதால் சமாதான முயற்சிக்கு அவர் பங்கத்தை விளைவிக்க எத்தனிக்கிறார்.

"எரிச்சல். தேவையற்ற அச்சங்கள் போன்ற காழ்ப்புணர்வில் இருந்தே அவரது கண்டனங்கள் வெளிப்பாடுகாண்கின்றன." என்று அவர் தெரிவித்தார்.

"சமாதான உடன்பாட்டில் உள்ள விதிகள் நாட்டின் இறைமைக்கும். பாதுகாப்புக்கும் தீங்கு விளைவிப்பதாக ஜனாதிபதி குமாரதுங்க முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித அர்த்தமும் இல்லை. 'முன்னணிப் பாதுகாப்பு நிலைகள். 'எல்லைக்கோடுகள்'. 'கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள். 'எல்லைச் சோதனைச்சாவடிகள் என்ற பதங்களை மிகவும் நுணுக்கமாகப் பரிசோதனை செய்து இருதரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே உடன்பாட்டு ஆவணத்தில் அவை பாவிக்கப்பட்டிருக்கின்றன. அத்தோடு இப்பதங்கள் வடக்கு - கிழக்கின் களநிலை யதார்த்தத்தை பிரதிபலிப்பதாகவும் உள்ளன. இச்சொற்களை. பகை உணர்வைத் தூண்டிவிடும் ஆபத்தான பதங்களாக சந்திரிகா அம்மையார் கருதுகிறார். நாட்டின் ஸ்திரநிலைக்கு பங்கம் விளைவிக்கும் கோட்பாடுகளாகவும் குறிப்பிடும் அவர் காஷ்மீர் நெருக்கடியை இதற்கு ஒப்புவமையாகக் காட்டுகின்றார். இந்த வாதங்கள் எல்லாமே அர்த்த மற்றவை மிகவும் அபத்தமானவை. என்றார் பாலசிங்கம்.

# கொமன் வெல்த் நாடுகளின் மகாநாட்டில் இலங்கை ஜனாதிபதி கலந்தகொள்ளாதது ஏன்?

EXPOSE நம்நாடு செய்திபீட

இது ஜோக்கல்ல. உண்மையில் நடந்தது.

அவுஸ்திரேலியாவில் போன வாரம் கொமன் வெல்த் நாடுகளின் தலைவர்கள் மகாநாடு நடந்தது. அதற்குப் போவதாக முதலில் அறிவித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பின்புபோகவில்லை.இலங்கையில் தனக்கு அவசர அரசியல் பணிகள் இருப்பதால் தான் வரமுடியவில்லை என்று அவுஸ்திரேலிய பிரதம மந்திரி ஜோன் ஹோர்வார்ட்டுக்கு பாக்ஸ்அனுப்பிவிட்டு போவதைத் தவிர்த்துக் கொண்டார்.

அங்கே அரசியல் தலைவர்களுக்கு அளித்த விருந்தின் போது ``இலங்கை ஜனாதிபதி ஏன்வரவில்லை?'' என்று வேறொரு நாட்டுத் தலைவர் கேட்டார்.

ஜோன் ஹோவேட் அளித்த பதில் இது: அவருக்கு அங்கே அவசர அரசியல் வேலையுள்ளது. எல்ரிரிஈயுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளார்கள். அதை அமுல் செய்வதில் ஈடுபட்டுள்ளார்.``

அத்துடன் அவர் நிற்கவில்லை. மகாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டுமென்று தான் பிரார்த்திப்பதாகவும் சமாதானத்தை ஏற்படுத்த இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எடுத்து வரும் முயற்சிக்கு தன் வாழ்த்தைத் தெரிவிப்பதாகவும் ஹோர்வேர்ட் கூறினார்.

குழப்புவதற்கு

சந்திரிகா போகாமல் விட்டது சமாதான ஒப்பந்தத்தை அமுலாக்குவதற்கல்ல. அதைக் குழப்புவதற்கு.

வரக்காபொலையில் தன் கட்சிக்காரர்களிடையே பேசும் போது புரிந்துணர்வு ஒப்பந்தம் தோற்று விடும் என்றும் புலிகள் ஒரு போதும் பேச்சுவார்த்தைக்கு வர மாட்டார்கள் என்றும் ரணிலின் அரசாங்கம் இரண்டு மாதங்களில் கவிழ்ந்துவிடும் என்றும் அவர் சொன்னார்.

அதன் பின்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விமர்சித்து பிரதமருக்கு நீண்ட கடிதமொன்றை அனுப்பினார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையிலுள்ள சில ஷரத்துக்கள் நாட்டின் இறைமைக்கே வேட்டு வைப்பதாக இருக்கிறது என்று அவர் அக் கடிதத்தில் எழுதினார்.

அக்கடிதத்தில் உடன்படிக்கையிலுள்ள சில நல்ல விஷயங்களையும் சொல்லியிருக்கிறார். அதே மாதிரி சில ஆட்சேபகரமான விஷயங்களையும் புட்டு வைத்திருக்கிறார்.

இராணுவ தளபாடங்கள் அல்லாத பொருட்கள் தங்கு தடையின்றி புலிகளின் பகுதிக்கும். புலிகளின் பகுதிகளில் இருந்து ஏனைய பகுதிக்கும்செல்வதற்கும் மீன்பிடித் தடைகளை தளர்த்துவதற்கும் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் நல்லவை. இது குறித்து திருப்திப்படுகிறேன் என்று கடிதத்தின் ஆரம்பத்தில் தெரிவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினைக்கு யுத்தத்தால் நிலையான தீர்வு கண்டு விட முடியாது. எனது நிலைப்பாடு இது தான். இதனால் தான் 1994இல் பதவிக்கு வந்ததும் அனுசரணையாளர் போன்று எவரின் உதவியும் இன்றி யுத்த நிறுத்த உடன்படிக்கையொன்றை பிரபாகரனுடன் செய்து கொண்டேன். நாங்கள் இருவரும் அதில் கையொப்பம் இட்டோம்.

பிரபாகரனுடன் நடத்திய கடிதத் தொடர்புகள் போன்ற விபரங்களையும் ஜனாதிபதி தமது கடிதத்தில் நினைவூட்டியிருக்கிறார். அரசியலமைப்பை திருத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண தான் எடுத்த முயற்சிக்கு உதவுவதாக ஐ.தே.க தந்த வாக்குறுதி பின்னர் பாராளுமன்றத்தில் குறிப்பிட்ட அரசியல் சீர்திருத்தம் சமர்ப்பிக்கபட்ட பொழுது ஐ.தே.க அடித்த பல்டி பற்றியும் ஜனாதிபதி கடிதத்தில் சொல்லியிருக்கிறார்.

சமாதானத் தீர்வு தான் என்து பற்று. இணக்கத்தோடு கையாளப்பட்ட இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையின் நோக்கத்தை ஏற்றுக் கொள்கிறேன். இந்த உன்படிக்கையின் வெற்றிக்கு எங்கள் இருவரின் நெருங்கிய ஆலோசனைகளும் கூட்டு ஒத்துழைப்பும் இணக்கப்பாடும்அவசியம். உடன்படிக்கை தோற்றால் எழும் பின்விளைவுகள் பற்றியும் நாங்கள் விழிப்பாக இருக்க வேண்டும். உடன்படிக்கை வெற்றிகரமாக அமுலாவதற்கு நாங்கள் பாடுபட வேண்டும். இது விஷயத்தில் நீங்களும் உங்கள் கட்சியினரும் கருத்தொருமித்த அரசாங்கமொன்றை முன்னெடுப்பதற்கு நான் எடுக்கும் முயற்சிகளுக்கு நேர்மையாகவும் விசுவாசமாகவும் எனக்கு ஆதரவை தரவேண்டும். இதனை நீங்கள் செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன். ``என்று ஜனாதிபதி குறிபிப்பிட்டிருக்கிறார்.

குறைகள்

புலிகளின் படகுகளின் நடமாட்டத்தை கடற்படையினர் கண்காணிக்கலாம் வழிமறித்து சோதிக்கலாம் ஆனால் ஆயுதக்கடத்தலில் ஈடுபடுகிறார்கள்என்று சந்தேகம் எழுந்தால் கூட தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்று உடன்படிக்கையில் ஒரு ஷரத்து உள்ளது. ஆயுதங்களைக் கடத்தி புலிகள் யுத்த நிறுத்தத்தை மீறுவதாக புகார் எழும் போது அந்த புகாரைக் கண்டறிவது யார்? கண்காணிப்புக் குழுவுக்கு தலைமை தாங்கும் வெளிநாட்டுக்காரரே! இது ஒரு திருப்திகரமான ஏற்பாடாக தெரியவில்லை. என்று குறைகாணப்பட்டிருக்கிறது.

புலிகளின் கட்டுபாட்டுப் பகுதி எல்லை எது? இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதி எல்லை எது என்று தீர்மானிப்பதும் ஏதாவது யுத்த நிறுத்தம் மீறல்கள் நடந்தால் அதனால் எழும் தகராறுக்கு தீர்வு காண்பதும் வெளிநாட்டுப் பிரஜை ஒருவரின் தலைமையிலான கண்காணிப்புக் குழுவே சுதந்திர இலங்கையின் வரலாற்றில் இலங்கை மண்ணில் எல்லைகளை நிர்ணயிப்பதற்கான அதிகாரம் ஒன்று வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு வழங்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை.

இதுவும் எமது இறைமைக்கு பங்கம் விளைவிப்பதாகவே இருக்கிறது என்று ஜனாதிபதி குறைகண்டிருக்கிறார்.

ஜே. வி.பி.யையும் சிங்கள தீவிரவாதிகளையும் தூண்டிவிடும் பணியை சந்தமிரிகா செய்கிறார்

# யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு எதிராக பிரசாரத்தை முன்னெடுக்க ஜே.வி.பியின் மாணவர் பேரவை அமைப்பு

ஜே.வி.பி.

யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு எதிராக பிரசாரத்தைமுன்னெடுக்க மாணவர் பேரவையொன்றை ஆரம்பித்திருக்கிறது ஜே.வி.பி. தாய்நாட்டைப் பாதுகாக்கும் மாணவர் இயக்கம் என்று இதற்கு பெயர் சூட்டியிருக்கிறது.

இந்த இயக்கத்தில் பல்கலைக்கழகளில் செயல்படும் மாணவர்கள் அமைப்புகளை மட்டுமல்ல பாடசாலைகள் கல்லூரிகளில் இயங்கும் மாணவர் சங்கங்களையும் இணைப்பதற்கான முயற்சிகளில் இப்பொழுது இறங்கியுள்ளனர். இதற்கு முன்னோடியாக தென் பகுதி எங்கும் இந்த பேரவையின் பேரால் சுவரொட்டிகள் ஒட்டும் இயக்கமொன்றை நடத்தியுள்ளனர். உண்டியல் மூலம் பணமும் பாடசாலைகள் தோறும் திரட்டப்படுகின்றன.

நாட்டை விடுதலைப் புலிகளுக்கு தாரை வார்ப்பதற்கு அரசு முயல்கிறது. இதற்கு எதிராகக் கிளர்ந்து எழாவிட்டால் சிங்கள இனத்துக்கு பெரும் பாதகம் வந்து சூழும் எனவே சிங்கள இனத்தை பாதுகாக்கவரும் பிக்கு மாணவர்கள் உட்பட தாய் நாட்டை நேசிக்கும் சகல மாணவர்களும் இந்த பேரவையில்இணைவார்கள் என்று இதன் ஏற்பாட்டாளர்கள் நம்புகின்றனராம். நவீன ஏகாதிபத்தியவாதிகளான மேல் நாட்டார் வகுத்துக்கொடுத்த அட்டவணைப் படி இந் அரசு செயல்படுகிறது. போன அரசு நாட்டின தேச வளங்கள் சிலவற்றை பல்தேசிய கம்பெனிகளுக்கு கையளித்தது. எஞ்சிய வளங்களை இந்த அரசு இந்த மேற்குலக பல்தேசிய தருவதற்கான விருப்பத்தை வெளிக்காட்டியிருக்கிறது. இப்பொழுது நாட்டையே பிரித்து பிளவுபடுத்தும் உடன்டிக்கையொன்றை புலிகளுடன் செய்து கொண்டிருக்கிறது என்றும் இந்த ஏற்பாட்டாளர்கள் மாணவர் மத்தியில் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட வேளை ஜே.வி.பி. இவ்வாறான தொரு நடவடிக்கையைதான் செய்தது. பல்கலைக்கழக மாணவ இயக்கங்களை ஒன்று திரட்டி வேறு பல அமைப்புகளையும் இணைத்து உடன்படிக்கைக்கு எதிரான போராட்டத்தை நடத்தியது.

ஜே.வி.பி.யின் இன்றைய இந்த முயற்சிகளை பார்க்கும் பொழுது சரித்திரம் மீண்டும் திரும்புகிறதோ என்று தான் நினைக்கத் தோன்றுகிறது.

## உடன்படிக்கைக்கு எதிரான மனுக்களை மேல்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்பு!

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களை மேன் முறையீட்டு நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராக ஜே.வி.பி தாக்கல் செய்துள் மனு மீதான விசாரணை எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை தடை செய்யுமாறு உத்தரவிடவேண்டும் என்று கோரி ஜே.வி.பி. இந்த மனுவினைத் தாக்கல் செய்துள்ளது. இந்த மனுவில் அரசியல் யாப்பின்படி புரிந்துணர்வு உடன்படிக்கையில் பிரதமர் கைச்சாத்திட முடியாது என்றும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. ஜே.வி.பியின் மனுவில் பிரதிவாதிகளில் ஒருவராக புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனும் குறிப்பிடப்பட்டள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிராக சிஹல உறுமய கட்சி தாக்கல் செய்த மனு தொடர்பில் தமது அவதானிப்புக்களை எதிர்வரம் 14ம் திகதி தாக்கல் செய்யுமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

3 bed house
FOR RENT
3 Bedroom house available for rent
Eastham & clayhall
Call: 020 8552 2613

www.padippakam.com



# ஒருபுறம் சாடல் மறுபுறம் ஒத்துழைப்பு

ஒருபுறம் சாடல் மறுபுறம் ஒத்துழைப்பு

சணப் பித்தம் சணம் வாதம் என்று சொல்வார்கள். சனாதிபதி சந்திரிகாவும் இப்படித்தான் நடந்து கொள்கிறார்.

ஒரு புறம் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருவருக்கும் இடையில் கைச்சாத்தான புரிந்துணர்வு உடன்படிக்கையை மிகவும் கடுமையாக விமர்ச்சித்து கட்சி மேடைகளில் அனல் பறக்கப் சனாதிபதி சந்திரிகா பேசுகிறார். தான் உயிருடன் இருக்கும்வரை நாடு பிளவுபடவோ அல்லது தமிழீழம் என்ற ஒரு நாடு உருவாகவோ அனுமதிக்கப் போவதில்லை என்று சபதம் செய்கிறார். மறுபுறம் புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுல் செய்யப்படுவதற்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதாகவும் சொல்கிறார்.

ஒப்பந்தத்தில் உள்ள ஓட்டைகளைக் கண்டு பிடித்த சனாதிபதி பின்வரும் விதிகள் தனது கோபத்தைக் கிளறுவதாகச் சொல்கிறார்.

(1) விதி 12 வி.புலிகளுக்கு எதிராகக் கடற்படைத் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதை தடைசெய்கிறது. இதனால் வி.புலிகள் ஆயுதங்களைக் கடத்துகிறார்கள் என்று கடற்படை சந்தேகப்பட்டால் கடற்படை அதனைத் எதிர்த்தாக்குதல் மூலம் தடுக்க முடியாது போய்விடும். எதிர்த்தாக்குதல் மூலம் இல்லாமல் தற்பாதுகாப்புத் தாக்குதல் மூலம் ஆயுதக் கடத்தலை முறியடிக்கலாம் என்று ரணில் விக்கிரமசிங்க வாதிக்கலாம். எதற்கும் இந்த விதியை எதுவித ஐயத்திற்கும் அப்பால் பொருள் புரியும்படி தெளிவாக எழுதியிருக்க வேண்டும்.

(2) விதி 2.7 தடையேதும் இல்லாமல் பொதுமக்கள் பயணம் செய்வதற்கும், பொருட்களைக் கொண்டு செல்வதற்கும் ஏதுவாக இணைக்கப் பட்டிருக்கும் (ஆ) பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள அவரவர் கட்டுப்பாட்டுக் கோடுகள் ஓரமாகவே சோதனைச் சாவடிகளை அமைத்தல் வேண்டும் என்கிறது.

விதி 2.7இல் சொல்லப்படும் கட்டுப்பாட்டுக் கோடுகள் என்ற சொல்லாட்சிதான் சனாதிபதி சந்திரிகாவின் நெற்றிக் கண்ணை திறக்க வைத்துள்ளது. நாடு சுதந்திரம் அடைந்தபின்னர் ஒரு வெளிநாடு இப்படியான ஒரு கோட்டை ஸ்ரீலங்காவின் மண்ணில் கீறுவதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பது இதுதான் முதல் தடவை என்று சனாதிபதி சந்திரிகா பொரிந்து தள்ளியிருக்கிறார். அது உண்மைதான்.

நாடு சுதந்திரம் அடைந்தபோதும் அதன் பின்னரும் இலங்கைத் தீவு ஒன்றாகவே இருந்தது. ஆனால் இப்போது நிலமை வேறு. இதனை சனாதிபதி சந்திரிகாவே (முன்னர்) ஒப்புக் கொண்டுள்ளார்.

சந்திரிகா மீது நாட்டைப் பிரிக்க முயல்கிறார் என்று 1994-95 காலகட்டத்தில் எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியபோது, ''நாட்டை நான் பிரிக்க வேண்டிய அவசியம் இல்லை. நாடு ஏற்கனவே பிரபாகரனால் பிரிக்கப்பட்டு விட்டது'' என்று பதில் இறுத்தார். ஆனால் அதனை அவர் இப்போது வசதியாக மறந்து விட்டுப் பேசுகிறார்.

இந்தக் கோடுபற்றி விளக்கம் அளித்த வி.புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் இந்த கட்டுப்பாட்டுக் கோடுகள் வட-கிழக்கில் உள்ள பிரதேச யதார்த்தத்தையே *(Ground reality)* பிரதிபலிக்கிறது என்று கூறியுள்ளார். அதுதான் உண்மை.

இலங்கைத் தீவின் வட-கிழக்குப் பிரதேசம் பெருமளவு வி.புலிகள் கட்டுப்பாட்டிலும் சிறிதளவு சிங்கள இராணுவத்தின் கட்டுப்பாட்டிலும் இருப்பதாலேயே கட்டுப்பாட்டுக் கோடுகள்பற்றி ஒப்பந்தத்தில் சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சனாதிபதி சந்திரிகா தனது கட்சிக்காரர்கள் மத்தியில் பேசும்போது எதிர்த்துப் பேசிவிட்டு, பின்னர் வெளிநாடுகளது கண்டனத்தில் அல்லது முகச் சுளிப்பில் இருந்து தப்ப ஒப்பந்தத்திற்கு தனது முழு ஒத்துழைப்பு இருக்கும் என்று தனது செயலாளர் அல்லது பேச்சாளர் மூலம் சொல்ல வைக்கிறார்.

எதிர்காலத்தில் எப்படியோ தற்போது இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்ப்பது நாட்டில் வீசும் அமைதி அலை வீச்சுக்கு எதிரான நீச்சல் ஆகும். - அதனை சனாதிபதி சந்திரிகா புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொண்டால் அவருக்கும் நல்லது நாட்டுக்கும் நல்லது.

## அரசியல் சிறைக் கைதிகள்

வி.புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் எழுதப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் வி.புலிகளுக்குச் சாதகமாகவும் அரசுக்குப் பாதகமாகவும் இருப்பதாக தென்னிலங்கையில் மக்கள் முன்னணிக் கட்சியும், ஜனதா விமுக்தி பெரமுனையும் பரப்புரை செய்து வருகின்றன. நேர்வே அரசு வி.புலிகள் பக்கம் இருப்பதாகவும், நோர்வே ஸ்ரீலங்காவை விட்டு வெளியேற வேண்டும் என்றும் தீவிரவாத பவுத்த தேரர்கள் கொழும்பில் நோர்வே தூதரகத்திற்கு முன்பாக நின்று ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். ஆனால் நோர்வே நாட்டுக்கு எதிரான குற்றச்சாட்டில் உண்மை இல்லை.

ஒப்பந்தத்தில் தமிழ்மக்கள் நலன்களும் முழுதாகப் பாதுகாக்கப் படவில்லை. குறிப்பாக மூன்று விடயங்களைச் சொல்லலாம்.

## இது நக்கீரன் பக்கம்

(அ) தமிழ் அரசியல் கைதிகளது விடுதலைபற்றி ஒப்பந்தம் மவுனம் சாதிக்கிறது.

தடுத்து வைக்கப்பட்டோரை *D-Day+ 30* நாட்களுக்குப் பின்னர் குடும்ப அங்கத்தவர்கள் மட்டும் பார்க்க அனுமதிக்கப்படுவார்கள் என்பதை மட்டும் ஒப்பந்தம் சொல்கிறது.

(ஆ) அத்து மீறிய சிங்களக் குடியேற்றம்பற்றி ஒரு குறிப்போ அல்லது தீர்வோ ஒப்பந்தத்தில் இல்லை.

(இ) பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் தேடுதல் வேட்டையில் ஈடுபடுதல், கைதுசெய்தல் இனிமேல் நடைபெற மாட்டாது (விதி 3.12) என இரு சாராரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் இது வட கிழக்குக்கு மட்டுமா அல்லது முழுத் தீவுக்குமா என்பது தெளிவாக்கப்படவில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் ஆண்டுக் கணக்கில் சிறையில் வாடுகிறார்கள். ஒரு கைதி கடந்த 11 நான்கு ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறார். இந்த அரசியல் கைதிகளுக்கு எதிராகக் குற்றச் சாட்டுக்கள் தாக்கல் செய்யப்படவும் இல்லை நீதி மன்றத்தில் அவர்கள் நிறத்தப்படவும் இல்லை.

இவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காகக் கைது செய்து சிறையில் தள்ளப்பட்டவர்கள்.

ஆனால் பரிதாபத்துக்கு உரிய இந்த இளைஞர்கள் வி.புலிகளாலும், அரசியல் கட்சிகளாலும் 'அம்போ' என்று கைவிடப் பட்டுள்ளார்கள். இதனால் களுத்துறைச் சிறையில் வாடும் இவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள்.

போர் காரணமாக வட-கிழக்கைவிட்டு வெளியேறிய சிங்களக் குடும்பங்களை அப்பகுதிகளில் மீளக் குடியமர்த்த சிங்கள வீரவிதான நடவடிக்கை எடுத்து வருகிறது. மீளக் குடியமர்ப்பு என்ற போர்வையில் புதிய சிங்களக் குடியேற்றம்கூட இடம்பெறலாம்.

சிங்களக் குடியேற்றந்தான் தமிழினத்தை எதிர்நோக்கும் தலையாய தலையிடியாகும். மேலே சுட்டிக் காட்டியதுபோல அதுபற்றி ஒப்பந்தத்தில் ஒரு தீர்மானமும் இல்லை. போர் காரணமாக வட-கிழக்குக்கு வெளியே இடம்பெயர்ந்த தமிழர்கள் கெதி என்ன? அவர்கள் மீளக் குடியமர்த்தப்படுவார்களா? ஆம் என்றால் எப்போது குடியமர்த்தப் படுவார்கள்?

## செல்வி ஜெயலலிதா

செல்வி ஜெயலலிதா மூன்றாவது முறையாக தமிழ்நாட்டின் முதல்வராகப் பதவி ஏற்றுள்ளார். ஆடம்பரத்துக்குப் பெயர்போன ஜெயலலிதா நல்லநாள் பார்த்து, பல இலட்சங்களை செலவழித்து, தடல்புடலாக பதவி ஏற்கும் வைபவத்தை சென்னைப் பல்கலைக் கழக அரங்கில் நடாத்தியுள்ளார். பண்டாரம் காலி என்று ஒரு புறம் சொல்லிக் கொண்டு மறுபுறம் இப்படியான நிகழ்ச்சிக்கு காசை ஏன் கரியாக்க வேண்டும் என்பது புரியவில்லை. புளுங்கலும் அவர்களுடையது கோழியும் அவர்களுடையது என்று இருக்க வேண்டியதுதான்.

உப நடிகர் நடிகைகளுக்கு முன்வரிசையில் இடம் ஒதுக்கிய ஜெயலலிதா எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அன்பழகனுக்கு ஆறாவது வரிசையில் இடம் ஒதுக்கி தனது அற்ப புத்தியைக் காட்டிக் கொண்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பது மக்களாட்சியல் முதல்வருக்கு அடுத்த செல்வாக்குள்ள பதவி. அதன் காரணமாகத்தான் ஒரு அமைச்சருக்குக் கொடுக்கக் கூடிய சம்பளம் எதிர்க்கட்சித் தலைவருக்கும் வழங்கப்படுகிறது. அந்தப் பதவிக்குரிய மரியாதை அரசாள்வோர் கொடுக்க வேண்டும் என்பது ஒரு மரபாகும்.

ஆனால் அந்த மரபை, பெருந்தன்மையை அரிதாரம் பூசி தமிழ்நாட்டுக்கு நடிக்க வந்த ஜெயலலிதாவிடம் எதிர்பார்க்க முடியாது. அது வீணான எதிர்பார்ப்பு.

ஜெயலலிதாவின் புதிய அமைச்சரவை 27 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பத்துப் பேருக்கு கல்தா கொடுத்துவிட்டு புதிதாக 13 பேருக்கு அமைச்சர் பதவி, பெரும்பாலும் சாதி அடிப்படையில், வழங்கப்பட்டுள்ளது.

வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அமைச்சர்கள் ''அம்மா தந்தா. அம்மா எடுத்துக் கிட்டா'' என்று எந்தச் சூடு சொரணை இல்லாமல் சொல்லிக் கொண்டு போய்விட்டார்கள்.

காமராசர், அண்ணா தமிழ்நாட்டின் முதலமைச்சர்களாக இருந்த காலத்தில் பத்துப் பேருக்குக் குறைவான அமைச்சரவையே செயல்பட்டது.

முதல்வராகப் பதவி ஏற்ற ஜெயலலிதாவை அமைச்சர்கள் சாஷ்டாங்கமாக 'தொபுக்' என்று நிலத்தில் விழுந்து காலைத் தொட்டுக் கும்பிட்டார்கள். காலைத் தொட்டுக் கும்பிடக் கொடுத்து வைக்காதவர்கள் ஜெயலலிதாவின் கட்-அவுட், சுவரொட்டிகளை விழுந்து கும்பிட்டார்கள். தமிழ்நாட்டு மக்கள் மந்தைகளிலும் கேவலமாக இருக்கும்வரை ஜெயலலிதாவிற்கு ஒரு குறையும் வராது.

பிலிப்பைன்ஸ் நாட்டு சனாதிபதி யோசேப் எஸ்றடோ *(Joseph Estrado of Philippines)* அரச பணத்தை கொள்ளையடித்தார் என்ற குற்றச் சாட்டில் கம்பி எண்ணுகிறார். பேரு நாட்டின் முன்னாள் சனாதிபதி பியூஜி மோரி *(Fuji Mori)* நீதிமன்ற விசாரணைக்குப் பயந்து யப்பானுக்கு ஓடி அங்கு ஒளித்திருக்கிறார். தாய்லாந்து நாட்டின் பிரதமர் தாக்சின் சினவத்ற *(Thaksin Shinawatra)* ஊழல் குற்றச்சாட்டில் இரகசிய போலிசாரினால் விசாரிக்கப்படுகிறார்.


ஆனால் 60 கோடி ரூபா வரிப்பணத்தை ஏப்பமிட்டு ஊழல் இராணி என்ற பட்டத்தைப் பெற்ற ஜெயலலிதா சுதந்திரமாக தமிழ்நாட்டின் முதல் அமைச்சராகப் பவனி வருகிறார்!

## முடிந்தால் சிரியுங்கள்

பிரயாணி : உங்களுக்கு எனது வாழ்த்துக்கள் இன்று சரியான நேரத்திற்கு பிளாட் பாரத்திற்கு புகைவண்டியை கொண்டு வந்து விட்டீர்கள்.

எஞ்சின் சாரதி: யோவ்! வைத்தெரிச்சலை கிளராதையா! இது நேற்றைக்கு வரவேண்டிய வண்டி தாமதமாக இன்று வந்து சேர்ந்துள்ளது

பிரயாணி: ........???????



படிப்பகம்

# S.SATHA & CO

We are specialist firm to conduct Immigration and Crime work under the Community Legal Service

We also specialist in Commercial and Residential Conveyancing including Licensing and Planning

Additional areas covered:
Family & Children matters

LEGAL AID FRANCHISE
A QUALITY SERVICE
Approved by The Legal Aid Board

Community Legal Service
Specialist Help Point
Immigration
Crime

*REPRESENTATION*
*AT*
*POLICE STATION, HOME OFFICE, AIRPORT ETC*

**PRINCIPAL PARTNER S.SATHANANTHAN**
MANAGING PARTNER DR. S. BHASKAR - PARTNER RAHMAN

378, HIGH STREET NORTH, MANOR PARK, LONDON E12 6PH
TEL: 020 8471 9484 FAX: 020 8471 9485

***WE ARE ALWAYS AT YOUR SERVICE***




நியாய விலைக்கு லண்டனில் முன்னணி வகிக்கும் தங்க நகை மாளிகை

**இப்போது புதுப் பொலிவுடன் எண்ணற்ற தெரிவுகளுடன் காட்சியளிக்கிறது**

## றோயல் ஜுவலரி

**உங்கள் எண்ணங்கள் எங்கள் கைவண்ணத்தில்**

- ✡ மனம் கவரும் தங்க நகைகள்
- ✡ 22 கரட் உத்தரவாதம்
- ✡ தாலி - பொன்னுருக்கல் வசதிகள்
- ✡ உங்கள் தேவைகளுக்கேற்ற வண்ண நகைகள் பிரத்தியேகமாய் தயாரிக்கும் வசதிகள்
- ✡ சாத்திர விதிகளுக்கேற்ப நவரத்தின மோதிரங்கள் ஓடர்களுக்குச் செய்து கொடுக்கப்படும்

புன்னகையோடு சேர்ந்த பொன்னகைபெற

## ROYAL JEWELERY

**287 High Street North, East Ham,
London E12 6SL
Tel: 020 8 472 55 00
Fax: 020 8 472 56 87**

www.padippakam.com



# சர்வதேசத்தைக் கவர்ந்த பொங்குதமிழ்

வட தமிழீழக் கடிதம்

வவுனியாவில் வெள்ளிக்கிழமை நடந்த பொங்கு தமிழ் நிகழ்ச்சி ஆங்கில சிங்கள ஊடகங்களையும் சர்வதேச சமூகத்தையும் கவர்ந்துள்ளது.

வவுனியாவில் திரண்ட மக்கள் வெள்ளத்தினால் வவுனியா நகரமே செயலிழந்து விட்டதாக அவை சுட்டிக் காட்டின. எனினும் சிங்கள ஊடகங்கள் வெள்ளத்தை கட்டுப்படுத்த தடுமாறியது.

மக்கள் வெள்ளத்தின் மத்தியில் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டதும் பொங்கு தமிழ் பிரகடனம் செய்து வைக்கப்பட்டது. பொங்கு தமிழ் பிரகடனத்தின் போத உணர்ச்சி பொங்கியது. அனைவருமே எழுந்து நின்று கைகளை உயர்த்தி பிரகடனம் செய்தனர்.

## வவுனியாவில் ஐங்கரவூர் கண்ட எழுச்சிக் கோலம்

அந்த நிகழ்ச்சியை புலிகளின் நிகழ்ச்சியாகவே படம் பிடித்து காட்டின.

அந்த நிகழ்ச்சியில் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உந்துதல் கொடுத்தமை சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கத் தவறவில்லை.

வெள்ளிக்கிழமை நடந்த பொங்கு தமிழ் நிகழ்ச்சி ஊரூராய் ஒருவாரமாக நடந்த விழாக்களின் இறுதிக் கட்டமே என்பதை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைக்க வேண்டும்.

ஊரூராய் பொங்குதமிழ் என்ற நிகழ்ச்சி வவுனியாவில் ஐங்கரவூர் என்ற கிராமத்தில் அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரால் நடத்தப்பட்டது.

அதை ஒரு முன்னுதாரன நிகழ்ச்சி என்று தான் கூற வேண்டும்.

இந்த நிகழ்ச்சியில் தமிழரின் வாழ்வு எவ்வளவு துன்பகரமானது என்பதை வெளிப்படுத்துவதற்காக சில விடயங்களை அரங்காற்றுகை மூலமாக வெளிப்படுத்தினர். சேற்றுக்குள்ளும் இருட்டுக்குள்ளுமே தமிழரின் அவல வாழ்வு உள்ளதென வெளிப்படுத்தப்பட்ட இந்த நிகழ்வு மூலம் பார்ப்போர் சிந்திக்கக் கூடியதாக இருந்தது.

இருட்டுக்குள் வாழ்வு

சேற்றுக்குள்ளிருந்து தப்ப முயல்வேரை அதற்குள்ளிருப்போரே வெளியே செல்ல விடாது தடுப்பது பொன்ற நிகழ்ச்சி உண்மை நிலையுணர்த்துவது. இருட்டுகள் வாழ்வு என்பதைக் காண்பிப்பதற்காக பாடசாலை மண்டபமொன்றை இருட்டாக்கி அதற்குள் செல்வோர் பார்க்கக் கூடிய வகையில் சமூக சம்பவங்கள் பெண்கள் மீதான அடாவடித் தனங்கள் அடக்கு முறைகள் காரணமின்றி கைது செய்யப்பட்டவர்கள் சிறைகளில் மிக மோசமான முறையில் சித்திரவதை செய்யப்படுவது போன்ற காட்சிகள் மனதை நெகிழவைத்தன.

வவுனியா தபால் நிலையக் குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்ட சே.விந்தன் அரங்கச் செயற்பாட்டுக் குழுவைச் சேர்ந்தவர். அவர் தனது அனுபவத்தை பார்வையாளர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

குண்டு வெடிப்பின் போது பாதிக்கப்பட்டது போன்ற ஒப்பனையை செய்து கொண்டு அவர் தனது அனுபவ பகிர்வை மேற்கொண்டது பலரையும் சந்திக்கவைத்தது. இந்த மாதிரியான நிகழ்ச்சி மூலம் மக்களை விழிப்படையச் செய்ய முடியுமென்பதை அது தெளிவுபடுத்தியது. மக்கள் விழிப்படைய வேண்டுமென்பதையும் உணரவைத்தது.

இருட்டு வாழ்வுக்குள்ளிருந்து வெளியே வந்ததும் அனுமதிப்பத்திரம் பெற்று வாழ்வதென்ற கொடுமைகள் பற்றி எடுத்துக் கூறும் நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. இதன் மூலம் மக்களுக்கு பழக்கப்பட்டுப் பேன அனுமதிப்பத்திரம் பெறும் செயலிலிருந்து விடுபடுவதென்பது எப்படியென்பதை போதியளவாக எடுத்துக் கூறவில்லை போலிருந்தது.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக அனைத்துத் தடைகள் துன்ப துயரங்களையும் தாண்டி ஒளிமயமான வாழ்வுக்குள் தமிழர்கள் செல்ல வேண்டும் என்பதை மனதில் இருத்திக் கொண்டு அரங்கச் செயற்பாட்டுக்குழுவினர் ஒளிபரப்பிய இடத்தில் பாடல்களைப் பாடி ஆனந்தமான நடனமொன்றையும் ஆடினார்கள்.

மண்டபத்திற்குள் வைத்தே இந்த நிகழ்ச்சியை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. மக்கள் தொகை அதிகரித்ததால் ஐங்கரவூர் பாடசாலை மைதானத்தில் மக்களுடன் கலந்துணர்வை பகிர்ந்துகொள்ளும் வகையில் ஒளிமயமான ஆனந்தமான நிகழ்ச்சி நடைபெற்றது.

இதன் மூலம் எமக்கு என்ன தேவை என்பதை மக்களே வாய்திறந்து கேட்கும் வகையில் மக்கள் உணர்ந்து கொள்ளும் வகையில் இந்த இறுதி நிகழ்ச்சி அமைக்கப்பட்டது. இடையிடையே மக்களிடம் உரையாடப்பட்டது. மக்களும் தமக்குள்ள சந்தேகங்களை கேள்வியாக்கினர்.

மக்கள் மத்தியிலிருந்து மு.கணேசன் என்பவர் உணர்வெழுச்சியுடன் தமிழர் விடுதலை பெற வேண்டுமென உரையாற்றியதுடன் உணர்வுபூர்வமான கவிதையொன்றையும் வாசித்தார். அந்தக் கவிதையில் வவுனியாவில் உள்ள அனுமதிப் பத்திர வழங்கல் அகதி முகாம் வாழ்வு என பல விடயங்கள் படம் பிடித்து காட்டப்பட்டன.

பேராசிரியர் சிதம்பரநாதனும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஐங்கரவூர் கிராம மக்களுக்கு சுயநிர்ணய உரிமை பற்றி தெளிவான விளக்கமொன்றை வழங்கினார்.

அரசாங்கச் செயற்பாட்டுக் குழுவினரின் இந்த முயற்சி கிராமரீதியாக மக்கள் தமது சுதந்திரம் விடுதலை சுயநிர்ணய உரிமை என்பன பற்றி புரிந்து கொள்வதற்கும் போராடுவதற்கும் துணையான ஒன்று என்பதை வெளி உலகம் நிச்சயம் அறிந்து கொள்ளும். எம்மிடையே நாம் தெளிவுகொள்ள வேண்டும் என்பதை எடுத்துரைக்கும் இந்த நிகழ்வு போன்றவை இன்றைய காலத்தில் அவசியமான ஒன்று. தேவையான ஒன்று.

இதன் மூலம் எமது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்திக் கொள்ள வலுக் கொண்ட மக்கள் அணியணியாகத் திரள வேண்டும். சமாதானம் அமைதி பற்றி வாய்ப்பேச்சுடன் இரோம் என்பதை இதன் மூலமே வெளிப்படுத்தலாம்.

வெள்ளிக்கிழமை நிகழ்ச்சி

வெள்ளிக்கிழமை பொங்கு தமிழ் எழுச்சி வைபவததின் இறுதி நிகழ்வு வவுனியா நகரசபை மைதானத்தில் நடந்தது.

இதில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அலை அலையாக கலந்து கொண்டனர்.

கடந்த 25ம் திகதி முதல் 1ம் திகதி வரை வவுனியாவில் பொங்கு தமிழ் எழுச்சி வாரம் அனுஷ்டிக்கப்பட்டது. இதன் இறுதி நாள் நிகழ்வு வெள்ளியன்று நடைபெற்றது.

இறுதி நிகழ்ச்சி நடைபெற்ற வவுனியா நகர சபை மைதான வாயிலில் புலிகளின் தலைவர் பிரபாகரனின் புகைப்படம் பெரிய அளவில் வைக்கப்பட்டிருந்ததுடன் இரு மருங்கிலும் புலிகள் இயக்கத்தின் சின்னங்கள் காணப்பட்டன.

வீதிகளில் புலிகளின் எழுச்சிப் பாடல்கள் ஒலிபரப்பட்டன. ஆட்டோக்கள் வாகனங்களில் ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டு புலிகளின் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன. எங்கள் தமிழ் இனம் தூங்குவதோ சொந்த மண்ணில் வாழ்வுக்கு ஏங்குவதோ என்று தொடங்கும் பாடல்களும் பாடப்பட்டன. வடக்கில் குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கெடுபிடிகளினாலும் முன்னைய அரசின் அடாவடித் தனங்களினாலும் அடக்கி வைக்கப்பட்ட தமிழர்களின் உணர்ச்சி பொங்கு தமிழாக வெடித்தது. பாடசாலை மாணவர்கள் முதல் வயோதிபர்கள் வரை உணர்ச்சி வெறியைக் காண்பித்தனர்.


வவுனியாவின் புறபகுதிகளின் ஐந்து இடங்களில் இருந்து எழுச்சி ஊர்வலங்கள் ஆரம்பமாகின. பூந்தோட்டம் வேப்பங்குளம். தாண்டிக்குளம். மூன்று முறிப்பு சைவ பிரகாச மகளிா வித்தியாலயம் ஆகியவற்றிலிருந்து ஆரம்பமான ஊர்வலங்களின் உணர்ச்சி ததும்ப நகரசபை மைதானத்தை வந்தடைந்தன.

தமிழர் பண்பாட்டைக் காண்பிக்கும் வகையில் மேள தாளத்துடனும் காவடி நடனத்துடனும் ஊர்வலங்கள் நடைபெற்றன. புலிகளின் தலைவர் பிரபாகரனின் படத்தை பலரும் ஊர்வலத்தில் தாங்கியிருந்தனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் வெள்ளம் ஒவ்வோரு ஊர்வலத்திலும் கலந்து கொண்டன. ஊர்வலங்கள் ஒவ்வொன்றும் 2.3 கிலோ மீற்றர் நீளத்திற்கு நின்றமை குறிப்பிடத்தக்கது. வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமான ஊர்வலங்கள் நகரசபை மைதானத்தை வந்தடைய ஆறு மணிக்கு மேலாகி விட்டது.

உலகத்தில் உள்ள எல்லா இனங்களில் நாமும் ஒரு இனம் நாங்கள் உயர்ந்தவர்கள். நாமெல்லாம் நிமிந்து நிற்போம் என்று மேடையில் நின்ற குழுவினா கோஷம் எழுப்பியபோது மைதானத்தில் இருந்த ஆயிரக்கணக்கான மக்கள் உணர்ச்சிகள் வெளிக்காட்டப்பட்டன. எங்கும் உணர்ச்சி வெள்ளம் இளைஞர்களும் யுவதிகளும் உணர்ச்சி வெள்ளத்தில் எங்கள் தாய்நாடு ஈழம். ஈழமே எமது நாடு என்று கோஷங்களை எழுப்பியபோது அனைவருமே மெய்சிலிர்த்து நின்றனர்.

எமது மண்ணில் உள்ள அசுத்தங்களை தீயிட்டு கொளுத்துவோம்



பிரபா எங்கள் உயிர்

எங்கள் தலைவர் பிரபாகரன் அவரே எங்கள் உயிர் என பாடசாலை மாணவர்களும் மக்களும் கோஷம் எழுப்பினர். எங்கும் புலிகளின் தலைவரின் படமும் அவரின் பெயர் உச்சரிப்புக்களுமே காணப்பட்டன. உலகத் தமிழினமே எண்ணிப்பார் நீ உறங்கினால் யார் உன்னை மன்னிப்பார் எமது சுய உரிமை தடை நீக்கம் மட்டுமா? பிரபாகரனே எங்கள் தலைவன் தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா. தமிழனே சுயநலனுக்காக கௌரவத்தை விற்காதே. தமிழன் உரிமை உள்ளவன் வட-கிழக்கு அவனது சொந்த நிலம் சுதந்திரமாக வாழ விடு உலகே உணர்ந்தெழு ஈழத்தில் நாம் படும் வேதனைகளை அறிந்து புலிகளின் தடையை நீக்கு. அவர்களே எமது பிரதிநிதிகள் என்னும் வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஊர்வலத்தில் சென்றவர்கள் பரவலாக தாங்கியிருந்தனர்.

பேனா ஏந்தும் எங்கள் கைகளில் துப்பாக்கி ஏந்த வைக்காதே சங்கத் தமிழா பொங்கி எழு தமிழனின் உரிமையைக் கேட்டிட நாம் எல்லோரும் உயர்ந்து நிற்போம். எங்கள் தலைவன் பிரபாகரன் எமக்கு வேண்டும் சுயநிர்ணய உரிமை அரசே விடுதலைக்காக போராடும் புலிகள் பயங்கரவாதிகளா? எனும் கோஷங்களை ஊர்வலத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் எழுப்பிய போது மெய்சிலிர்த்தது.

உணர்ச்சி பொங்க ஊர்வலத்தினர் கோஷங்களை எழுப்பியமை வவுனியா எங்கும் பெரும் ஒலியாகக் கேட்டது. எங்கும் தமிழ் முழக்கம் எதிலும் தமிழ் முழக்கமாக இருந்தது.

நகர சபை மைதானத்தில் அலையலையாக மக்கள் கூடினர். மைதானம் நிரம்பி வழிந்தது. வீதிகளிலும் மக்கள் வெள்ளம் வவுனியாவே மக்கள் என கூறி இராணுவத்தினர் அணியும் பாதணியை போன்று தயாரிக்கப்பட்ட உருவம் எரியூட்டப்பட்டது. அதனை பார்வையிட மக்கள் கூட்டமும் முட்டி மொதியது.

மேடையில் இரண்டு பெரிய பிரபாகரனின் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. மேடைக்கு கீழ் பிரபாகரனின் படம் ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது. இந்த வைபவத்தில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ. சந்திரசேகரன், வன்னிப் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சா நூர்தீன் மஷர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தெசிய அமைப்பாளரும் எம்.பியுமான ஆர்.யோகராஜன். ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான மனோகணேசன் மற்றும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் தலைவர் அப்பாத்துரை விநாயக மூர்த்தி, கஜேந்திரகுமார், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கல நாதன், சிவாஜிலிங்கம், கூட்டணி வவுனியா மாவட்ட அமைப்பாளர் குலதேவராஜா, யாழ். மாநகரசபை உறுப்பினா எஸ்.அரவிந்தன். ஈ.பி.ஆர்.எல்.எப். செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், இராஜ குகனேஸ்வரன் எம்.பி ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

பொங்கு தமிழ் நிகழ்வில் முஸ்லிம் மக்களும் மலையக மக்களின் தலைவர்களும் கலந்து கொண்டமை முக்கிய நிகழ்வாக அமைந்தது. பொங்கு தம்ழ் நிகழ்ச்சியைப் பார்வையிட வன்னியில் இருந்து வெளிவரும் ஈழநாதம் பத்திரிகையைச் சேர்ந்த நால்வரும் அனுமதிக்கப்பட்டனர். வவுனியாவில் பொங்கிய தமிழ் இனி மலையகம் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் பொங்கவுள்ளது.

www.padippakam.com



# தமிழ்க் குழுக்களின் ஆயுதக்களைவு விவகாரம்!

## இலங்கைக் கடிதம்

### கொழும்பில் இருந்து குலோத்துங்கன்

இவ்வாரம் இரண்டு விடயங்களை உங்கள் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகிறோம்.

முதலாவது தமிழ்க் குழுக்களின் ஆயுதக்களைவு விவகாரம்.

இரண்டாவது நாட்டில் உருவாகி வரும்சமாதானச் சூழலை உங்களுக்கு உணர்த்துதல். அரசுக்கும் புலிகளுக்கும் இடையே கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி தமிழ் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் மார்ச் 24ம் திகதிக்குள் களையப்பட வேண்டும். அக்குழுக்களில் உள்ளோர் தாங்கள் விரும்பினால், இராணுவத்தில் இணைந்து வட-கிழக்கிற்கு மாகாணத்துக்கு வெளியே சேவை செய்யலாம்.

இந்த விதியினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது ஈபிடிபி.தான் அதனால் அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தா புரிந்துணர்வு ஒப்பந்தம் முறிந்துவிடாதா என்ற ஆவலில் ஆலாய்ப் பறக்கிறார்.

கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அவரும் அவரின் கையாட்களான டாக்டர் விக்னேஸ்வரன், தவராசா, மகேஸ்வரி வேலாயுதம் ஆகியோர் போய் வடகிழக்கில் ஜனநாயம் நிலவ உதவி கோரி வருகிறார்கள்.

இலங்கையில் சமாதானம் ஏற்படுவதைத் தாங்கள் ஆதரிப்பதாகவும் ஆனால் வட-கிழக்கில் ஜனநாயகம் நிலைக்க உதவுமாறும் கோருகின்றனர்.

வெளிநாட்டுத் தூதுவர்கள், மரியாதை நிமித்தம், ஈபிடிபியினர் கூறுவதை அமைதியாகக் கேட்டுவிட்டு, "எமது அரசாங்கத்தின் கவனத்துக்கு உங்கள் கருத்துக்களைக் கொண்டு வருகிறோம்" என்று சொல்லி அனுப்பி விடுகிறார்கள்.

ஈபிடிபி காரர் வெளியேபோனபின்பு, "யார் இவர்கள் சனநாயகத்தைப் பற்றிப் பேச?" என்று சொல்லி நகைக்கிறார்களாம்.

ஈபிடிபியினர் நடத்திய ஜனநாயக ஆட்சி எல்லாருக்கும் தெரிந்த கதை.

தீவுப் பகுதிக்கு மாற்றுக் கட்சியினர் போவதற்கு அனுமதித்தார்களா?

ஆயுதமேன்?

அதற்கு மேலான கேள்வி:

ஜனநாயக அரசியல் செய்ய ஆயுதமேன்?

ஆயுதம் போய்விடப் போகிறதே என்ற அங்கலாய்ப்பில் ஈபிடிபியினர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்க்கும் சந்திரிகா-ஜேவிபி. கூட்டில் இணைந்துள்ளனர். டக்ளஸ் அடிக்கடி சந்திரிகாவுடன் தொடர்பு கொள்வதாகக் கூறப்படுகிறது. அதே நேரத்தில் ரணிலைச் சந்தித்துப் பேசுகிறார்.

செவ்வாய்க் கிழமை பாராளுமன்றத்தில் பேசிய போது அவருக்கும் தமிழ்க் கூட்டமைப்பு எம்பிக்களுக்குமிடையில் சிறிது நேரம் சொற்போர் இடம்பெற்றது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் தனது அரசியல் நடவடிக்கைகளை முடிக்கப் பார்க்கின்றனர் என்று டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்ட போது யாழ்மாவட்ட தமிழ்க் கூட்டமைப்பு எம்பிக்கள் ரவிராஜ், ஆனந்தசங்கரி, சிவாஜிலிங்கம் ஆகியோர் குறுக்கிட்டனர். "சிவசிதம்பரத்தைச் சுட்டவர் யார்? அவர் உயிருடன் இருக்கிறார். அவரைக் கேளுங்கள் உண்மை தெரியும்" என்றார் டக்ளஸ்.

"எனது காலைப் பாருங்கள் என்னைத் தாக்கியவர் யார்?" என்று பதில் கேள்வி எழுப்பினார் சிவாஜிலிங்கம்.

முதுகெலும்பற்ற அரசியல் நடத்துவதாகக் கண்டனங்களும் அள்ளி வீசப்பட்டன. இந்த சொற்போரால் சபையில் சலசலப்பு ஏற்பட்டது. அமைதிப்படுத்த பெரும் சிரமப்பட்டார். சபைக்கு தலைமைதாங்கிய பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் அத்துஹஹெட்டி.

புளொட் ஆதரவு

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு புளொட் தன் முழுமையான ஆதரவை அளித்துள்ளது. புளொட்டின் நிலைப்பாட்டை அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் திங்கட் கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

"எமது கட்சியைப் பொறுத்த மட்டில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முழுமையான ஆதரவை நாங்கள் நல்குவோம். இந்த ஒப்பந்தத்தை நாம் வரவேற்கிறோம் என்று அவர் சொன்னார்.

இந்த ஒப்பந்தத்தில் அரசியல் ரீதியான சில சிக்கல்கள் இருந்தாலும் இன்றைய நிலைமையில் கட்சி நலன்கள் முக்கியம் அல்ல. மக்கள் நலனே முக்கியம். தமிழ் குழுக்கள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்ற சரத்தும் ஒப்பந்தத்தில் உள்ளது. ஆயுதங்களை ஒப்படைக்க எமது கட்சி தயார் என்று பிரதமருக்கு தெளிவுபடுத்தியுள்ளோம். மேலும் பொ.ஐ.மு.வும். ஜே.வி.பியும் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தர வேண்டும்.

பேச்சுவார்த்தைகள் ஏற்படும் வாய்ப்புகளை இக்கட்சிகள் தகர்த்து விடக் கூடாது. ஒப்பந்தத்திற்கு இவ்வளவு எதிர்ப்பு இருக்குமெனில் நிரந்தர தீர்வுக்கு எவ்வளவு எதிர்ப்பு இருக்கும் என்பதை அனுமானிக்க முடியும் என்றும் சித்தார்த்தன் கூறினார்.

அதேவேளை ஆயுதங்களைக் கைவிட்டு அரசியல் கட்சியாக இயங்க தாங்கள் தயாராக இருப்பதாக ஈபிஆர்எல்எப். வரதர் அணி தலைவர் வரதராஜப் பெருமாள் அறிவித்துள்ளார்.

ஆயுதக்களைவு

அரசும் விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் தமிழ்க் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களைவது தொடர்பான நடவடிக்கைகளைப் பாதுகாப்பு தரப்பினர் ஆரம்பித்துள்ளனர்.

இதன் முதல் கட்டமாக கிழக்கில் தமிழ்க் குழுக்கள் ஆயுதங்களுடன் நடமாடத் தடை விதிக்கப்பட்டது. அடுத்த கட்டமாக கடந்த திங்கட்கிழமை மேற்படி தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளை அழைத்த மட்டக்களப்பு மாவட்ட இராணுவ கட்டளை அதிகாரி அன்ரனிஸ் தமிழ்க் குழுக்கள் தங்கள் வசமுள்ள ஆயுதங்களின் விபரங்களை 48 மணி நேரத்திற்குள் தெரிவிக்க வேண்டுமெனவும் தெரிவித்திருந்தனர்.

இதன் மூன்றாம் கட்டமாக மட்டக்களப்பு இராணுவ தலைமையகத்திற்கு நேற்று முன்தினம் புதன்கிழமை விஜயம் செய்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ சிரேஷ்ட படை அதிகாரிகளுடன் இந்த ஆயுதக் களைவு தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

அத்துடன் இந்த யுத்த நிறுத்த உடன்பாட்டை அமுல்படுத்துவது தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளார்.

முப்படைத் தளபதிகள் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் ஆகியோரை கடந்த செவ்வாக்கிழமை சந்தித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த உடன்பாடு தொடர்பாக அவர்களுக்க விளக்கமளித்துள்ளார். இதையடுத்தே ஒஸ்ரின் பெர்னாண்டோ புதன்கிழமை மட்டக்களப்பிற்கு விஜயம் செய்ததுடன் அதற்கு முன்பாக தமிழ்க் குழுக்கள் ஆயுதங்களுடன் நடமாடவும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

சமாதானச் சூழல்

இப்போது இலங்கையில் உருவாகிவரும் நல்ல சூழ்நிலையை இக் கடிதத்தின் மூலம் உங்களுக்கு உணர்த்த விரும்புகிறோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் பீட இறுதியாண்டு மாணவர்கள் 53 பேருக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திங்கட் கிழமை பாராளுமன்றத்தில் பகல் போசன விருந்தளித்தார்.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் ஆர்.சிவச்சந்திரன் தலைமையில் புவியியல் பீட மாணவர் குழு பாராளுமன்றத்திற்கு போனது.

இதை அறிந்ததும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் அவர்களைச் சந்தித்தார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உடனடியாக அறிவித்தார்.

பிரதமர் அவர்களை வரவேற்று விசேட விருந்தினர் அறையில் பகல் போசன விருந்தளித்து அவர்களுடன் கலந்துரையாடினார்.

விருந்துபசாரத்தையடுத்து மாணவர்கள் பிரதமருக்கு நன்றி தெரிவித்ததோடு பிரதமரின் சமாதான முயற்சிகள் கூடிய விரைவில் வெற்றிபெறுவதற்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர். யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை இறுதி வருட மாணவர்கள் பெப்ரவரி 21 ஆம் திகதி முதல் நாடு பூராவும் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டனர்.

கேதீஸ்வரத்தில் மகாசிவராத்திரி

இம் மாதம் 12ம் திகதி மகா சிவராத்திரி என்பது உங்களுக்குத் தெரியும். இவ்வருடம் பாடல் பெற்ற தலமான திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட இருக்கிறது. ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் இவ்விழாவில் கலந்து கொள்வர்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

சமாதான முன்னெடுப்புத் திட்டத்தின் கீழ் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றங்களின் விளைவாக இயல்பு நிலை திரும்பியதையடுத்து பாடல் பெற்ற தலமான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா விமரிசையாக நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆரம்ப காலங்களில் இலங்கையின் சகல பாகங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் இவ்விழாவில் கலந்து கொள்ள திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு யாத்திரை சென்றனர்.

இம்முறை ஐம்பதாயிரம் அடியார்கள் மகா சிவராத்திரி தினத்தன்று இவ்விழாவில் கலந்து கொள்ள திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்விழா சம்பந்தமாக மன்னார் செயலகத்தில் இரண்டு ஆலோசனை கூட்டங்கள் மன்னார் அரசாங்க அதிபர் வே.விஸ்வலிங்கம் தலைமையில் இடம் பெற்றன. இதில் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் கே.பரமேஸ்வரனும் கலந்து கொண்டார்.

தீருக்கேதீஸ்வர திருக்கோயில் பல ஆண்டுகளாக பூசையின்றியிருந்தமையால் குடமுழுக்கு விழா நிகழ்ந்த பின்பே அபிசேகம் பூசை அர்ச்சனை நடைபெறும் இதனால் சிவராத்திரி அன்று அவ் ஆலயத்தில் பூசைகள் இடம் பெறமாட்டா. அத்துடன் பாலாவியில் இருந்து தீர்த்த குடமெடுத்து வந்து மகாலிங்கப் பெருமானுக்கு முழுக்காட்டும் நிகழ்வும் நடைபெறமாட்டாது.

மகாசிவராத்திரி மட பரிபாலன சபையும் (மன்னார் கச்சேரி) கொழும்பு புறக்கோட்டை வர்த்தகர்களும் கதிர்காம யாத்திரிகர் மடமும் இணைந்து அடியவர்கட்கு மகேஸ்வர பூசை (அன்னதானம்)யும் தாக சாந்தியும் அளிக்க சிறப்பான ஏற்பாடுகள் மேற்கொள்கின்றனர்.

முன்னர் இத்தலத்துக்கு வரும் அடியார்கள் தங்குவதற்கு 25 மடங்கள் இருந்தன. இப்போது இவையாவும் வன் செயல் காரணமாக அழிந்து விட்டன. இதனால் இம்முறை அடியார்கள் தங்குவதற்கு வசதிக் குறைவுகள் இருப்பதாக கவலை தெரிவிக்கப்பட்டது. தற்காலிக கொட்டகைகளும் அன்னதானம் வழங்கும் இடங்களிலேயே அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

### ஆலமரம்

எண் திசையும் படர்ந்திருக்கும்
இலைகளுடன் காய் சிரிக்கும்
எத்தனையோ பரம்பரைக்கு
முத்திரையாய் சாட்சி சொல்லும்

பறவை யினங்களுக்குப்
பஞ்சு மெத்தை யிதன் கிளைகள்
பற்களை உறுதியாக்கும்
பயனுள்ள பிஞ்சு வேர்கள்

ஆயிரம் விழுது இருக்கும்
அத்தனைக்கும் பலம் இருக்கும்
காய்திருக்கும் பழுத்திருக்கும்
காக்கை கிளிக்கு உணவளிக்கும்

அடிமரத்தைத் தென்றல் கூட
அன்புடனே காதலிக்கும்
நோவுப் பொழுதும் சூரியனும்
நுழைந்திராமல் மடியிருக்கும்

எத்தனை யினப் பறவைகள்
இதன் கிளையில் குடியிருக்கும்
அத்தனையும் ஒற்றுமையாய்
அதிகாலையில் குதூகலிக்கும்

நிழல் கொடுப்பதிலே
நிகரற்ற மரம் இதுவாம்.
தாவரங்கள் பலவுண்டு
தரணியிலே
ஆலமரம் போல் உண்டா
வாழ்வினிலே.

ஆக்கம்
வேலணையூர் சிவா

படிப்பகம்

www.padippakam.com



# அம்மன் கண்ணீர் வடித்தாரா?

ஜெயலலிதா மீண்டும் தமிழ் நாடு முதலமைச்சராகி விட்டார். அவர் எந்த தி.மு.க தலைவர் மீது பழி வாங்குவாரோ? அது அவர் வணங்கும் சாமிமார்களுக்குத் தான் வெளிச்சம்.

ஜெயலலிதா ஆட்சியில் தமிழ் நாட்டின் பொருளாதாரம் வளருமோ தெரியாது. நிச்சயம் போலிச் சாமிமார் வளர்வார்கள். அதனால் தானோ என்னவோ கலைஞர் தன் உடன்பிறப்புக்களுக்கு தமிழ் நாட்டில் பக்தி வியாபாரம் நடத்தும் போலிச் சாமிமார் பற்றி கடிதம் எழுதியுள்ளார்.

அக் கடிதத்தை அப்படியே உங்களுக்குப் படைக்கிறோம்:

**அம்மனின் வலது கண்**

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் சன்னதி தெருவில் சந்தவெளி அம்மன் கோவிலில் இருக்கும் அம்மன் சிலையின் வலதுபுறு கண் திடீரென்று திறந்திருப்பதாக ஒருவன் புரளி கிளப்பிவிட அதைக் கேட்டு பக்கதர்கள் கூட்டம் முண்டியடித்துக் கொண்டு ஒருவர் மீது ஒருவர் விழுந்து நெருங்கி கொண்டு அம்மனை வழிபட ஓடோடி வந்தனர். நேரம் ஆக ஆக கார்கள் சைக்கிள்கள் போன்ற வாகனங்களில் பக்த சிரோன்மணிகள் குடும்பம் குடும்பமாக வந்து குவிந்தனர். காஞ்சி நகரமே பெரும் பரபரப்பு அடைந்தது. இப்படி கூட்டம் வந்தால் திடீர் கடைகளுக்கு பஞ்சமா என்ன? சில்லறை கடைகள் ஏராளமாக அந்த இடத்தில் தோன்றின.

அம்மனின் கண் திறந்தது மாத்திரமல்ல: அந்த கண்ணிலே இருந்து நீர் வருவதாகவும் அண்டப்புளுகனை மிஞ்சிய ஒரு ஆகாயப் புளுகன் புரளி கிளப்பி விட்டான். இதனால் மேலும் மக்கள் கூட்டம் அதிகரித்தது.

என்ன? ஏன்? எப்படி?

குங்கும பொட்டலங்களோடும் அந்த சிறுமி இருந்த இடத்திற்கு ஓடோடி வந்தனர். முதலில் அவர்கள் கொடுத்த உணவு பொட்டலங்களை வாங்கிச் சாப்பிட்ட சிறுமி பிறகு எதையும் சாப்பிடாமல் பட்டினி கிடக்கத் தொடங்கினாள். அம்மனின் அவதாரம் தான் அந்த சிறுமி என்ற நம்பிக்கை பரவிட பரவிட பல வழிகளில் சென்று கொண்டிருந்த பஸ்கள் எல்லாம் கூட கரியப்பட்டிக்கே திரும்பிவிட்டன. மூன்று நாள் பட்டினி கிடந்த சிறுமி

அவதாரம் என்று தன்னைப்பற்றி கூறிக் கொள்கிறார். தேங்காய்களை பல்லால் கடித்து உரித்து தள்ளுகிறார். வாழைப்பழங்களை தாரோடு விழுங்குகிறார். அனுமாருக்கு உள்ள சேட்டைகள் அனைத்தும் அவருடைய அங்க அசைவுகளில் காணப்படுகின்றது. அந்த சாமியாரின் சீறல் சத்தம் பார்வை என அனைத்தையும் பார்த்து பரவசப்படும் பக்தர்கள் தங்களுக்குள்ள பல பிரச்சினைகள் பற்றி அவரிடம் எடுத்துக் கூறி குறி கேட்டுச்

## தமிழ் நாட்டுத் தபால்



ஒவ்வொருவருடைய அபிலாஷைகளையும் பூர்த்தி செய் அம்மா என்று கூறிக் கொண்டே ஒவ்வொன்றாக சொல்லுகிறார். அம்மன் பதில் சொல்வதை போல் பாவனை காட்டிக் கொண்டு எதிரே உள்ள விபூதி தட்டில் தன் கையிலே இருக்கிற சிறிய வேல் ஒன்றை எழுதுகோலாக பயன்படுத்துகிறார். குடும்ப பிரச்சினைகள் குழந்தை பாக்கியம் என இவரை நாடி வரும் பக்தர்களுக்கு பஞ்சமே இல்லை தர்ப்பையை காதிலே வைத்துக் கொண்டு தொலைபேசியில் பேசுவதைப் போல இவர் குறி சொல்வதால்இவருக்கு எஸ்.டி.டி.சாமியார் என்றும் பெயர் உண்டு.

**வெற்றிலை சாமியார்**

குமரி மாவட்டம் உடையப்பன்குடியில் ஒரு பெண் துறவி சாமி ஆடியவாறு குறி சொல்கிறார். கண்கள் செருக கோபாவேசமாக இவர் தரும் அருள் வாக்கைக் கேட்க பக்தர்களுக்கிடையே பெருத்த ஆர்வம்.அதே மாவட்டத்தில் நாகர் கோவில் நாகராஜா கோவிலில் இருக்கும் சாமியார் சற்று வித்தியாசமானவர். வெற்றிலையில் மை போட்டு பார்த்து பொது மக்களின் குறைகளை கேட்டு நிவர்த்தி சொல்வதால் இவருக்கு வெற்றிலை சாமியார் என்று பெயர்.

இந்துக்கள் மத்திலே சீர்திருத்தங்கள் செய்ய விரும்பிய விவேகானந்தர் போன்றவர்கள் எத்தனை பேர் தோன்றினாலம் கண்மூடி வழக்கமெல்லாம் மண் மூடிப் போக என்றுரைத்த வடலூர் வள்ளலார்கள் எத்தனை பேர் தோன்றினாலம் ஏமாறாதே ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள் பல்லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வம் உண்டாமெனல் கேளீரோ?

# பலத்தோடு முதலமைச்சரானார் ஜெயலலிதா:

எதனால்? இருக்குமோ? நடக்குமோ? முடியுமோ? இந்த கேள்விகளுக்கு எல்லாம் இடம் தராதவர்கள் தானே நமது சமுதாய மக்கள். பொலிசார் வந்து உண்மையை எடுத்துரைத்தும் அந்த மக்கள் அதனை கேட்பதாக இல்லை. நீண்ட நேரத்திற்கு பிறகு தான் யாரோ தங்களை ஏமாற்றி விட்டதாக அந்த பக்த சிரோன்மணிகள் உண்மையை உணர்ந்து ஒவ்வொருவராக கலைந்தார்கள்.

**அவதாரம்**

காஞ்சிபுரம் புரளியை மிஞ்சக் கூடிய அளவிற்கு காரைக்குடியை அடுத்த கரியப்பட்டி கிராமத்தில் ஒரு புரளி பூத்துக் குழுங்கி இறுதியாக புழுதியில் தன்னைத் தானே மூடிக் கொண்டு விட்டது. முன்பின் தெரியாத ஒரு சிறுமி கடந்த 19ம் திகதி காலை கரியப்பட்டிக்கு வந்தாள்.

அவளை பார்த்த அந்த ஊரார் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லாமல் வாயை மூடிக் கொண்டிருந்த காரணத்தினால் சிறுமியை ஒரு மேடையில் ஏற்றி உட்கார வைத்தனர். சில மணி நேரத்திற்கெல்லாம் ராஜேஷ் என்பவன் அந்த சிறுமிக்கு முன்னால் பாம்பு போல படமெடுத்து ஆட ஆரம்பித்தான். அந்த மனித பாம்பு சிறுமியை நோக்கி ஊர்ந்து நகர்ந்தது. ஆத்தா முத்துமாரி என்றவாறு அவன் எழுந்து குதிக்க ஆரம்பித்த செய்தியறிந்த பக்கத்து ஊர் மக்கள் கரியப்பட்டியை நோக்கி படை எடுத்தனர். விடிய விடிய பல ஊர்மக்கள் பழங்களோடும் பூக்களோடும் விபூதி

மயங்கிய நிலைக்கு ஆளான போது குழுமியிருந்து பக்த கோடிகள் அம்மனைப் பற்றி பக்தி பாடல்களை பாடியபடி அங்கேயே தவம் இருக்க தொடங்கி விட்டனர்.

அவள் உயிருக்குப் போராடுகிறாள் என்பதை அறியாமல் தாடையிலும் கன்னத்திலும் போட்டுக் கொண்டு தாயே அம்மா வரம் தரும் தாயே எங்களை வாழ வைப்பாய் தாயே என்றெல்லாம் பாடத் தொடங்கி விட்டனர். அந்த செய்தி அறிந்த பொலீசார் அங்கு வந்து சிறுமியை தூக்கிக் கொண்டு போய் காரைக்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கே அந்த சிறுமிக்கு குளுகோஸ் ஏற்றப்பட்டது. டாக்டர்கள் அவளை பரிசோதித்த பிறகு தான் அந்த சிறுமி மன நிலை பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. அப்போதும் அந்த மருத்துவமனையை சுற்றி பக்தர்கள் கூட்டம் பெருகிவிட்ட காரணத்தினால் அவளை மதுரை மருத்துவமனைக்கு பொலீசார் கொண்டு சென்று விட்டார்கள்.எத்தனை ஆயிரம் நிகழ்ச்சிகள் இப்படி நடைபெற்றாலும் அந்த நிகழ்ச்சிகள் பற்றிய மோசடிகள் உடனுக்குடன் அம்பலப்பட்டாலும் அடுத்தடுத்து இத்தகைய நிகழ்ச்சிகள் நடப்பத குறையவில்லை.

**ஆஞ்சநேயர் அவதாரம்**

நெல்லை மாவட்டத்தில் திருங்வேங்கடநாதபுரம் என்று அழைக்கப்பட்டு வரும் சிறுவளஞ்சி என்ற ஊரில் பூபால் அடிகளார் என்று ஒரு சாமியார். அவரை காட்சியாக காட்டினார்கள். அவர் ஆஞ்சநேயரின்

செல்கிறார்கள். அந்த வட்டாரத்து பக்தர்கள் அவருக்கு வைத்துள்ள பெயர் குரங்கு சாமியார்.

**சேலை அணிந்த சாமியார்**

மற்றொரு சாமியார் பெயர் மாரிச்சாமி. கோவில்பட்டி அருகே ஏழாயிரம் பண்ணை என்ற ஊரில் இவர் இருக்கிறார். பால பருவம் முதல் குறி சொல்லி வரும் இவர் காளியின் வடிவமாக இருந்து தான் குறி சொல்லுவேன் என்று சேலை அணிந்து கொண்டு குறி சொல்கிறார். இப்போது நான் எல்லைச் சாமியாராக அவதரிக்கப் போகிறேன் என்று கூறி சுருட்டு மதுபானம் போன்றவைகளையும் பகிரங்கமாக உபயோகிக்ககிறார். இவரிடம் குறி கேட்கச் செல்கிறவர்கள் பியர் பாட்டில்களை டஜன் கணக்கில் வாங்கிச் செல்கிறார்கள். அவைகளின் மூடிகளை பல்லிலேயே கெல்லி எறிந்து விட்டு பியர் குடித்துக் கொண்டே குறி சொல்கிறார். இவருக்கு பியர் சாமியார் என்று செல்லப் பெயரும் உண்டாம்.

**அம்மனுடன் தோலைபேசியில்**

உரையாடும் சாமியார். தஞ்சை பகுதியில் பிரபலமான ஒரு சாமியாருக்கு பெயர் ராமமூர்த்தி சாமியார். இவர் முற்றிலும் வித்தியாசமான முறையில் குறி சொல்கிறார் அல்லது வரம் தருகிறார். இவருடைய கையில் ஒரு தத்தை தர்ப்பைகள் கட்டப்பட்ட தொகுப்பு உள்ளது. அதை தனது காதோரம் வைத்துக் கொண்டு நான் இப்போது தொலைபேசியில் அம்மனுடன் பேசுகிறேன் என்று அம்மனிடம் பேசுவது போல் பேசுகிறார். அம்மா பக்தர்கள் வந்திருக்கிறார்கள்

மாடனை காடனை வேடனை போற்றி மயங்கும் அறிவென்றே தெய்வம் என்றோதியறியீரோ? என்றுரைத்த பாரதியார்கள் எத்தனை பேர் தோன்றினாலும் கடவுள் பெயரைச் சொல்லி ஏமாற்றாதே ஏமாறாதே என்றுரைத்த பெரியார்கள் எத்தனை பேர் தோன்றினாலும் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமூலரின் வாக்கினை திரும்பத் திரும்ப எடுத்துக் கூறி சமுதாயத்தை திருத்த நினைத்த பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் எத்தனை பேர் தோன்றினாலும்:

மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றும் என்று புரட்சி கவிஞர் பாடியதற்கேற்ப இன்னமும் பழைய நம்பிக்கைகள் பழக்க வழக்கங்கள் இவற்றிற்கு ஆட்பட்டு மதியிழக்கும் மாந்தர்களும் இவற்றை மூலதனமாக கொண்டு பக்தி வியாபாரத்தை நடத்தி ஆதாயம் பெறும் சாமியார்களும் பெருகிக் கொண்டே தான் இருக்கிறார்கள்.காட்டுமிராண்டித்தனமான செயல்களாலும் காணிக்கைகள் வழங்குவதாலும் கடவுளை தமது கைக்குள் போட்டுக் கொண்டு எண்ணியதை எண்ணியவாறு எய்தலாமென ஏமாற்றும் போலி சாமியார்களிமிருந்து பொது மக்களை மீட்டு புதிய சமுதாயம் காண்பதற்கான பயணம் முடிந்துவிடவில்லை.

அதன் எல்லையை அடைவதற்கு இன்னும் தொலை தூரம் கலலையும் முள்ளையும் காட்டாறுகளையும் தாண்டிச் செல்லவேண்டியிருக்கிறது.

படிப்பகம்

# சிங்களக் குடியேற்றத்திற்கு வித்திட் ஜே.ஆர். – எல்லே குணவன்ச தேரோ

பலமான சக்திகள்

தொண்டமான் மகிழ்ச்சி

கென்ற், டொலர் பார்ம்கள் மீது எல்ரிரிஈ 1984 நவம்பர் 30ம் திகதி நடத்திய தாக்குதல் பற்றி கதையைக் கூறுவதற்கு முன்பு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்னாள் தலைவர் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான பற்றிய ஒரு சம்பவத்தைக் கூற விரும்புகிறேன்.

அத்தாக்குதல் நடந்த தினத்துக்கு அடுத்த நாளான டிசம்பர் முதலாம் திகதி காலையில் அமைச்சருடன் நெருங்கிப் பழகிய தமிழ்ச் செய்தியாளர் ஒருவர் அவருடைய கொள்ளுபிட்டி அமைச்சு அலுவலகத்துக்குபோனார்.

கதவைத் திறந்து உள்ளே கால் வைத்ததும் ''வாங்க வாங்க'' என்று வரவேற்றார் அமைச்சர். பின்பு, ''செய்தி தெரியுமா?' என்று கேட்டார்.'

''என்ன செய்தி சேர்''

''அவன்கள் அரசாங்கம் தான் பலமானது என்று எண்ணுகிறான்கள். அரசாங்கத்திலும் பலமான சக்திகள் இருக்கின்றன என்பதைக் காட்டிவிட்டார்கள்.''

''எதைப்பற்றி சேர் குறிப்பிடுகிறீர் கள்?''

''நீ கேள்விப் படவில்லையா?

டொலர் பார்மையும் கென்ற் பார்மையும் பையன்கள் அடித்து விட்டான்கள்''

அரசாங்க அமைச்சரின் முகத்தில் மகிழ்ச்சி. அரசாங்கத்தின் திட்டத்தைப் பையன்கள் ஆட்டம் காணவைத்ததை யிட்டு.

அதற்கு இரண்டு காரணங்கள்.

முதலாவது, இந்தியத் தமிழர்களுக்கு - தொண்டமானின் மக்களுக்கு- இழைக்கப்பட்ட அநீதி.

இரண்டாவது, தமிழரின் புதிய பலம் முளைத்தமை.

இழைக்கப்பட்ட அநீதி

1957, 1979, 1981ஆம் ஆண்டு கலகங்களால் பாதிக்கப்பட்ட மலையகத் தமிழர்களை காந்தியம் இயக்கமும் ரி.ஆர்.ஓ. அமைப்பும் வன்னியில் குடியேற்றின அவர்களில் சிலர் டொலர் பார்மிலும் கென்ற் பார்மிலும் குடியேற்றப்பட்டனர். இக்குடியேற்றங்களை அகற்றி முல்லைத்தீவின் மணலாறு பகுதியை சிங்களமயமாக்கும் திட்டம் ஒன்று 1983 ஜூலை கலகத்தையடுத்து தீட்டப்பட்டது.

ஜூலை 28ல் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தையடுத்து பௌத்த பிக்கு எல்லே குளவன்சவுக்கும் ஜனாதிபதி ஜெயவர்தனவுக்கு இடையே இடம்பெற்ற சந்திப்பின் போது இத்திட்டம் தீட்டப்பட்டது. அமைச்சரவைக் கூட்ட முடிவில் மகாவலி அமைச்சர் காமினி திசாநாயக்கா பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்துக்கு எதிரேயுள்ள பௌத்த விகாரைக்கு போய் புத்த பிக்கு எல்லே குணவன்சவைச் சந்தித்தார். ஜெயவர்தன சந்திக்க விரும்புவதாகக் கூறி பிக்குவை ஜனாதிபதியின் அலுவலகத்துக்கு கூட்டிப் போனார்.

அச் சந்திப்பின் போது தமிழர்களின் ஈழக் கோரிக்கையின் அடிப்படையிலேயே அழித்துவிட வேண்டும் என்று எல்லே குணவன்ச வாதிட்டார். தமிழீழப் பிரதேசத்தை மூன்று கூறுகளாக்குவதன் மூலம் அதைச்செய்யலாம் என்று குணவன்ச சொன்னார். அணலாற்றுப் பகுதியில் சிங்களவரைக் குடியேற்றி வடமாகாணத்திலிருந்து திருகோணமலையைத் துண்டிப்பது என்றும் மாதுறு ஓயாவில் சிங்களவரைக் குடியேற்றி மட்டக்களப்பையும் திருகோணமலையையும் வேறாக்குவது என்றும் முடிவாகியது.

மாதுறுஓயா குடியேற்றத்தில் காமினி திசாநாயக்கவின் ஆட்கள் ஒரு படையெடுப்பை நடத்துவது போல் செயற்பட்டு விஷயத்தைக் குழப்பி விட்டனர். அதனால் இந்தியாவின் எதிர்ப்புக்கு வழிவகுத்து விட்டனர்.

அதனால் காமினி திசநாயக்காமீது ஆத்திரமடைந்த ஜெயவபுர்த்தன மணலாற்றுத் திட்டத்தைச் செயற்படுத்தம் பொறுப்பை அத்துலத்முதலியிடம் ஒப்படைத்தார். அத்துலத்முதலி மிகவும் கவனமாகவும் சாதுர்யமாகவும் நடந்து கொண்டார். 1983 அக்டோபர் மாதத்தில் அதற்கான உயர் மட்டக்குழு அமைக்கப்பட்டது. திருகோணமலையில் சிங்களவரைக் குடியேற்றியவரான டி.ஜே.பண்டாரகோட உட்பட பல திறமை வாய்ந்த அதிகாரிகள் அந்த அமைப்பில் இணைக்கப்பட்டனர்.

ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டதைப் போன்று வவுனியா பொலிஸ் சுப்ரீன்டன்ட் ஆதர் ஹேரத் இந்தியத் தமிழர்களுக்கெதிரான ஓர் இயக்கத்தை வன்னியில் ஆரம்பித்தார். வன்னித் தமிழர்களின் உணர்ச்சிகளை அவர் தூண்டி விட்டார். ''உங்களுடைய மண்ணை இந்தியாக்காரர் பிடிக்கிறார்கள்'' என்ற கோஷம் முன்வைக்கப்பட்டது.

திடீர் திடீரென இந்தியத் தமிழர்கள் பலவந்தமாக பஸ்களில் ஏற்றப்பட்டு மலைநாட்டில் கொண்டு போய் இறக்கப்பட்டனர். அவர்களின் கொட்டில்களில் அனுராதபுரச் சிறைச்சாலையில் நீண்டகாலம் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்த கைதிகள் இரகசியமாக இடமாற்றம் செய்யப்பட்டனர். இதைச் செய்வதற்குவசதியாக கென்ற் டொலர் பார்ம்களை அரசாங்கம் சுவீகரித்து திறந்தவெளிச் சிறைச்சாலையாகப் பிரகடனம் செய்தது. சிறை அதிகாரிகளும் அங்கு பணிக்கு அமர்த்தப்பட்டனர்.

தமிழர்களை விரட்டும் இயக்கம்

மணலாறு தமிழக் கிராமங்கள் நிறைந்த பகுதி. அப்பிரதேசத்திலிருந்து அக் கிராம மக்களை விரட்டும் இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னணியில் சிங்கள தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த சில முக்கியஸ்தர்கள் செயற்பட்டனர். பிற்காலத்தில் சிஹல உறுமய தலைவராகப் பதவி வகித்த எஸ்.எல்.குணசேகர, தவிந்த சேனநாயக்கா, பிரிகேடியர் டெனிஸ் ஹப்புகவ ஆகிய மூவரும் ஜனாதிபதி ஜெயவர்தனவின் மகன் ரவி ஜெயவர்தனவால் தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்துக்கு அனுமதிக்கப்பட்டதாகவும் அம்மூவரும் மணலாற்றுப் பிரதேசத்தைச் சிங்களப் பிரதேசமாக்கும் திட்டத்தை தயாரிக்குமாறு கேட்கப்பட்டதாகவும் ஹேமன் குணரத்தின கூறியுள்ளார்.

கொழும்பில் அமெரிக்க தூதரகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இஸ்ரவேலிய அலுவலக அதிகாரிகள் இத்திட்ட தயாரிப்புக்கு உதவியதாகத் தெரிகிறது. பாலஸ்தீன பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட யூத குடியேற்றத் திட்டங்களையொத்த குடியிருப்புக்களை ஆரம்பிக்கும்படி அவர்கள் குணசேகரவுக்கும் அவரின் ஆட்களுக்கும் ஆலோசனை கூறினர்.

மணலாற்றில் பாதுகாப்புக் கிராமங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற அறிக்கை ஒன்றை குணசேகர சமர்ப்பித்தார்.

தமிழ் மக்களை அப் பிரதேசத்திலிருந்து விரட்டுவதற்கு இரண்டு வழிகள் கையாளப்பட்டன. முதலாவதுசிங்களக் கைதிகளைக் கொண்டு தமிழ் மக்களுக்கு தொல்லை கொடுப்பது.

எல்ரிரிஈயின் தாக்குதலையடுத்து விசாரணை நடத்துவதற்காகச் சென்றவர்கள் முதலாவது திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட விதம் பற்றி நிறையச் சாட்சியங்களைப் பதிவு செய்து வைத்துள்ளனர். அவர்கள் தயாரித்த அறிக்கையில் உள்ள ஒரு பந்தியில் தமிழாக்கம் இது.

''கென்ற், டொலர் பார்ம்களுக்கு அருகேயிருந்த கிராமங்களில் வாழ்ந்த தமிழக் குடும்பங்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு அங்கு குடியேற்றப்பட்ட கைதிகள் பயன்படுத்தப்பட்டனர். இளம் தமிழ்ப் பெண்களை அவர்கள் போய்ப் பிடித்து வந்தனர். அவர்களைப் படையினர் முதலில் கற்பழிப்பார்கள். பின்பு அவர்களைச் சிறைக் காவலாளிகள் கற்பழிப்பார்கள். இறுதியில் கைதிகளிடம் ஒப்படைப்பார்கள்.''

கற்பழிப்புடன் வேறு விதமான தொல்லைகளும் கொடுக்கப்பட்டன, தமிழ்க் குடும்பங்கள் வளர்க்கும் மாடுகள் ஆடுகள் கோழிகள் ஆகியவற்றைத் திருடினர். அவர்களின் தோட்டங்களுக்குப் போய் காய்கறிகளை ஆய்ந்து வந்தனர். எதிர்ப்பவர்கள் தாக்கப்பட்டனர்.

இத் தொல்லைகளைத் தாங்க முடியாத தமிழ்க் கிராமவாசிகள் இராணுவப் பாதுகாப்பைக் கோரினர். அதை உபயோகித்து. படையினர் தமிழக் கிராமவாசிகளுடன் நன்றாகப் பழக ஆரம்பித்தனர். கைதிகள் தமிழ்க் கிராமங்களுக்குப் போகாது தடுக்கப்பட்டனர். அதே சமயம், ''அவர்களை எவ்வளவு காலம் கட்டுப்படுத்தி வைப்பது. நீங்கள் வேறை இடம் பார்த்துக் கொண்டு போய்விடுங்கோ'' என்ற ஆலோசனை வழங்கப்பட்டது.

நவம்பர் 30 தாக்குதல்

இத் தொல்லைகள் தமிழ் இயக்கங்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டன. பிரபாகரன் அதையிட்டு மிகவும் கவலையடைந்தார். அப்போது அவர் தமிழ் நாட்டில் இருந்தார். தமிழ் மண் பாதுகாக்கப்பட வேண்டும் என்று அவர் முடிவு செய்தார். அதற்கு ஒரே வழி தமிழ் இயக்கங்கள் தமது எதிர்ப்பை ஆயுத வழியில் காட்டுவதே என்ற முடிவுக்கு அவர் வந்தார்.

அந்த முடிவின் விளைவே நவம்பர் 30 தாக்குதல். அது மிகவும் கவனமாகத் திட்டமிடப்பட்டது. போராளிகள் இரண்டு குழுக்களாகச் செயற்பட்டனர். இரண்டு குழுக்களும் இரண்டு பஸ்களில் பயணம் செய்தன. றைபிள்களையும் சப் மெசின் கன்களையும் கிரனேட்டுக்களையும் அவர்கள் கொண்டு சென்றனர்.

டொலர் பார்முக்குள் பிரவேசித்த புலிகள் கோஷ்டி மூன்று சிறைக் காவலாளிகளையும் 62 கைதிகளையும் சுட்டும் வெட்டியும் கொலை செய்தது. டொலர் பார்மிலிருந்து எட்டுக் கிலோமீற்றா தூரத்திலிருந்த கென்ற் பார்மிற்குப் நுழைந்த புலிகள் இருபது கைதிகளைக் கொலை செய்தனர்.




# இந்தியர்களைத் துரத்திய அரச பயங்கரம்

அத் தாக்குதல் அரசாங்கத்துக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஜெயவர்தன உடனடியாக தேசிய பாதுகாப்புச் சபையைக் கூட்டினார். அதில் கலந்து கொண்ட ரவி ஜெயவர்தன (ஜனாதிபதியின் மகன்) மணலாறுக்கு அவசரமாக அனுப்பப்பட்டார். அவருடன் ஹேர்மன் குணரத்தினவும் போனார். அதே நேரம் பதவியாவிலிருந்து படையினரும் பொலிசாரும் அங்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் அருகேயிருந்த தமிழக் கிராமங்களுக்குப் போய் கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதனால் முப்பது அப்பாவித் தமிழ் மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவர்களை ''பிரிவினை வாதிகள்'' என்று அத்துலத்முதலி கூறினார். அந்தக் கொலையை இந்தியா கண்டித்தது.

தமிழ்க் கிராமங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் பிரபாகரனை ஆத்திரமடையவைத்தது. அதற்குப் பதிலடி கொடுக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

நாயாறு கொக்கிளாய் தாக்குதல்

அடுத்த நாளான டிசம்பர் முதலாம் திகதி எல்ரிரிஈ போராளிகள் மீன்பிடிக் கிராமமான நாயாறு, கொக்கிளாய் ஆகிய கிராமங்களில் வாழ்ந்த சிங்களவர் மீது தாக்குதல் நடத்தினர். இந்த இரு கிராமங்களும் முல்லைத்தீவுக் கடற்கரையில் உள்ளன. இரண்டு கிராமங்களுக்கு இடையிலான தூரம் 15 கிலோ மீற்றா அத் தாக்குதலின் போது 59 சிங்களவர்கள் கொல்லப்பட்டனர்.

தாக்குதலின் போது உயிர் தப்பிய மூவர் முல்லைத்தீவுக்கு ஓடிப் போய் தங்கள் கிராமங்கள் தாக்கப்படுவ தாகச் சொன்ன போதுதான் அத் தாக்குதல் பற்றிப் படையினருக்கும் பொலிசாருக்கும் தெரியவந்தது. அவர்கள் அக் கிராமங்களுக்குப் போக முயன்றனர். ஆனால் புலிகள் நிலக்கண்ணிகளை வெடித்து அவர்களைத் தடுத்தனர்.

அப்பகுதியிலுள்ள தமிழ்க் கிராமங்களுக்குள் படையினரும் பொலிசாரும் புகுந்து தாக்குதல் நடத்தினர். அத் தாக்குதலின்போது 12 தமிழர்கள் கொல்லப்பட்டனர். அவர்களைப் புலிகள் என்று அரசாங்கம் கூறியது. அதே நேரம். வவுனியா

15ம் பக்கம் பார்க்க...

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# கென்ற் – டொலர் பாம் முகாம்கள் மீது தாக்குதல்

14ம் பக்கதொடர்ச்சி

இராணுவ முகாமிற்குள் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 20 தமிழர் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அவர்களில் 12 பேர் கொல்லப்பட்டனர். அவர்கள் தப்பிச் செல்ல முன்ற போது தாங்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக படையினர் கூறினர். சுடவிரும்புவோரை ஓடச் சொல்லி விட்டுச் சுட்டுக் கொல்லுவது இலங்கைப் படையினர் பின்பற்றும் நடைமுறை.

அத்தடன் சிங்களவர்களுக்கு ஆயுதங்களை வழங்க அரசாங்கம் முடிவு செய்தது. எனினும் பெருந்தொகையான சிங்களக் குடியேற்றவாசிகள் தங்கள் காணிகளை விட்டு வெளியேற ஆரம்பித்தனர். பௌத்த கோவில்களிலும் பாடசாலைகளிலும் பலர் தஞ்சம் கோரினர். அதனால் சிங்கள அகதிப் பிரச்சினை உருவாகியது.

**ஜெஸி நோனாவின் கதை**

இங்கு இரண்டு சிங்கள அகதிகளின் கதைகளைக் கூறுகிறேன். முதலாவது ஜெஸி நோனாவின் கதை. இரண்டாவது எச்.ஏ.தனபாலாவின் வரலாறு.

ஜெஸி நோனா ஒரு பெற்றோரை இழந்த அநாதை. வியாங்கொடையைச் சேர்ந்தவர். அவரின் சகோதரனுக்கும் அவருக்கும் 1957ல் போனேன். என்னை பிக்கு தெரிவு செய்தார். புதிய குடியிருப்பான சிங்களபுரவுக்கு அவர் எங்களை அழைத்துச் சென்றார்.

''அங்கே வாழ்க்கை மிகவும் ஆபத்தானதாக இருந்தது. சாதாரண மக்கள் வாழும் பகுதிகளுக் கிடையே இராணுவ நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இரவில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் அடிக்கடி கேட்கும்,'' என்கிறார் தர்மபால.

கொஞ்சக் காலத்தில் அவரின் அயலவர்கள் திரும்பிப் போய்விட்டனர். தர்மபாலாவின் ஒரே மகன் இப்போழுது இராணுவத்தில்______ பணிபுரிகிறார். அவரின் மூன்று மகள்களில் ஒருவர் சிப்பாய் ஒருவரைத் திருமணம் செய்துள்ளார். மற்றவர் பராக்கிரமபுரவிலுள்ள ஒருவரைக் கலியாணம் செய்துவிட்டார். மூன்றாவது மகள் அந்தப் பிரதேசத்தை விட்டுப் போய்விட்டார்.

**அடிமட்ட மக்கள் பலி**

தமிழீழத்தின் அடிப்படையைச் சிதைப்பதற்கு கொழும்பிலுள்ள பிரபல கல்லூரிகளில் கற்று கொள்கைரீதியில் சிந்திக்க மட்டுமே பழகிக் கொண்ட சிங்கள தீவிரவாதிகள் சாதாரண சிங்கள மக்களை-வாழ்க்கையின் அடிமட்டத்தில் வாழும் ஏழைகளை- எவ்வாறு பலியிடுகிறார்கள் என்பதற்கு ஜெஸி நோனாவினதும் தர்மபாலாவினதும் கூடாது. என்றார்.

அப்போது முல்லைத்தீவுக் குடியேற்றத்துக்குப் பொறுப்பாக இருந்த இராணுவ பிரிகேட்டுக்கு மேஜர் பொக்ரான் பொறுப்பாகவிருந்தார். அவருடைய படைப்பிரிவு மா ஓயா கரையில் முகாமிட்டிருந்தது. அவரை ரவி ஜெயவர்தன சந்தித்தார். பொக்ரானும் அகதிகளுக்கு உதவுவதை எதிர்த்தார்.

**றோட்டு வெலட்டியார்சு**

''இவ்வளவு செலவழித்து அவர்களைக் குடியேற்றினோம். இப்பொழுது அவர்கள் ஓடி வருகிறார்கள். அவர்களுக்கு உதவுவதை நிறுத்துங்கள்'' என்றார்.

''அவர்களுக்கு உதவாவிட்டால் தங்களுடைய கிராமங்களுக்குத் திரும்பிப் போய்விடுவார்கள். உதவியைக் கொடுத்து இங்கே வைத்திருக்க வேண்டும்'' என்றார் ரவி.

பொக்ரானின் கவலை வேறாக இருந்தது.

''முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் பல கிலோ மீற்றர் நீளமான றோட்டு வெட்டி விட்டோம். அதன் இரு கரைகளிலும் குடியேற்றங்களை ஆரம்பிக்க வேண்டும்.''

அரசாங்கமும் தன் சிங்கள குடியேற்றத் திட்டத்தைக் கைவிட விரும்பவில்லை. அதனால் சிங்களக் குடியேற்ற வாசிகள் கூறுவதுண்டு.

**மன்னார் அட்டூழியம்**

முல்லைத்தீவுப் பகுதியில் யுத்தம் தீவிரமடைந்து கொண்டிருக்கையில் மன்னாரில் படையினர் பெரும் அட்டகாசம் புரிந்தனர். நிலக்கண்ணியில் இராணுவ ஜீப் சிக்கியதால் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார். ஆறு படையினர் காயமுற்றனர். அதையடுத்து மன்னார் நகரத்தில் படையினர் பெரும் தாக்குதலொன்றை மூன்று மணித்தியாளங்கள் வரை நடத்தினர். வீடுகள், கடைகள், தபாற் கந்தோர், பஸ்கள், மன்னாருக்கு அருகேயுள்ள வயல்கள் ஆகிய எல்லா இடங்களிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். குறைந்தது 83 சிவிலியன்கள் கொல்லப்பட்டனர்.

**அதே சமயம்**

திருகோணமலையில் தமிழர்களைப் பயமுறுத்தும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

''ஈழ துரோகிகளே! பதிலடிக்குத் தயாராக இருங்கள்! என்ற வாசகத்தை அவை கொண்டிருந்தன.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கவனம் செலுத்த ஆரம்பித்த இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி இலங்கைப் படைகள் ''கண்டபடி கொலை'' செய்வதாக குற்றம் சாட்டினார்.

அந்த எச்சரிக்கை இலங்கை

# அரசாங்கத்தை கடுமையாக எதிர்த்த தொண்டமான்

பதவியாவில் ஒரு காணித் துண்டைக் கொடுத்து அங்கே போய் குடியேறுமாறு அரசாங்க அதிகாரிகள் அனுப்பி வைத்தனர். அவர் திருமணம் செய்து வாழ்ந்து வந்தார். அவருக்குக் குழந்தைகள் பிறந்தன.

1984ல் அவருடைய சகோதரனின் மகனை டொலர் பார்மிலுள்ள திறந்தவெளி சிறைக்குக் கொண்டு வந்தனர். அவன் கசிப்புக் காய்ச்சி விற்றதற்காக அனுராதபுரச் சிறையில்சிறைத்தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்தான்.

ஜெஸி நோனாவின் மகளுக்கு பதவியாவில் காணி இல்லாதபடியால் டொலர் பார்முக்குப் போய் அங்கே ஒரு கடையைத் திறந்தனர். நவம்பர் 30ல் எல்ரிரிஈ யினர் நடத்திய தாக்குதலின் போது அவர்கள் உயிர் தப்பினர். அவரின் சகோதரனின் மகன் கொல்லப்பட்டான். ஜெஸி நோனாவும் மகளும் பதவியாவிலுள்ள பராக்கிரமபுரவுக்குத் திரும்பிப் போனார்கள்.

ஜெஸி நோனாவின் மூத்த மகள் பாம்பு கடித்து இறந்து விட்டாள். அவரின் இளைய மகன் இராணுவத்தில் சேர்ந்தான். தாய்க்குப் பாம்பு கடித்துச் சுகமில்லாமல் இருப்பதாகக் கேள்விப் பட்டு அவன் 1984ல் வீட்டுக்கு வந்தான். அங்கே வந்தபோது தன் மனைவி வேறொருவனுடன் தொடர்பு கொண்டிருப்பதை அறிந்தான். அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. வீட்டை விட்டு போனவன் போனவன்தான். அவனைப் பற்றிய தகவல் கிடைக்கவில்லை. ஜெஸி நோனா சுகமடைந்து தன் பேரக் குழந்தையை வளர்த்து வருகிறார்.

தனபாலாவுக்கு 55 வயது. பம்பலப்பிட்டியைச் சேர்ந்தவர். அவர் திருமணம் முடிந்து குருநாகலையில் கட்டடத் தொழிலாளியாக வேலை செய்து கொண்டிருந்தார். அங்கே வேலை கிடைக்காததால் பொலனறுவைக்குப் போய் அறுவடை செய்து சம்பாதித்தார்.

''1984ல் திம்புவாகல பிக்கு பதவியாவுக்கு வடக்கே காணி கொடுப்பதாகக் கேள்விப்பட்டு பிம்புரத்தனவு பாடசாலைக்குப் ... வாழ்க்கை நல்ல உதாரணம்.

சிங்கள சிந்தனையாளர்கள் போட்ட திட்டங்கள் எல்லாவற்றையும் நவம்பா 30ம் திகதி தாக்குதலின் மூலம் பிரபாகரன் ஆட்டம் காணச் செய்துவிட்டார். இந்தப் பரிமாணத்தை உடனடியாகவே அடையாளம் கண்டு கொண்டார் தொண்டமான்.

''அரசாங்கத்திலும் பார்க்க பலமான சக்திகள் உண்டு'' என்றார் அவர்.

வவுனியாவில் குடியேறிய இந்தியத் தமிழர்களை பலவந்தமாக வெளியேற்றியதற்கு ஜெயவர்தன அரசாங்கம் எடுத்த நடிவடிக்கைகளை தொண்டமான் எதிர்த்தார். வெறுத்தார். ஆட்சேபித்தார். அவராலோ ஜனநாயக சக்திகளாலோ சிங்களக் குடியெற்றத்தைத் தடுக்கவோ ஆட்டம் காணச் செய்யவோ சீர்குலைக்கவோ முடிவில்லை. ஆனால். ஓர் இரவில் நடந்த தாக்குதலும் அடுத்த நாள் நாயாறிலும் கொக்கிளாயிலும் கொடுக்கப்பட்ட அடியும் கொழும்பில் பல இரகசிய கூட்டங்களில் போடப்பட்ட திட்டத்தை ஒரே உலுக்காக உலுக்கிவிட்டது.

**டொலர் கென்ற் பார்ம்**

தாக்குதலை அடுத்து ரவி ஜெயவர்தனவுடன் முல்லைத்தீவுக்கு ஓடிப்போனவர்களில் ஹேர்மன் குணரத்தினவும் ஒருவர். தாங்கள் கண்ட காட்சியை ஹேர்மன் இவ்வாறு எழுதினார்:

''பல நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு. மனைவிமார் அகப்பட்ட சொற்ப பொருட்களைத் தூக்கிக் கொண்டு பயத்தால் நடுங்கிய படி அகதி முகாம்களுக்கு போவதைக் கண்டோம்.

மக்கள் வெளியேற்றத்தைத் தடுப்பதற்கு அவர்களும் அக் குடியேற்றங்களை ஏற்படுத்திய பௌத்த பிக்குகளும் எடுத்த முயற்சிகள் பயனளிக்க வில்லை. அதனால் கோபமுற்ற பதவியா பௌத்த பிக்கு ஹல்மிலாவ இரத்தினசார ரவி ஜெயவர்தனவிடம் கூறினார்:

பயத்தால் ஓடிவரும் அகதிகளுக்கு உணவையும் உடையையும் விநிகோகிப்பதை நான் விரும்பவில்லை. அவர்கள் ஓடிவருவதை நாங்கள் ஊக்குவிக்கக் ... குடியேற்றவாசிகளின் வாழ்க்கை இராணுவமயமாக்கப்பட்டது.

சிங்கள குடியேற்றவாசிகளின் அவலத்தை உணர்ந்து கொள்ள இந்தப் பந்திகளை வாசியுங்கள்:

''அவர்களின் வாழ்க்கை இராணுவமய மாக்கப்பட்டுவிட்டது. ஒரு வயோதிபா இவ்வாறு சொன்னார். ''ஒண்டுக்கு போவதற்கும் இராணுவத்தின் அனுமதியைப் பெறவேண்டும்'' பாடசாலைக்குப் போகும் பிள்ளைகள் கரும்பலகையைப் பார்ப்பதில்லை. காடுகளைத் தான் பார்த்துக் கொண்டிருப்பார்கள்- அதற்குள் ஏதாவது அசைவு தென்படுகிறதா என்று. யாழ்ப்பாணத்து மாணவர்கள் குண்டு வீச்சு விமானங்கள் வருகின்றனவா என்று வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையை ஒத்ததாகவே அது இருந்தது.

இவற்றைவிட மோசமான குற்றச் சாட்டுக்களும் கூறப்பட்டன. இராணுவ நிலையங்கள் குடியிருப்புக்களுக்கு இடையே அமைக்கப்பட்டிருந்தன. பல ஆண்கள் சொன்னார்கள்: இராணுவம் எங்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிறதா அல்லது நாங்கள் இராணுவத்துக்குப் பாதுகாப்பு கொடுக்கிறோமோ தெரியவில்லை' என்று இரவுகளில் ஆண்களை பதுங்குகுழிகளுக்குப் படையினர் அனுப்பி விடுகிறார்கள். அவர்கள் பெண்களைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். நிர்வாணப் படங்களுக்கு போஸ் கொடுக்குமாறு பெண்களை நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள். ஒரு ஆண் சென்னார்: இவன்கள் எங்களுக்குச் செய்மிற அநியாயத்துக்கு புலிகள் தான் நல்ல பாடம் படிப்பிக்க வேண்டும்'' என்று.

மணலாறு (சிங்களத்தில் வெலி ஓயா) பகுதியில் தாக்குதல் நடத்திய புலிகள் அப் பகுதியில் முன்பு வாழ்ந்த தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்பதும் அவர்களை விரட்டியடித்துவிட்டே தாங்கள் அங்கே குடியேற்றப்பட்டார்கள் என்பதும் அதிகமான சிங்களக் குடியேற்றவாசிகளுக்குத் தெரியும்.

''இந்தக் காடுகளுக்குள்ளால் போகும் ஒற்றையடிப் பாதைகள் எங்களிலும் பார்க்க அவர்களுக்கு நன்றாகத் தெரியும்'' என்று சிங்களக் ... அரசாங்கத்தைப் பாதிக்கவில்லை.

படைகள் தங்கள் கொலை வெறியைத் தொடர்ந்தன. யாழ்ப்பாணத்திலும் படையினர் துப்பாக்கி பிரயோகம் செய்தனர். ஆறு பயங்கர வாதிகளைக் கொலை செய்துவிட்டதாக அறிவித்தனர்.

யாழ்ப்பாண பிரஜைகள் குழு அதை மறுத்தது. அதன் தலைவர் ஆர். பாலசுப்பிரமணியம், ''நாங்கள் எல்லோரும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளோம்'' என்றார்.

''அப்பாவி மக்கள் மீது இத்தகைய தொல்லைகள் கட்டவிழ்த்து விடப்படும் போது அரசாங்கத்துடன் நாங்கள் பேசுவது எப்படி? என்று அமிர்தலிங்கம் கேட்டார்.

டிசம்பர் 18ம் திகதி மட்டக்களப்பில் நடத்தப்பட்ட நிலக்கண்ணி தாக்குதலில் எட்டுப் பொலிசாரும் ஒரு சிவிலியனும் கொல்லப்பட்டனர். அடுத்த நாள் பதவியாவில் இரண்டு இராணுவ டிரக்குகளை புலிகள் தகர்த்தார்கள். அதனால் இரண்டு இராணுவ அதிகாரிகளும் இரண்டு சிப்பாய்களும் கொல்லப்பட்டனர்.

அதே தினம் டிசம்பர் 19, யாழ்ப்பாணத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாலிபர்களை இராணுவம் கைது செய்தது. அத்துடன் தமிழ்ப் பயங்கரவாதிகளுக்கு எதிராக ரொக்கற்றுக்களை உபயோகிக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்தது.

நவம்பர் 30முதல் டிசம்பர் 29 வரையுள்ள ஒரு மாதத்தில் 400க்கும் மேற்பட்டோர் கொல்லப்படடனர்.

1984 முடியும் போது:

-சகல கட்சி மகாநாடு முறிந்து அரசியல் தீர்வு முயற்சி கைவிடப்பட்டு

- முழு அளவிலான யுத்தம் ஆரம்பித்து விட்டது.

தமிழ்ப் போராளின் பலம் பல மடங்காகப் பெருகிவிட்டது. தமிழ்ப் போராளி இயக்கங்களின் தலைமை இடத்தை புலிகள் பிடித்து விட்டனர்.

1985ல் நிலைமை மேலும் மோசமடைந்தது.

(தொடரும்)

படிப்பகம்

www.padippakam.com



# பதில்சொல்லுகிறார் சங்கிலியார்

**சபேசன் Walthamstaw, U.K.**

**கேள்வி:** செப் 11ல் அமெரிக்காவில் நடந்த அனர்த்தத்திற்கு பிறகு விடுதலைப் புலிகளின் போக்கில்மாற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறுவது உண்மையா?

**பதில்:** உண்மைதான், அமெரிக்காவில் நடந்த அனர்த்தத்திற்குப் பிறகு விடுதலைப்புலிகளின் போக்கில் மட்டுமல்ல, அமெரிக்காவின் போக்கிலும் நிறையவே மாற்றம் ஏற்பட்டுள்ளதை மறக்க முடியாது. அமெரிக்கா என்னதான் ஆப்கானிஸ்தான் மேல் போர் தொடுத்திருந்தாலும், தங்களால் தான் பல பிரச்சனைகள் உருவாக்கப் படுகின்றது என்ற கூற்றை பரிசீலனை செய்துள்ளதாகத் தெரிகின்றது அதன்பிறகு தான் பயங்கரவாதம் என்றால் என்ன? விடுதலைப்போராட்டம் என்றால் என்ன என்பதையும் பகுப்பாய்வு நடத்தியதாகத் தெரிகின்றது.

அதன் விளைவுதான் பின்லாடனின் போராட்டத்திற்கும் விடுதலைப் போராட்டத்திற்கும் நிறைய வித்தியாசம் உள்ளதாகவும், விடுதலைப் புலிகளின் தடை தற்செயலாக நடந்த விசயம் என்றும் அமெரிக்கா அறிவித்தது. இந்தக் கூற்றைக் கேட்ட தங்களுக்கு சாதகமாக பயன்படுத்த நினைத்த புலிகள் தங்களுக்கு ஜனநாயகத்தில் உள்ள ஈடுபாட்டை மிகத்தாராளமாக வெளிக்காட்டினார்கள். இதைப்பார்த்த நோர்வே இதுதான் தக்க தருணம் என்று திரு. ரணிலோடு பேசினார்கள். அவரும் தனது தாராள மனத்தை வெளிப்படுத்தினார்கள். இந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த கூட்டணி காங்கிரஸ், மற்றும் ஜனநாயகத்துக்கு திரும்பிய கட்சிகளும் விடுதலைப் புலிகளுக்கு தமது ஆதரவை வெளிப் படுத்தினார்கள். இப்போது தமிழர்களெல்லாம் ஒரு அணியில் ஒரே கோரிக்கையை விடுத்திருக்கின்றார்கள். அதாவது, தமிழீழத்திற்கு ஈடான ஒரு தீர்வை அரசு முன்வைத்தால் அதைப்பரிசீலிப்பதாக, அதாவது தமிழீழக்கோரிக்கையை புலிகள் கைவிட்டு விட்டதாக, அதன்படி நாடு பிரிக்கும் எண்ணம் புலிகளுக்கு இல்லை என்பதை உலகம் கவனித்து புலிகள் மேலும், புலிகள் தலைவர் மேலும், முக்கியமாகத் தமிழர்கள் மேலும் சர்வதேசம் ஒரு கனிவான பார்வையை செலுத்தி தமிழர்களுக்கு ஒரு நீதியான தீர்வை அரசு கொடுக்கவேண்டும் என்று அரசுக்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துள்ளது. இன்றைய நிலையில், இந்த சந்தர்ப்பத்தை தவற விட்டால் நாடு இரண்டு படுவதை, அதாவது தமிழீழம் மலர்வதை யாராலும் தடுக்கமுடியாது என்பது நல்லாகவே அரசுக்கும், சிங்கள மக்களுக்கும், சர்வதேசத்துக்கும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஆகவே அமெரிக்கா அனர்த்தத்திற்குப் பிறகு மாறியது புலிகளா? அமெரிக்காவா என்பதை நீங்களே புரிந்து கொள்ளுங்கள்.

**சுரேஸ் Surrey, U.K.**

**கேள்வி:** ஜெயலலிதா முதல்வராக வந்துவிட்டாரே இனி எப்படியிருக்கும் தமிழ் நாடு?

**பதில்:** இது நான் ஏற்கனவே தெரிவித்ததுதான். ஜெயலலிதாவுக்கு தெரியும் எதை வேண்டுமானாலும் செய்யலாம். தமிழ் நாட்டு மக்களுக்கு பணத்தைக்காட்டினால் எல்லாவற்றையும் மறந்துவிடுவார்கள் என்று. அதன்படி பணத்தைவிட்டடித்தார், முதல்வராகவும் வந்துவிட்டார். எறிந்த பணத்தை எப்படியும் எடுத்துவிடுவார், ஜெயலலிதாவா? கொக்கா? ஆனால் இந்த மக்களுக்கு இன்னும் தெரியவில்லை ஜெயலலிதா எடுக்கப்போவது இவர்களுடைய இரத்தத்தை என்பது.

அன்று பராசக்தி என்ற படத்தில் கருணாநிதி சொன்னார் வானத்தை முட்டும் கோபுரங்கள் ஆனால் மானத்தை இழந்த மனிதர்கள் என்று, அந்த பாவப்பட்ட மக்களின் பஞ்சத்தையும் பசியையும் இவர்கள் தங்கள் படாடோபத்திற்கு பாவிக்கின்றார்கள். இது இன்று நேற்றல்ல இந்தியா சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து நடக்கின்றது. என்று இந்த மக்களின் பசி, பட்டினி போவது, என்று இவர்கள் தங்கள் எதிர்காலத்தைப்பற்றி சிந்திப்பது, இந்த மக்கள் சிந்திக்கத் தொடங்கும் வரை யாரும் இவர்கள் மேல் சவாரி விடலாம்.


**MANOGARAN & CO**
**SOLICITORS**
**ADMINISTRATORS OF OATHS**

We have been recognised by the Law society as specialist advisors in Immigration and Asylum Law, And we are in the Law society's Immigration Law Panel.

**இங்கிலாந்து தேசத்து சட்டத்தரணிகள் சபையால் குடிவரவு அரசியல் தஞ்ச வழக்குகளில் விசேட ஆலோசனை வழங்கும் சட்ட நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டு, அதன் குடிவரவு அரசியல் தஞ்ச வழக்குகளில் விசேட ஆலோசனை வழங்கும் சட்ட அறிஞர் குழுவில் அங்கத்துவம் பெற்றுள்ள தமிழர் சட்ட நிறுவனம்.**

We offer friendly and professional advice on:

⇒ Immigration & Asylum Matters
⇒ Nationality Matters
⇒ Civil Litigation
⇒ Advice at Police Stations and detention centres
⇒ Employment Matters
⇒ Traffic Offences
⇒ Justices Licences

**we undertake legal aid work**

LEGAL AID FRANCHISE
A QUALITY SERVICE
Approved by The Legal Aid Board

Community Legal Service
Specialist Help Point Immigration

**Principal: S. Manogaran LLB**

**24 Hoe Street, Walthamstow,**
**London E17 4PH**

**Tel: 020 8521 5757** **Mob: 07889104194** **Fax: 020 8521 8202**

www.padippakam.com



அதுக்கு வாய்ப்பில்லை என்றால் இதுக்கு வாய்ப்பில்லை -

தயா படத்தில் ஒரே ஒரு பாடலுக்கு நடனமாடும் படி மும்தாஜிற்கு அழைப்பு விட்டார் பிரகாஷ் ராஜ். கேட்கின்ற சம்பளத்தைக் கொடுப்பதாகவும் சொன்னார். கேரக்டரோடு சேர்த்து வாய்ப்பு தந்தால் நடிக்கின்றேன் என்றார் மும்தாஜ். அதுக்கு வாய்ப்பில்லை என்றார் பிரகாஷ் ராஜ். இதுக்கு வாய்ப்பில்லை என்றார் மும்தாஜ். யாரைப்போடலாம் என்று மண்டையைப் பித்துக் கொண்டிருந்த வேளையில் கல் வீசுவோம் மாங்கா விழுந்தா விழட்டும், என சிம்ரானை நோக்கி வீசினார். பலன் கிடைத்தது ஒரு பாடலுக்கு சிம்ரான் நடனம் ஆடுகின்றார். பிரகாஷ்ராஜ் அவர் கதாநாயகனாக நடித்துத்தயாரிக்கும் தயாவைப்பற்றி இப்படிப் பெருமைப்பட்டுக் கொள்கின்றார். ஆசைப்பட்டது முன்னணி நடிகைகளுடன் நடித்து ஆட்டம் போடத் தானாம். இப்போது மீனாவுடன் நடிப்பு, சிம்ரானுடன் டப்பாங்குத்து ஆட்டம் இந்தப்படத்தில் நிறைவேறிவிட்டது. அப்ப கதாநாயகன் ஆசையெல்லாம் இல்லையா? என்று கேட்டால் இப்போதைக்கு நான் வில்லன் தான் என்று நக்கலாகச் சொன்னார் பிரகாஷ்ராஜ்.





**BIO DATA**
**சிநேகா**

பெயர் - சுஹாசினி
சினிமாப்பெயர் - சிநேகா
பிறந்த நாள் - 12 அக்டோபர்
பாய் பிரண்ட்ஸ் - அண்ணனும், அப்பாவும்
கிசு கிசு பற்றி - ஜாலியாக இருக்கின்றது
எனது பலம் - எனது மன உறுதி
எனது பலவீனம் - இளகிய மனசு
என்னைக் கவர்ந்த ஹீரோ - (பலர்) அதில் குறிப்பாக நடிகர் திலகம்
என்னைச் சந்தோஷப்படுத்துவது - அப்பா, அம்மாவின் அன்பும் அரவணைப்பும்
எனது பெரிய சொத்து - எனது குடும்பம்
தூங்குவதற்கு முன் - கொட்டாவி விடுவேன்
காதலர் - எதிர்பார்த்துக்கிட்டு இருக்கேன்
லட்சியம் - ரசிகர்களைத் திருப்திப்படுத்துற மாதிரி சவால் விட்டு நடிக்க ஒரு கேரக்டர்
உணவு - அசைவம்
உடை - நிஜமா புடவைதான்
என்னை நெகிழ வைத்தது - ஷார்ஜா ஸ்டேடியத்தில் சச்சினை சந்தித்தது
என்னை எரிச்சலடைய வைத்தது - என்முன்னால் நல்லவர் போல் நடித்து பேசுது
என்னிடமுள்ள கவர்ச்சி - சிரிப்பு
காதல் என்பது - புனிதமானது
நான் அஞ்சி நடுங்குது - இருட்டறையைப்பார்த்து
சினிமா நடிகையானது குறித்து - அதிஷ்டம்
பிடித்த வெளிநாடு - நியூசிலாந்து
நான் பயப்படுவது - மனட்சாட்சிக்கு
எனக்குப்பிடித்த பழமொழி - கற்றது கையளவு, கல்லாதது உலகளவு
படுக்கையறை வாசகம் - Be Bold In What You Stand For.

## சினிமா செய்தித்துளிகள்.

- வெளிநாடுகளில் இருவரை கால்பதிக்காத இயக்குனர் விக்ரமன், லைலா, சிநேகா, சூர்யா உடன் நான்கு பாடல்களுடனும் சுவிஸ் இற்கு சென்றிருக்கின்றார்.
- மிஸ் நியூஜெர்சியாக அமெரிக்காவில் தேர்வான ஆர்த்தி அகர்வல் வின்னர் படத்தில் பிரசாந்துடன் ஆட்டம் போட்டுக்கொண்டிருக்கின்றார்.
- ரோஜாப்பூ சின்ன ரோஜாப்பூ என்ற பிரபலமான பாட்டை எழுதிய ரவிஷங்கர், மனோஜ், லாரன்ஸ் நடிக்க வருஷமெல்லாம் வசந்தம் என்ற படத்தினை இயக்குகின்றார்.
- பிரகாஷ்ராஜ் தயாரித்த தயா படம் வணிகரீதியில் வெற்றியடைந்ததைத்தொடர்ந்து தயா என்ற பெயரிலேயேதெலுங்கில் டப் செய்கின்றார்.
- தயா படத்ததைத்தொடர்ந்து தமிழன் படத்திலும் ஒரு பாடலுக்கு நடனம் ஆடுகின்றார் சிம்ரன்.
- வினயன் இயக்கத்தில் சொந்தப்படம் தயாரிக்கின்றார் இளையராஜா.
- ஸ்ரீ படத்தில் சூர்யாவுடன் நடிக்கும் ஸ்ருதிகா, தேங்காய் சீனிவாசனின் பேத்தி.
- அன்று அகத்தியர் படத்தில் அகத்தியராக வந்து கலக்கியவர் சீர்காழி கோவிந்தராஜன், இன்று பண்ணாரி அம்மன் படத்தில் வரும் அகத்தியர் வேடத்தில் நடிக்கப்போகின்றார் அவரது மகன் சீர்காழி சிவசிதம்பரம்.
- இந்தியன், காதலர் தினம் போன்ற பிரமாண்டமான படங்களைத் தயாரித்த ஏ. எம். ரத்தினம் எனக்கு 20 உனக்கு 18 என்ற படம் மூலம் தன் மகன் ஜோதிகிருஷ்ணாவை இயக்குனராக அறிமுகம் செய்கின்றார்.
- பண்ணாரி அம்மன் படத்தில் குஷ்பு ஒரு பாட்டுக்கு நடனம் ஆடுவது தெரிந்ததே மேலும் இப்படத்தின் இசையமைப்பாளர் டி. ராஜேந்தரும் இப்படத்தில் ஒரே ஒரு காட்சியில் தோன்றுகின்றார்.
- மலையாள சூப்பர் ஸ்டார் ஜெயராம் முதன் முதலாக இரட்டை வேடத்தில் நடிக்கும் படம் நைனா. இவருக்கு ஜோடியாக கேரள அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மான்யாவும் பானுப்பிரியாவும் ஜோடியாக நடிக்கின்றார்கள். அத்துடன் இப்படத்தில் ஒரு முக்கிய அம்சம், ஒளிப்பதிவாளரும் இயக்குனருமான ராஜீவ்மேனன் இப்படத்தில் பாடியுள்ளார்.
- மனதை திருடிவிட்டாய் படத்தில் அறிமுகமான காயத்திரி ஜெயராம் ஒரு பக்கம் நடித்துக்கொண்டே இன்னொரு பக்கம் பெமினா பத்திரிகையில் ப்ரீலான்ஸ் ஜர்னலிஸ்ட்டாகப் பணியாற்றுகின்றார்.
- வருஷமெல்லாம் வசந்தம் படத்தில் மனோஜுக்கு டப்பிங் குரல் தந்திருப்பவர் டி. வி. நடிகர் விஷ்வா.

SUBA PHOTOGRAPHERS
சுபா போட்டோகிறாபேர்ஸ்
8 வருட அனுபவம் மிக்க படப்பிடிப்பாளர்
திரு குமரன் உங்கள் வாழ்வில் நிகழும் முக்கிய நிகழ்ச்சிகளை இன்றைய புதிய தொழில்நுட்பங்களைக் கையாண்டு படம் பிடித்துத் தருகிறார்.
தொடர்புகட்கு
020 8520 3336
07932 748 876



www.padippakam.com



# ரத்வத்தைக்கும் மக்களுக்கும் தொடர்ந்து விளக்கமறியல்:

செய்தி ஆய்வின்

சிறப்புப் பக்கம்

மடவளையில் பத்து முஸ்லிம் வாலிபர்கள் கொலை செய்யப்பட்ட வழக்கில் முன்னாள் உதவி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையையும் அவரின் மகன்களான லொஹான், சானுக்க ஆகியோரையும் 18ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கும்படி தெல்தெனிய நீதவான் திங்கட்கிழமை உத்தரவிட்டார். அதற்கு முன்பு நடத்தப்பட்ட அணிவகுப்பின் போது பிரதான சந்தேகநபர்களான லொஹான் ரத்வத்த, சானுக ரத்வத்த ஆகியோர் அடையாளம் காட்டப்படவில்லை. மாறாக வேறொருவரே அடையாளம் காட்டப்பட்டார்.

மிகுந்த பரபரப்புக்கு மத்தியில் இந்த அணிவகுப்பு இடம்பெற்றது. அரச தரப்புச் சட்டத்தரணி, ``சாட்சிகளின் சாட்சியங்கள் முரண்பட்டு நிற்கின்றன. சாட்சிகள் சிருஷ்டிக்கப்பட்டுவிட்டன.'' என்று கூறினார்.

படுகொலைச் சம்பவத்தில் காயமடைந்த மாலிக் என்பவர் அடையாள அணிவகுப்பின்போது ஆஜராகி இருக்கவில்லை. முக்கிய சாட்சியான இவர் அடுத்த அணி வகுப்பில் ஆஜராவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அனுருத்தவின் தற்போதைய மனைவி, லொஹான், சானுக்க ஆகியோரின் தாயார் (முன்னாள் மனைவி).

**விசேஷ சலுகைகள்**

**அரசு தரப்பு சட்டத்தரணிகள் சொன்னார்கள:**

இந்த படுகொலை சம்பவத்தின் முக்கிய சந்தேக நபர்களான லொஹான், சானுக்க ஆகிய இருவரும் சிறைச்சாலைக்குள் விசேட சலுகைகள் வழங்கப்படுவதாக நாம் அறிந்துள்ளோம். சிறைக்குள் விசேட சலுகைகள் வழங்கப்படுவதானது சட்டத்தின் சமத்துவத்தை மீறுவதுடன் நீதித் துறையையே அகௌரவப்படுத்துவதாகவும் அமைகிறது. அத்துடன் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்ட அனுருத்த ரத்வத்தை கட்டணம் செலுத்தி சிகிச்சைபெறும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.



# மடவனை முஸ்லீம்கள் கொலை வழக்கு

அனுருத்தவின் சகோதரர் ஆகியோரும் அங்கு வந்திருந்தனர். வழக்கைப் பார்ப்பதற்காக பெருந்திரளான மக்கள் நீதிமன்ற வளவில் கூடியிருந்தனர். அனுருத்தவை விடுதலை செய்யக்கோரி பலர் பதாகைகளை ஏந்தியவாறு பரது நீதிமன்றுக்கு வெளியே திரண்டிருந்தனர். நீதிமன்றத்தைச் சூழப்பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது. நீதிவான் இனோகா பி.ரணசிங்க முன்னிலையில் விசாரணைகள் நடைபெற்றன.

**ஹெலியில் வந்தார்**

வெலிக்கடை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அனுருத்த ரத்வத்தை திங்கள் காலை விமானப் படையின் விசேட ஹெலிகொப்டர் மூலம் தெல்தெனியவுக்கு கொண்டு வரப்பட்டார். தெல்தெனிய மகாவித்தியாலய மைதானத்தில் ஹெலி இறங்கியது. அங்கு கூடி நின்ற மக்களும் ஊடகவியலாளர்களுக்கும் கைகளை அசைத்துக் காட்டினார். பின்னர் அங்கிருந்து சிறைச்சாலை வாகனம் ஒன்றில் நீதிமன்றத்துக்கு கூட்டிச்செல்லப்பட்டார். இவர் சென்ற வீதியில் இருமருங்கிலும் ஆயுதம் தாங்கிய படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர். லொஹான், சானுக்க ஆகிய இருவரும் கண்டியிலுள்ள போகம்பரை சிறையில் இருந்து சிறைச்சாலை வாகனத்தில் மன்றுக்கு கொண்டு வரப்பட்டனர். அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தபட விருந்த இவ்விருவரும் தலைமுதல் உள்ளங்கால் வரை வெள்ளைத் நிறத்துணியால் மூடப்பட்ட நிலையில் நீதிமன்றத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டனர். வழக்கு அழைக்கப்பட்டதும் எதிரிக் கூண்டில் அனுருத்த ரத்வத்தை நிறுத்தப்பட்டார். அதில் சிறிது நேரம் நின்ற அவருக்கு கூண்டிற்குள்ளேயே அமர்வதற்காக ஆசனம் வழங்கப்பட்டது.

அடையாள அணிவகுப்பு ஆரம்பமாவதற்கு முன்பு இருதரப்பு சட்டத்தரணிகளும் நீதிவானிடம் தமது வாதங்களை சமர்ப்பித்தனர்.

போகம்பர சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பணிக்கப்பட்ட லொஹானும் சானுக்கவும் போகம்பரை சிறைச்சாலை வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றதாகவும் அறிகிறோம்.

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பான சுமார் 40 சந்தேக நபர்கள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டள்ளனர். ஆனால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இம் மூவருக்கும் மட்டும் சிறைச்சாலைக்குச் சென்ற உடன் நோய் ஏற்பட்டு விட்டது விநோதமானது.

போகம்பரை சிறையில் இருக்கும் லொஹானுக்கும் சானுக்கவுக்கும் சுமார் 10 பேர் வரையில் ஊழியம் செய்வதாகவும் தெரியவருகிறது. அத்துடன் சிறைக்குள் சலுகை வழங்குபவர்களுக்கு சந்தேக நபர்களின் உறவினர்கள் விருந்துகள் வழங்குவதாகவும் அறிகின்றோம்.

இந்த மூவரில் ஒருவராவது நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராகாதவர்கள். புதல்வர்கள் இருவம் 6 வாரத்துக்கு மேலாக பொலிஸாரிடம் அகப்படாம்ல் தலைமறைவாக இருந்தவர்கள். இந்த மூவருக்கும் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டும் வரை எவ்வித நோயும் வரவில்லை.

எனவே இம் மூவரின் சுகவீனம் பற்றி வைத்திய நிபுணர்களின் வைத்திய அறிக்கைகளையும் சிறைச்சாலை அதிகாரிகளின் விளக்கத்தையும் பெற வேண்டும்.

**பதில் வாதம்**

அனுருத்த ரத்வத்தையின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி விஜேவிக்கிரமரட்ண நீதிமன்றில் வாதிடுகையில் நோய் என்பது யாருக்கும் எப்போதும் வரலாம். விளக்கமறியலுக்கு போனபின் எவருக்கும் நோய் வரவேண்டும் வரக் கூடாது என நியதிகள் கிடையாது.

நோய் என்பது எங்கு எப்போதம் வரலாம். சில வேளை துன்புறுத்தல் காரணமாக கூட நோய் ஏற்பட்டிருக்கலாம். சிறைச்சாலை வைத்திய அறிக்கையை ஏற்றுக் கொள்ள இயலாதா? என்று கேள்வி எழுப்பினார்.

லொஹான் ரத்வத்தை சானுக்க ரத்வத்தை ஆகிய இருவரின் சார்பாகவும் ஆஜரான சட்டத்தரணி நிரந்தர வலலியத்தை வாதிடுகையில் அரசியல் பழிவாங்கல் குரோதம் வைராக்கியம் என்ற ரீதியில் தான் எனது கட்சிக் காரர் நடத்தப்படுகிறார். இம் மாதம் 3ம் திகதி ஆங்கில வார இதழொன்றில் எனது கட்சிக் காரர்களான இன்று அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டப்பட வேண்டியவர்களான சந்தேக நபர்களான லொஹான் ரத்வதத்தை சானுக்க ரத்வத்தை ஆகிய இருவரதும் புகைப்படங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் இன்று அடையாள அணிவகுப்பு எப்படி நடத்துவது? இது நியாயமா? என்று கேட்டார்.

இவ்வழக்கு தெல்தெனிய நீதவான் செல்வி இனோக்கா ரணசிங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இராணுவத்தைச் சேர்ந்த 31 பேர் சிவிலியன்கள் 3 பேர் ரத்வத்தையின் புதல்வர்கள் லோஹான், சானுக்க அவர்களுடன் தந்தையான அனுருத்த ரத்வத்தையுமாக 37 சந்தேக நபர்கள் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதவான் இனோகா ரணசிங்க ரத்வத்தைக்க பிணை வழங்க மறுத்ததுடன் சந்தேக நபர்கள் அனைவரையும் எதிர்வரும் 18ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன் அடுத்த தவணைக்கு முன்பாக லொஹான் ரத்வத்தை, ானுக்க ரத்வத்தை ஆகியோரின் விசேட வைத்திய பரிசோதனை அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.


## சந்தா விபரம்

சந்தாதாரர்களாக சேர்ந்து விட்டீர்களா? இல்லையேல் உடனடியாக எமது காரியாலயத்தோடு தொடர்பு கொண்டு, நம்நாட்டுக்குடும்பத்தில் ஒரு அங்கத்தவராக மாறிவிடுங்கள். நம்நாடு பத்திரிகை ஒவ்வொரு வாரமும் உங்கள் வீட்டு கதவை தட்டும்.
ஐரோப்பா முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான நம்நாட்டுக்குடும்ப அங்கத்தவர்களோடு நீங்களும் சேர்ந்து கொள்ளுங்கள். உலகத்தை உங்கள் காலடியில் நாங்கள் கொண்டு வருவோம். தொடர் கதை, கட்டுரைகள் போன்றவற்றை நீங்கள் வாசிக்க தவறியிருந்தால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

அங்கத்தவராக சேர்வதற்குரிய கட்டணம்

6 மாத சந்தா:- £30.00 12 மாத சந்தா:- £55.00

மேற்குறிப்பிட்ட இங்கிலாந்து நாணயத்திற்கு சமமான எல்லா நாட்டு பணமும் ஏற்றுக்கொள்ளப்படும். மேலும் விளம்பர அறிவுப்புகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

1A, SIBLEY GROVE, EAST HAM, LONDON E12 6SD.
T.P:- 020 85522613, 020 8472 2900
FAX:- 020 8552 2613 EMAIL:- namnadu@hotmail.com


படிப்பகம்

www.padippakam.com



# புலிகள் காப்பாற்றிய பெண்குழந்தை

நாலு வயது பெண் குழந்தை பிரிந்தா 'புலிமாமா'வுக்கு கிஸ் கொடுத்து டாட்டா காட்டிய சம்பவம் மூதூர்ப் பிரதேசத்திலுள்ள சம்பூரிலுள்ள புலிகளின் அலுவலத்தில் ஞாயிற்றுக் கிழமை காலை நடந்தது.

தன்னை அன்புடன் பராமரித்த புலிகளின் திருகோணமாலை மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கிருஷ்ணாவின் கழுத்தை கட்டிப் பிடித்த பொறுப்பேற்பதற்காக தந்தை ஆறுமுகம் செந்தில் தனது மனைவியுடன் சனிக்கிழமை சம்பூருக்குப் போனார். அவர்களுடன் கொட்டாஞ்சேனை பொலிசார் இருவரும் சென்றனர். தனது மகளை மீட்டுத் தந்ததற்காக ஆறுமுகம் செந்தில் புலிகளின் பொறுப்பாளர் ஐங்கரனிற்கு நன்றி தெரிவித்துள்ளார்.

குழந்தையின் பெற்றோரும் உறவினர் சிலரும் கொழும்பில் இருந்து

## செய்திகள்:நம்நாடு செய்திபீடம் – கொழும்பு

பிருந்தா விம்மி விம்மி அழுது பிரியாவிடை பெற்றார்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் இருந்து வியாழன் கடத்திச் செல்லப்பட்ட சிறுமியான செந்தில் பிருந்தாவை விடுதலைப் புலிகள் மீட்டுப் பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

சிறுமியை கடத்தி வந்ததாக சந்தேகிக்கப்படும் லட்சுமிகாந்தன் மதியழகன் தலைமறைவாகி விட்டார்.

கடந்த 28ம் திகதி தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல் காரணமாக கொட்டாஞ்சேனைப் பகுதியில் இருந்துகடத்திச் செல்லப்பட்ட இச் சிறுமியை விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவினர் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியான சேருவர பொலிஸ் பரிரிவிலுள்ள அல்லை இடது கரை 3 என்ற கிராமத்தில் இருந்து மீட்டுள்ளனர்.

பல சிங்களக் கிராமங்களின் மத்தியில் அமைந்துள்ள இத் தமிழ் கிராமத்திலிருக்கும் தன் தாய் வீட்டில்லட்சுமிகாந்தன் மதியழகன் சிறுமியை மறைத்து வைத்திருந்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டுப் பகுதியில் இருந்து 20 மைல் தூரத்திற்கு அப்பால் உள்ள கிராமத்திலிருந்து சிறுமியை மீட்ட விடுதலைப் புலிகள் அத்தாயையும் வேறு இருவரையும் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய மதியழகன் என்பவருக்கு சிறுமியின் தந்தை 5 லட்ச ரூபாய் கொடுக்க வேண்டியிருந்ததே இந்த கடத்தல் நாடகத்திற்கு காரணம் எனத் தெரிய வந்துள்ளது.

அச் சிறுமியை பார்ப்பதற்கு புலிகள் மக்களை அனுமதித்தனர். அச் சிறுமி இளம் சிவப்பு சட்டை அணிந்துள்ளார்.

சிறுமியை கடத்தி வந்த மதியழகன் என்பவரை கண்டு பிடிக்க புலிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மகள் பிருந்தாவை கொட்டாஞ்சேனை பொலிசாருடன்ஞாயிறு காலை மூதூருக்கு வந்தனர்.

கட்டைபறிச்சான் தடை முகாம் வரை கொண்டு வரப்பட்ட பெற்றோர் விசேட பஸ் ஒன்றின் மூலம் சம்பூர் புலிகளின் தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சம்பூரில் புலிகளின் அலுவலகத்தில் நின்ற நிறுமியைக் கண்ட தாயாரும் தகப்பனும் கட்டித்தழுவினர்.

அக் காட்சி பலரையும் கண் கலங்க வைத்தது.

"இக் குழந்தை கடத்தல் பற்றி ஊடகங்கள் மூலம் கேள்விப்பட்டோம். எமது இயக்கத்திற்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் செய்திகள் பரப்பப்பட்டன. எமது போராளிகள் மேற்கொண்ட உடனடி நடவடிக்கை காரணமாக குழந்தையை எல்லை இடது கரை 3 எனும் கிராமத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் இருந்து மீட்டோம்." என்று ஐங்கரன் கூறினார்.

திருமலை நகரில் இது போன்ற சம்பவத்தில் ஈடுபட்ட மூவரை தாங்கள் கைது செய்துள்ளதாகவும் ஐங்கரன் சொன்னார்.

"இத்தகைய செயல்களை நாம் அனுமதிக்க மாட்டோம்." என்றும் அவர் கூறினார்.

பிள்ளையின் தந்தைக்கும் எல்லை இடது கரை 3 இல் வசிக்கும் லட்சுமிகாந்தன் மதியழகன் என்பவருக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல் பிரச்சினையின் எதிரொளியாக இச் சம்பவம் நடைபெற்றுள்ளதாகவும் இக் கடத்தலில் மதியழகனும் மேலும் இருவரும் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் குளிர்பானம் வழங்கிய புலிகள் சிறுமியை கிராம சேவகர் மூலம் பெற்றோரிடம் ஒப்படைத்து வழியனுப்பி வைத்தனர்.

புறப்படும் போது சிறுமி புலி மாமா மாருக்கு டாட்டா காட்டிச் சென்றார்.

## வீதிக்கு வந்த இந்திராவின் மருமகள்கள்!

சஞ்சய் காந்தி-மேனகா தம்பதிதான் தன் தாய்க்கு தோல்வியைத் தேடித்தந்தனர் என்று ராஜீவ் காந்தியும் சோனியாவும் பழி சுமத்தினர். சஞ்சய் காந்தியும் தோல்வியில் துவண்டு போயிருந்தார்.

இந்தரா காந்தி குடுப்பத்தில் ஏற்பட்டிருந்த மனத் தளர்ச்சியைப் போக்க அப்போது மேனகா காந்தி துணிவுடன் முன்நின்று செயலாற்றினார். தனது சூர்யா பத்திரிகை மூலம் அரசியலில் ஈடுபட்டார்.

சஞ்சய் காந்தியின் பழைய நண்பர்களை அடிக்கடி வீட்டுக்கு வரவழைத்து அவர் மனதில் உற்சாகம் உண்டாக்கினார். குடும்ப நண்பர்களின் வீட்டு திருமண விழாக்களுக்கும் சினிமாவுக்கும் சஞ்சய் காந்தியை அழைத்துச் சென்று அவரை பழைய நிலைக்கு மாற்றினார்.

இந்திரா குடும்பத்தினருக்கு எதிரான கோர்ட்டு வழக்குகளையும் துணிவுடன் எதிர் கொண்டார்.

ஆனால் 1980 ஜூன் மாதம் பயிற்சி விமானத்தில் பறந்த போது எதிர்பாராத விதமாக விமானம் விழுந்து நொருங்கி சஞ்சய் காந்தி மரணம் அடைந்த போது மேனகா மனம் உடைந்து போனார். அப்போது அவருக்கு 24 வயது தான். மகன் பெரோஸ் வரண் கைக்குழந்தை.

சஞ்சய் மரணத்துக்கு பிறகு அவரது வாரிசாக மேனகா முழுநேர அரசியலில் குதிப்பாரா? மாட்டாரா? என்றெல்லாம் சஞ்சயின் அஸ்தி கரைக்கப்படுவதற்கு முன்பே பல வாதப் பிரதிவாதங்கள்

ஆனால் மேனகாவை குடும்ப அரசியலை விட்டே ஒதுக்கி வைக்கவும் தனது மகன் ராஜீவ் காந்தியை அரசியல் வாரிசாக கொண்டு வரவும் இந்திரா தீர்மானித்தார். இதற்கு மேனகா மீது இந்திரா கொண்டிருந்த வெறுப்பும் மேனகாவை அவர் தாயார் திருமதி அம்தேஸ்வர் தூண்டிவிட்டு அரசியலில் அவரை வளர்த்துவிட காட்டிய அவசரமும் ஒரு காரணம்.

நிதி விவகாரம்

தவிர 1980சட்டசபை தேர்தலின் போது காங்கிரஸ் சார்பில் திரட்டப்பட்ட நிதி விவகாரங்கள் சஞ்சய் பொறுப்பில் இருந்தன. அந்த நிதியில் ஒரு பகுதியை தன் மாமியார் அம்தேஸ்வர் ஆனந்த் இடம் கொடுத்து வைத்திருந்ததாகவும் வேறு சில நண்பர்களிடமும் தொகைகளை விட்டு வைத்திருப்பதாகவும் பேச்சு எழுந்தது. தன்னிடம் உள்ள நிதியை திருப்பித்தராததுடன் சஞ்சய் காந்தி யார் யாரிடம் நிதி கொடுத்து வைத்திருந்தார் என்பதை மேனகா மூலம் துப்பறிந்து அவற்றை வசூலிக்க முயன்றார்.

இது பற்றி புகார்கள் இந்திரா காந்தியின் கவனத்திற்கு சென்றதும் காங்கிரஸ் கட்சிக்காக வசூலிக்கப்பட்ட நிதி கட்சிக்கே உரியது. அதை மேனகாவிடமோ திருமதி அம்தேஸ்வரிடமோ கொடுக்கத் தேவையில்லை என்று கண்டிப்பாக கூறிவிட்டார்.

சஞ்சய் மரணத்துக்குப் பிறகு அடுத்த வாரிசு என்ற முறையில் ராஜீவ் காந்தி சோனியா தம்பதியர் அந்தஸ்து இயல்பாகவே உயர்ந்தது. சஞ்சய் காந்தியுடன் நெருக்கமாக இருந்த பலரும் இந்திராவின் மன நிலை அறிந்து மேனகாவை விட்டு விலகிப் போனார்கள். ராஜீவ்-சோனியாவுடன் மேனகாவின் உறவும் மகிழ்ச்சியாக இல்லை.

சண்டே இதழுக்கு ராஜீவ் காந்தி பேட்டி அளித்திருந்தார். அதுபற்றி மேனகா தன் நண்பர்களிடம் "முட்டாளின் பேட்டியை படித்துப் பாருங்கள்" என்று வெளிப்படையாக கூறினார்.

சஞ்சய் மரணத்தால் அமேதி பாராளுமன்ற தொகுதியில் நடக்கும் இடைத்தேர்தலில் ராஜீவ் காந்தியை இந்திரா நிறுத்துவார் என்பதால் மேனகாவை எதிர்க்கட்சிகள் தங்கள் பொது வேட்பாளராக ஏற்றுக் கொண்டு ராஜீவ் காந்தியை தோற்கடிக்க வேண்டும் என்று திருமதி அம்தேஸ்வர் ஆதரவு கேட்டார்.

இந்த சூழ்ச்சிக்கு மேனகா பலியாகிவிடக் கூடும் என்பது தெரிய வந்ததால் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட மேனகாவுக்கு குறைந்த பட்ச வயதான 25 வயது நிறைவடைவதற்கு 4 மாதங்கள் முன்பே அமேதி தொகுதியில் இடைத் தேர்தலை இந்திரா காந்தி நடத்தி முடித்துவிட்டார்.

வதந்திகள்

மேனகா காந்தியும் அவர் தாயாரும் இதோடு நின்று விடாமல் இந்திராவுடன் மேலும் மோதத் தயாரானார்கள். மேனகா நடத்தி வந்த சூர்யா பத்திரிகை சஞ்சய் காந்தியின் சின்னமாக இருந்தது. இந்த இதழ் ரூ20000 வரை நஷ்டத்தில் இயங்கியதால் இதழை நிறுத்திவிட்டு இதை இந்திராவின் அரசியல் எதிரிகளுக்கு விற்பனை செய்வதன் மூலம் இந்திரா காந்தி குடும்பத்துக்கு தர்மசங்கடத்தை உண்டாக்க மேனகாவும் தாயும் தீர்மானித்தார்கள்.

இந்திரா மேனகா மோதல்கள் பற்றி எத்தனையோ வதந்திகள். மேனாவுக்கு சொந்தமான குடும்ப நகைகளை இந்திரா காந்தி பறித்துக் கொண்டார் என்றும் மேனகா உயிருக்கு ஆபத்து என்றெல்லாம் வதந்திகள்.

தொடர்ந்து குடும்பத்துக்குள் நடந்த மோதல்களினால் சஞ்சய் ஆதரவாளர்கள் ஒதுக்கித்தள்ளப்பட்டனர். மேனகாவை சந்திக்க நம்பவர் 1 சப்தர்ஜங்சாலை வீட்டுக்கு வந்த சஞ்சய் நண்பர்கள் வீட்டில் வாசலில் நிறுத்தி தீவிரமாக சோதனையிடப்பட்டனர். அப்போது மேனகா விட்டில் இல்லை. என்று கூறி திருப்பியும் அனுப்பப்பட்டனர்.

சஞ்சய் பற்றி தான் எழுதிய ஒரு புத்தகத்தை சஞ்சய் நினைவு அறக்கட்டளை சார்பில் 1980 டிசம்பர் 14ல் வெளியிட மேனகா முயன்றார். ஆனால் அந்த புத்தகத்தில் இந்திரா குடும்பம் பற்றி சில ஆட்சேபகரமான பகுதிகள் இருப்பதாக சர்ச்சை ஏற்பட்டு கடைசி நேரம் விழா தள்ளி வைக்கப்பட்டது. ஆனால் புத்தகத்தில் ஒரு வரியைக் கூட மேனகா மாற்ற மறுத்துவிட்டார். பின்னர் அப்படியே அந்த நூல் வெளியானது.

மாமி- மருமகள் சண்டை

சஞ்சய் காந்தியின் தீவிர ஆதரவாளரான டம்பி என்று அழைக்கப்படும் அக்பா அகமது சஞ்சய் ஆதரவாளர்களை ஒன்று திரட்டி லட்சுமணபுரியல் மேனகா தலைமையில் சஞ்சய் காத்தியின் 5 அம்ச திட்டங்கள்-கருத்தரங்கு என்ற பெயரில் மாநாடு நடத்த முயன்றார். இதற்காக அக்பர் அகமதுவை உ.பி. முதல்வர் மூலம் காங்கிரஸில் இருந்து டிஸ்மிஸ் செய்ய ராஜீவ் காந்தி ஏற்பாடு செய்தார். காங்கிரஸ் எம்.எல்.ஏக்களில் ஒருவர் கூட இந்த மாநாட்டு பக்கம் தலைவைத்து படுக்க கூடாது என்ற தடைவிதிக்கப்பட்டது.

அரசியல் வாரிசு போர் மாமியார்-மருமகள் சண்டையாக வெடித்தது. ஒரு நாட்டின் பிரதமராக இருந்த போதிலும் இந்திரா காந்தியும் ஒரு சாராசரி மாமியார் போலவே நடந்து கொண்டார். (தொடர்ந்து வரும்)

ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்

எதில்வரும் 12. 04. 2002 முதல் 21. 04. 2002 வரை சண்டிஹோமம் மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

தேவி பூஜையில் அனுபவமும் ஈடுபாடும் கொண்ட சிறந்த பல குருக்கள்மார்களைக் கொண்டு நடாத்தப் பெறும் இந்த சண்டிஹோமத்தில் பக்தப் பெருமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சண்டிஹோமத்திற்குத் தேவையான பொருள்களை வழங்கியும், பொருள் உதவி செய்தும் பங்கு கொண்டு அன்னை ஸ்ரீ ஜெய பரமேஸ்வரியின் அருளைப் பெற்று பேரானந்தம் அடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

12. 04. 2002 காலை 9.00 மணிமுதல் 12.30 மணி வரை: அனுக்ஞை, விக்கினேஸ்வர பூஜை புண்யாஹ வாசனம்
கணபதி ஹோமம்
ஸ்ரீ தேவி மஹாத்மீக பாராயணம் ஆரம்பம் பூர்ணாஹிதி, தீபாரதனை.

12. 04. 2002 மாலை 5.30 மணி முதல் 9.00 மணி வரை : சண்டிஹோமம் பூரணாஹிதி, தீபாராதனை

13.04. 2002 முதல் 20. 04. 2002 வரை காலை 9.00 மணி மதல் 12.30 மணி வரை
கணபதி ஹோமம் ஸ்ரீ தேவி மஹாத் மீக பாராயணம்பூர்ணாஹிதி . தீபாராதனை
13. 04. 2002 முதல் 19. 04. 2002 வரை மாலை 5.30 மணி முதல் 9.00 வரை சண்டிஹோமம் பூர்ணாஹிதி, தீபாராதனை.

20. 04. 2002 மாலை 5.30 மணி முதல் 9.00 மணி வரை
சண்டிஹோமம், யோகினி பூஜை வைரவ பலி பூஜை, பூர்ணாஹிதி, தீபாராதனை.

21. 04. 2002 காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை

கணபதி ஹோமம், விஷேச சுவாசினி பூஜை கன்னிகா பூஜை, வடுக பூஜை.
சண்டிஹோமம்
மகாபூர்ணாஹிதி, தீபாராதனை, மஹாபிரசாதம்.

21. 04. 2002 மாலை 6.30 மணி முதல் 9.00 மணி வரை
அபிஷேகம், நவசக்தி அர்ச்சனை. மஹா தீபாராதனை, ஸ்ரீ மீனாஷீ அம்பாள் வலம் வருதல் - பிரசாதம் வழங்குதல்

தொடர்புகட்கு : 020 8527 3819
**2-4 Bedford Road, London E17**

www.padippakam.com



# போர் நிறுத்தம்

# பாலா அண்ணரும் தமிழ்ச் செல்வனும் பதில் தருகிறார்கள்

# தமிழ் ஆயதக் குழுக்கள் தென் இலங்கையில்

இது இவ்வாரம் நாம் உங்களுக்குத் அளிக்கும் சிறப்பு விருந்து. இத்தகைய சிறப்பு விருந்துகளை அடிக்கடி அளிக்கவுள்ளோம்.

கேள்வி: முதலில் புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றி..?

பாலா: கடந்த இரண்டு மாதங்களாக ஒரு தலைப்பட்சமாக அறிவிக்கப்பட்டிருந்த மோதல் தவிர்ப்பு உடன்பாடுகள் பெப்ரவரி 24ம் திகதி முதல் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஸ்ரீலங்கா அரசும் பரஸ்பரம் இணங்கிய ஒரு நிலையான நிரந்தர போர் நிறுத்த உடன்பாடாக நடைமுறைக்கு வந்தது.

இந்தப் போர் நிறுத்தம் எமது விடுதலைப் போராட்டத்தில் ஒரு வரலாற்றுத் திருப்பத்தைக் குறித்து நிற்கிறது. இந்தப் போர் நிறுத்த உடன்பாட்டை உறுதியான அத்திவாரம் எனலாம்.

இந்த உறுதியான அடித்தளத்தில் நின்று சகல விதமான பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து இந்த சமாதானத் தீர்வு நோக்கிய பாதையில் நாம் நடந்து செல்லலாம்.

கேள்வி: இந்த உடன்பாட்டின் முக்கிய அம்சங்கள் என்ன?

பாலா: இந்த உடன்படிட்டில் பல்வேறு முக்கிய அம்சங்கள் அடங்கியுள்ளன. முக்கியமாக இவ்வுடன்பாடு நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து தரை கடல் மற்றும் ஆகாய மார்க்கமான சகல போர் நடவடிக்கைகளுக்கும் ஓர் முற்றுப் புள்ளி வைக்கப்படுகிறது.

எல்லைப் பிரதேசங்களில் பாதுகாப்பு அரண்களிலுள்ள அரச படைகளும் புலிப்படை வீரர்களும் குறைந்தது 400 மீற்றர் இடைவேளி விட்டு தத்தமது நிலைகளில் நிலைகொண்டிருப்பர்.

கேள்வி: ஏனைய ஆயுதக் குழுக்களின் நிலைப்பாடு குறித்து...?

பாலா: போர் நிறுத்த உடன்பாடு நடைமுறைக்கு வந்த ஒரு மாத காலத்திற்குள் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர ஏனைய ஆயுதக் குழுக்கள் அனைத்தும் குறிப்பாக டக்ளஸின் ஈபிடிபி குழுவினர் நிராயுத பாணிகளாக ஆக்கப்படுவர். இவர்கள் இராணுவத்தில் சேரப்போவதாக கேட்டிருக்கிறார்கள். இது ஆரம்ப காலத்திலலிருந்தே நடந்திருந்தால் இப்போது அந்த அமைப்பில் ஒருவரும் இருந்திருக்க மாட்டார்கள். என்றாலும் அவர்கள் ஸ்ரீலங்கா படையில் இணைய விரும்பினால் இணையலாம் என நாங்கள் இணங்கியிருக்கிறோம்.

ஆனால் ஒரு நிபந்தனை. அதாவது வடக்கு கிழக்கில் இவர்கள் சேவைக்கு அமர்த்தப்படக் கூடாது என நாங்கள் சொல்லியிருக்கிறோம். அதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கமும் இணங்கியிருக்கிறது. இந்த ஒப்பந்தத்தில் அது குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது ஸ்ரீலங்காப் படையில் இணையும் தமிழ் ஆயுதக் குழு



உறுப்பினர்கள் வடக்கு கிழக்கிற்கு அப்பால் தென்னிலங்கையில் சேவைக்கு அமர்த்தப்படுவர்.

கேள்வி: அடுத்தது என்ன?

பாலா: அடுத்து முக்கியமாக வடக்கிலும் தென் தமிழீழத்திலும் முக்கிய பாதைகள்பொதுஜனப் போக்குவரத்துக்காக திறந்து விடப்படும். இதில் குறிப்பாக கண்டி-யாழ்ப்பாண நெடுஞ்சாலை இன்னும் ஒரு மாத காலத்திற்குள் முற்றாகத் திறந்து விடப்படும்.

இதன் நல்விளைவாக முழு இலங்கையுடனும் நீண்ட காலமாகத் துண்டிக்கபட்டிருந்த யாழ்ப்பாணக் குடாநாடு வன்னியுடன் இணைந்து தென்னிலங்கையுடன் பிணைக்கப்படும். இது வன்னி யாழ்ப்பாண மக்களின் பொருளாதார வாழ்வை மேம்படுத்துவதுடன் சுதந்திரமான இலகுவான செலவு குறைந்த போக்குவரத்திற்கு வழிவகுக்கும்.

கேள்வி: எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் எவ்வாறு தீர்க்கப்படும்?

பாலா: இந்த உடன்பாடு வெறும் அமைதி பேணும் ஒப்பந்தமாக மட்டும் அமையவில்லை. இப்போர்நிறுத்த உடன்பாட்டில் தமிழீழ மக்களின் அன்றாடப் பிரச்சினைகளும் அவற்றிற்குரிய தீர்வுகளும் முக்கிய அம்சங்களாக இணைக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக இந்த உடன்பாடு நடைமுறைக்கு வந்த பின்னர் ஒரு திட்டமிட்ட அடிப்படையில் மீன்பிடி மீதான தடைகள் தளர்த்தப்படும். இன்றிலிருந்து மூன்று மாதங்களிற்குள் மீன்பிடி மீதான சகல கட்டுப்பாடுகளும் நீக்கப்படும். கரையோரமாகவுள்ள இராணுவ கடற்படைத் தளங்களை அண்டியுள்ள சில பகுதிகளைத் தவிர எமது மீனவ மக்கள் சுதந்திரமாகத் தொழில் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

அடுத்ததாக இந்த உடன்பாடு நடைமுறைக்கு வரும் நாளிலிருந்து கட்டுப்பாடு விதிக்கப்பட்ட ஒரு சில பொருட்களைத் தவிர சகல விதமான அத்தியாவசியப் பொருட்களும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் முழுமையாக அனுமதிக்கப்படும்.

கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட டீசல். பெற்றோல் சீமெந்து இரும்புக் கம்பி போன்ற பொருட்கள் மக்களின் கோரிக்கை ஏற்பவும் சந்தையின் தேவைக்கு ஏற்பவும் தாராளமாக அனுமதிக்கப்படும் என இந்த ஒப்பந்தத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

எனவே இந்த உடன்பாடு செய்து கொள்வதில் எமது இயக்கம் தமிழீழ மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை வாழ்க்கைப் பிரசினைகளை சமூக பொருதாரப் பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமென்பதில் முக்கிய கவனமும் அக்கறையும் செலுத்தியிருக்கிறது என்பதை நீங்கள் கண்டு கொள்ளலாம்.

தமிழ்ச்செல்வன்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் கருத்துக்கள்

கேள்வி: ஒப்பந்தம் அமுலாவதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குழப்ப மாட்டாரா?

தமிழ்ச்செல்வன்: ஸ்ரீலங்கா அரசியலமைப்பில் சர்வாதிகாரம் கொண்டவர் ஜனாதிபதி. புரிந்துணர்வு உடன்படிக்கை நீதியானதும் நியாயமானதாகவும் உள்ளது. ஜனாதிபதி சந்திரிகா இந்த ஒப்பந்தத்தை எதிர்க்கும் சூழ்நிலை இருந்து கொண்டே

> **தமிழ்ச்செல்வன்:**
> ஸ்ரீலங்கா அரசியலமைப்பில் சர்வாதிகாரம் கொண்டவர் ஜனாதிபதி. புரிந்துணர்வு உடன்படிக்கை நீதியானதும் நியாயமானதாகவும் உள்ளது. ஜனாதிபதி சந்திரிகா இந்த ஒப்பந்தத்தை எதிர்க்கும் சூழ்நிலை இருந்து கொண்டே இருக்கும். இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளையே நாம் தற்போது பார்க்கிறோம். சந்திரிகாவைப் பொறுத்த வரையில் பேரினவாத எண்ணம் கொண்டவர். அவருக்கு தமிழ் மக்களுக்கு நீதியான நியாயமான தீர்வு கொடுப்பது என்பதில் மனதளவில் இணங்குகிற கொள்கை கொண்டவர் அல்ல.

இருக்கும். இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளையே நாம் தற்போது பார்க்கிறோம். சந்திரிகாவைப் பொறுத்த வரையில் பேரினவாத எண்ணம் கொண்டவர். அவருக்கு தமிழ் மக்களுக்கு நீதியான நியாயமான தீர்வு கொடுப்பது என்பதில் மனதளவில் இணங்குகிற கொள்கை கொண்டவர் அல்ல.

இதனை கடந்த கால அனுபவம் உணர்த்தியுள்ளது. முழுக்க முழுக்க விடுதலைப் புலிகளை அழித்து தமிழ் மக்களின் போராட்டத்தை மழுங்கடிக்கவே தனது ஆட்சிக் காலத்தைப் பயன்படுத்தியவர் சந்திரிகா அம்மையார். ஜனாதிபதியாக இருக்கும் மட்டும் இலங்கை அரசு எடுக்கும் அமைதி



சமாதான முயற்சிகளுக்கு அவ்வப்போது தடைகளை போட்டுக் கொண்டே இருப்பார் என்று தான் எண்ணுகிறோம்.

கேள்வி: இதுவரை ஒப்பந்த அமுல் எவ்வாறு முன்னேறுகிறது?

தமிழ்ச்செல்வன்: சமாதானத்திற்கான முன் நடவடிக்கைகள் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. போர் நிறுத்தத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் சமாதான நடவடிக்கைகளுக்கான முதற்கட்டமாகும்.

புரிந்தணர்வு ஒப்பந்தம் போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மட்டுமல்ல இயல்புநிலையை ஏற்படுத்தும் வகையில் பொருளாதார தடை நீக்கம் மீன்பிடித் தடை நீக்கம் நடமாட்டம் பற்றிய அம்சங்களையும் கொண்டுள்ளது. இரு தரப்பினருடைய கலந்தாலோசனையுடன் நோர்வே தயாரித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு தரப்பினருடைய திருத்தங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ளது.

நெருக்கடி நிலை நீக்கப்பட்டு இயல்பு நிலை ஏற்படுத்தப்பட்ட பின்னர். தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்ட பின்பே சமாதான பேச்சுவார்த்தை இடம்பெறும்.

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மட்டுமல்ல புலம் பெயர்ந்த மக்கள் புலிகளே தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் அவர்கள் மீதான தடை நீக்கப்பட வேண்டுமென்பதில் உறுதியாக உள்ளனர். நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலிலும் மக்கள் இதற்கு ஆணை வழங்கியுள்ளனர்.

கேள்வி: ஈ.பி.டி.பி பற்றி?

தமிழ்ச் செல்வன்: ஈபி.டி.பி. ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணி என்பன தமிழர் அபிலாஷைகளை முன்னெடுத்து செல்லவில்லை. தமிழ் மக்கள் மீது போரைத் தொடுத்தவர்களுக்கு சார்பாக நின்று போராட்டத்தை காட்டிக் கொடுத்தவர்கள் இதனால் நீண்ட கால போராட்டத்தின் விளைவாக உருவாகியுள்ள சமாதான நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்த தேவையில்லை.

பேரினவாத ஆட்சியாளர்கள் தமது அரசியல் அதிகாரத்தை நிலை நிறுத்த புலிகள் பற்றி பய உணர்வு கலந்த நிலையை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தினார்கள். ஆனால் நாம் நடத்துவது எமது இனத்திற்கான விடுதலை போராட்டமே என்பதை அங்கீகரித்து வருகிறார்கள். இதன் பிரதிபலிப்பே கடந்த தேர்தலில் சமாதானத்திற்கான ஆணையை வழங்கினார்கள்.


**FREE COMPUTER**

எமது வாசகர்களை ஊக்குவிக்கும் பொருட்டு நம்நாடு குடும்பத்தினர் ஒரு பரிசுத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

வாசகர்கள் நமநாடு பத்திரிகையிலிருந்து இந்த விளம்பரத்தைக் கத்திரித்து விளம்பரத்தோடு உங்கள் பெயர் விலாசம் தொலைபேசி எண் என்பனவற்றை எமக்கு அனுப்பி வைத்தால் அவை வரும் தமிழர் புத்தாண்டில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு அதிர்ஷ்டசாலியாக தெரிவு செய்யப்படும் வாசகருக்கு ஒரு புத்தம் புதிய கணனி (computer) பரிசாக வழங்கப்படும். விரும்பினால் நீங்கள் படத்தையும் அனுப்பி வைக்கலாம்.
அதிர்ஷ்டசாலியின் படம் நம்நாடு பத்திரிகையில் பிரசுரமாகும்.
உங்கள் களிப்பே எங்கள் விழிப்பு. காலம் தாழ்த்தாது உடனடியாக உங்கள் கூப்பனை அனுப்பி வையுங்கள்.



அனுப்ப வேண்டிய முகவரி:-
நம்நாடு பரிசுத்திட்டம்
**1A, SIBLEY GROVE, EAST HAM, LONDON E12 6SD.**


படிப்பகம்

www.padippakam.com



# The Island of Blood: இரத்தத் தீவு

நான் அவரை 24ஆம் திகதி சந்திக்கவேண்டிய நிலையில் இருந்தேன். ஏனெனில் 26இல் கொழும்புக்கு திரும்பிச் சென்று அந்த வாரப்பதிப்பிற்கு எனது செய்தியை அனுப்பவேண்டியிருந்தது. ஆனால், என்னை 26ஆம்திகதிதான் சந்திக்க முடியுமென பிரபாகரனால் தெரிவித்தார். அதற்கு முன்னர் சந்திக்குமாறு அவரைத் தூண்ட முடியவில்லை. இறுதியாக அவர் எனது பிரச்சினையை விளங்கிக் கொண்டார்.

அதாவது இந்தியப் படையினர் இறுதியாக இலங்கையிலிருந்து வாபஸ் பெற்றமை தொடர்பான எனது கட்டுரையுடன் அவரது பேட்டி இடம்பெறவேண்டியிருந்தது. பேட்டியை ஒருவாரம் கழித்து பிரசுரிப்பது சிறப்பானதாகத்

தோன்றவில்லை. பின்னர் 25ஆம் திகதி நள்ளிரவில் என்னைச் சந்திப்பதற்கு

தனித்துவமான சூழ்நிலைகளால் உருவான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பமாக அது காணப்பட்டது. வரலாற்று ரீதியான பகைவர்களான விடுதலைப் புலிகளும், ஜனாதிபதி பிரேமதாசவின் இலங்கை அரசாங்கமும் தமது பொது எதிரியான இந்திய சமாதானப் படையினரை வெளியேற்றுவதற்காக ஐக்கியப்பட்டனர். இந்தியர்களை வெளியேற்றுவது இருசாராரைப் பொறுத்தவரையும் தம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்கான தேவையாக இருந்தது. அதனால், இருசாராரும் இரகசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்தியர்களுடன் மோதலில் ஈடுபடுவதற்காக புலிகளுக்கு பிரேமதாஸ ஆயுதங்கள், தளபாடங்களை வழங்கினார். இந்தியப் படையினர் வெளியேறியதால் ஏற்பட்ட வெற்றிடங்கள் துரிதமாக புலிகளால் நிரப்பப்பட்டன. தனது



The Island of Blood
த ஐலண்ட் ஒப் பிளட் என்ற அனிதா பிரதாப் எழுதிய- உண்மை வரலாற்றை உள்ளடக்கிய- போர்ப்பிராந்திய களநிலையும் அரசியலையும் பார்வையாகக் கொண்ட புத்தகத்தில் இருந்து.......

ஏனெனில், எனது பாதுகாப்பு மிகவும் முக்கியமானது. ஆதலால் மிகவும் பாதுகாப்பான நிலவறைப் பதுங்குகுழிக்குள்ளிருந்தே நடவடிக்கைகள் தொடர்பாக அறிவுறுத்தல்களை வழங்கி வந்தேன். வலையின் நடுவில் இருக்கும் சிலந்தி போல இருந்தேன் என்று சிரித்தவாறு பிரபாகரன் கூறினார்.

வழமையைப் போன்றே இந்தப் பேட்டியும் சுமார் நான்கு மணித்தியாலங்கள் வரை நீடித்தது.

காட்டிற்குள் பிரபாகரனைச் சந்தித்தேன். தமிழ்ப் பகுதிகளில் வன்செயல்கள் இடம்பெற ஆரம்பித்திருந்தன. மீண்டும் யுத்தம். இரண்டாவது ஈழப்போர் என அதனை சகலரும் குறிப்பிட்டனர். முகாம்களிலிருந்து இலங்கைப் படையினர் வெளியேறி முதலில் தமிழர்களைத் தாக்கினர் என்பது பிரபாகரன் தெரிவித்த கருத்தாகும். உள்ளூர் சண்டையைப் பயன்படுத்தி புலிகள் மோதலில் இறங்கினார்கள் என்பது எனது விசாரணை மூலம் அறிய வந்தது. அது நன்கு திட்டமிட்ட தாக்குதல். அவர்கள ஒரே தருணத்தில் பல பொலிஸ் நிலையங்களைத் தாக்கினார்கள். 16 இராணுவ முகாம்களையும், இரு கடற்படைத் தளங்களையும் முற்றுகையிட்டனர். இலங்கைத் தரப்பில் முற்றுமுழுதாக ஆச்சரியமாக அது இருந்தது.

போர் உத்தியில் மாற்றம்

## வன்னிக் காட்டுக்குள் பிரபாகரனுடன் ஒரு சந்திப்பு:

அவர் சம்மதித்தார். அப்படி

நடந்தால் பகலில் கொழும்புக்குப் பயணத்தை மேற்கொண்டு இரவு கொழும்பை அடையமுடியும். காலக்கெடுவுக்குள் எனது கட்டுரையையும் பேட்டியைளும் நான் அனுப்பிவிடமுடியும்.

இருபத்தாறாம் இலக்கம்

இராணுவத்தை முகாம்களுக்குள்ளேயே பிரேமதாஸ தொடர்ந்து முடக்கிவைத்தார். இது ஈழத்தை பிரபாகரனிடம் பிரேமதாஸ கொடுப்பதாகவே காணப்பட்டது. இதைவிட வேறெதனை அதிகமாக அவர் கேட்கக்கூடும்? அதிகாலை 2 மணியளவில் அடர்ந்த காட்டிற்குள் இருந்த பாதுகாப்பான

பரந்துபட்ட விடயங்களை அவர் குறிப்பிட்டார். யாவற்றிலும் பார்க்க இந்தியாவை எதிர்க்கும் துணிவை எது அவருக்குத் தந்தது? என்பதை அவரிடமிருந்து அறிந்துகொள்ள நான் விரும்பினேன். நடைமுறைச் சாத்தியமற்ற விடயத்தில் ஒருவர் வெற்றியடைவது எப்படி? என்பதை

தமது செயற்பாட்டினை புலிகள் நியாயப்படுத்த முயன்றனர். எப்போதுமே சுயபாதுகாப்புக்காகத் தான் தமது

தாக்குதல்கள் என்ற பிரதிமையை ஏற்படுத்தினார்கள். ஆனால், போர் மூண்டதற்கான உண்மையான காரணத்தை ஒரு வருடத்திற்குப் பின்னர்

## இந்தியப்படையும்-பிரேமதாசாவின் ஆயதங்களும்

பிரபாகரனுக்கு குறிப்பிடத்தக்க முக்கியமானதொன்று. அவர் நவம்பர் 26ஆம் திகதி பிறந்தவர். இருபத்தாறும் அதனுடன் எந்த இலக்கத்தையாவது கூட்ட எட்டு வருமாயின் அது தனக்கு

அதிஷ்டமற்றது என்று அவர் கண்டுள்ளார். மாதத்தில் வரும் 26ஆம் திகதிகளில் எந்தவொரு யுத்தநடவடிக்கை

இல்லத்தை நாம் அடைந்தோம்.

வானிலிருந்து நாம் கால்களை நீட்டி வெளியேற சில நிமிடங்கள் எடுத்தன. யுத்த சீருடை அணிந்திருந்த பிரபாகரன் விறாந்தையில் எமக்காகக் காத்திருந்தார்.

ஹாய் என்றார்

என்னைப் பார்த்ததும். சிரித்தவாறு

அறிந்து கொள்வது எப்போதுமே ஆர்வமான விடயம்தான். அதாவது பழைய டேவிட் (தாவீது) - கோலியாத் கதை மாதிரியான விடயம்.

அனுபவத்தில் பிறந்த ஞானம்

பிரபாகரனின் பதில். அனுபவத்தில் பிறந்த ஞானம். அதுவொரு பிரபஞ்சத்திற்கான செய்தியாகும்.

பிரபாகரனிடம் கேட்டறிந்தேன். ஆனையிறவுப் பின்னடைவின் பின்னர் இது நடந்தது.

தமது அமைப்பை கெரில்லா படையாக உருவாக்கியமையே பிரபாகரனின் மாபெரும் பலமாகும். பதுங்கியிருந்து

தாக்குதல் நடத்திவிட்டு ஓடுவதில்

## தேசியத் தலைவராக உயர்ந்தார் பிரபாகரன்:

யும் அவர் நடத்துவதில்லை. அந்த நாளில் போர் நடவடிக்கைகளைத் தவிர்த்து வேறு கருமத்தில் ஈடுபடுவதற்கே அவர் முன்னுரிமை கொடுப்பார். பேட்டி கொடுப்பது போன்ற காரியங்களில் ஈடுபடுவார். மற்றைய நாட்களை இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக திட்டமிடுவதிலும் நிறைவேற்றுவதிலுமே செலவிடுவார்.

அவருடைய பிறந்ததினம் வருகின்ற வாரம் இறந்த விடுதலைப் புலிகளை கௌரவிக்கும் மாவீரர் வாரமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

வேறு என்ன வேணும்?

நானும் 'ரைம்' சஞ்சிகையின் புகைப்படப்பிடிப்பாளர் றொபேர்ட் நிக்கலஸ் பேர்க்கும் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து வன்னிக் காட்டுக்குள் புலி உறுப்பினர்களால் அழைத்துச் செல்லப்பட்டோம். 'பொப்' என்று நாம் அவரை அழைப்போம்.. என்னுடன் சேர்ந்து பணியாற்றியவர்களில் அவர் மிகவும் மதிநுட்பம் வாய்ந்தவரும். திடசிந்தை கொண்டவருமான புகைப்படப்பிடிப்பாளராவார். சிறந்த நிருபர்கள் போன்றே அவருக்கு செய்திகள் பற்றி நன்கு தெரியும். அவரின் கண்களைப் போலவே மூளையும் கூர்மையாக இருந்தது. எம்முடன் புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கமும். சிரேஷ்ட உறுப்பினர் திலீப் யோகியும் உடன் பயணம் செய்தனர். நாம் எதிர்காலம் குறித்துகலந்துரையாடினோம். பிரபாகரன் சமாதானமாக வருவதற்கு உகந்த நேரம் எனவும். தீர்வுப்பொதி தனிநாடு இல்லாமல் சுயாட்சி. பாதுகாப்பைத் தருவதாக நான் குறிப்பிட்டேன்.

மகிழ்ச்சியுடன் 'ஹாய்' என்றார். உத்தியோகபூர்வமான உரையாடலுக்கப்பால் அவரிடமிருந்து எப்போதும் நான் கேட்ட ஆங்கில வார்த்தை அதுதான். ஆனால்.

பேட்டிகளின் போது 'ஐடியாலொஜி'. 'என்ஜினியரிங்' போன்ற கொள்கைகள் பற்றிய சொற்களையோ அல்லது தொழில்நுட்ப சொற்களையோ ஆங்கிலத்தில் அவர் அடிக்கடி பிரயோகிப்பார்.

முன்னரைப்போலவே அவரின் பார்வை காணப்பட்டது. களைப்போ. துக்கமோ காணப்படவில்லை. இரண்டரை

வருடங்கள் அவரது வாழ்வில் மிகவும் கடினமான காலப்பகுதியாக இருந்தபோதும் களைப்படைந்த தன்மை அவரிடம் காணப்படவில்லை. அவருடைய தலைமயிரும். மீசையும் அப்போதும் கருமையாகவும். தடிப்பாகவும் இருந்தன. முகம் சுருக்கங்கள் இன்றி முன்பு போலவே இருந்தது. இமைகளற்ற கண்கள் முன்னர் போலவே தெளிவாகவும் கூர்மையாகவும் இருந்தன. முதற்தடவை நான் பார்த்ததைப் போன்றே அவரின் புன்சிரிப்பு பையன்கள் போன்றும் கொடுப்புக்குள்ளும் இருந்தது. கொஞ்சம் எடை கூடியிருந்ததே அவரில் நான் கண்ட சிறிய

வித்தியாசம்.. அது ஆச்சரியமானது. உலகின் மூன்றாவது பெரிய இராணுவத்திடமிருந்து தப்ப இரண்டரை வருடங்களாக ஓடித்திரியும் ஒரு புலி எடையை இழப்பதற்குப் பதில் எடை அதிகரிக்க முடியுமா? இதனை அவருக்குச் சொன்னேன்.

'உண்மையாக நான் ஓடித்திரியவில்லை. நான் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

'எனது உயர்மட்டச் சகபாடிகள் சிலர் இதற்கு எதிராக (இந்தியப் படையினருடன் மோதுவது) என்னை

எச்சரித்தனர். எவ்வளவு காலத்திற்குப் புலிகளால் தாக்குப்பிடிக்க முடியும் என ஆச்சரியம் தெரிவித்தனர். வியட்நாமை அவர்களுக்கு நான் முன்னுதாரணமாகக் காட்டினேன். உறுதியான அர்ப்பணிப்புடன் சிறிய தேசமொன்று வல்லரசுடன் போரிட முடியுமெனக் கூறினேன். போரிட வேண்டுமென முடிவு செய்த போது வெற்றி. தோல்வி குறித்து நான் கவலைப்படவில்லை. உங்களிடம் போரிடுவதற்கான திடசித்தம் இருக்கிறதா என்பது குறித்தே நீங்கள் முதலில் கணிப்பிடவேண்டும். தோல்வியுறும் அச்சத்தினால் தமது உரிமைகள். குறிக்கோளை ஒருவருமே கைவிடக்கூடாது'.

பேட்டிக்கு முன்னரும். பின்னரும் பிரபாகரனுக்கும் ஏனைய புலிகளின் தலைவர்களுக்கும் இடையிலான உறவை அவதானித்தேன். அவர்களுக்கிடையே இருந்த அந்நியோன்யம் குறிப்பிடத்தக்கதொன்றாக இருந்தது. பூட்டியிருந்த அறைக்குள் இருக்கும் பாடசாலைப் பையன்கள் போன்று தமக்குள் குசுகுசுத்து சிரித்துக் கொண்டிருந்தனர். யுத்தமும் நெருக்கடியான இரண்டரை வருடங்களும் அவர்களுக்கிடையே தனித்துவமான பிணைப்பு ஏற்பட உதவியது என்று நான் யூகித்துக் கொண்டேன். பிரபாகரனும் அப்பையன்களில் ஒருவராக மிகவும் அன்பான முறையில் கதைத்து பகிடிவிட்டுக் கொண்டிருந்தார்.

மூன்று மாதங்களுக்குப் பின்னர்

விடுதலைப் புலிகள் பிரமாதமானவர்களாக இருந்தனர். பதுங்கியிருந்து

தாக்குதல் நடத்துதல். பொறி வெடி. மிதிவெடிகள் மூலம் இந்தியப் படையினருக்கு அவர்கள் பாதிப்பை

ஏற்படுத்தினர். ஆனால். இந்திய இராணுவத்தை 'தோற்கடித்தல்' பிரபாகரனுக்குப் பாரிய விளைவை ஏற்படுத்தியது. 1990இற்குப் பின்னர் அவர்பற்றிய தனிப்பட்ட பிரதிமை மாறியது. கெரில்லாத் தலைவராக இருந்த பிரபாகரன் தேசியத் தலைவராக வளர்ச்சியடைந்தார். ஒளிப்பதிவு நாடா தயாரிப்பு யதார்த்த பூர்வமானதாக மாறியது. கெரில்லாக் குழுவாக இருந்த விடுதலைப் புலிகள் தமிழர்களின் தேசிய இராணுவமாக வளர்ச்சியடைந்துள்ளதாக அவர் கருதினார். இந்த நம்பிக்கையே ஆனையிறவு மோதலை அவர் ஆரம்பிக்க வழிவகுத்தது.

ஆனையிறவு யாழ்குடாநாட்டையும் பிரதான நிலப்பகுதியையும் இணைக்கும் முனையாகும். இந்த இலங்கை இராணுவ முகாமை புலிகள் தாக்குவதென்பது கெரில்லாக்கள் பதுங்கியிருந்து நடத்தும் தாக்குதலைப் போன்றதல்ல. இதுவொரு மரபுவழிப் போராகும். நேருக்கு நேராக இருபெரிய படைகள் ஒன்றையொன்று தாக்கும் சமர்

இதுவாகும். முதன்முறையாகப் புலிகள் நேருக்கு நேர் சமரில் ஈடுபட்டனர். முழுமையாக தோற்கடிக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதலுக்கு உதவியாக கடற்படையையும் பின்னர் விமானப்படையையும் இலங்கை இராணுவம் ஈடுபடுத்தியது.

(அடுத்த கிழமை தொடரும்)

படிப்பகம்

www.padippakam.com




# U A L

## United Amba Ltd.

## Suppliers of Spices & Dhals all over Europe

**எமது பரிசு திட்டத்தில் கலது கொண்டு**
**1000 பவுண்களை பரிசாக பெறுங்கள்**

| | | |
|---|---|---|
| வறுத்த பிட்டு மா | 1Kg | 79p |
| அவித்து அரித்த கோதுமை மா | 1Kg | 49p |
| வறுத்து அரித்த ஆட்டா மா | 1Kg | 69p |
| வறுத்த வெள்ளை அரிசி மா | 1Kg | 89p |
| உளுத்தம் மா | 1Kg | £1.79 |
| பாஸ்மதி அரிசி | 1Kg | £1.19 |
| சம்பா அரிசி | 1Kg | £1.10 |

| | | |
|---|---|---|
| பொன்னி அரிசி (பச்சை) | 1Kg | £1.10 |
| பொன்னி அரிசி (புழுங்கல்) | 1Kg | 95p |
| மைசூர் பருப்பு | 1Kg | 79p |
| உளுத்தம் பருப்பு | 1Kg | 95p |
| மிளகாய்த் தூள் | 1Kg | £2.69 |
| மல்லித் தூள் | 1Kg | £1.49 |
| வறுத்த ரவை | 1Kg | 79p |

அனைத்து வகை பருப்பு, பயறு, மா, மளகாய்த்துாள் ஆகிய பொருட்களை மலிவாகவும் சுவைத்துண்ண
அருகாமையில் உள்ள கடைகளில் **UAL** தயாரிப்புக்கள் என்று கேட்டு வாங்குங்கள்

மொத்தமாக பெற்றுக் கொள்ள தொடர்புகள்:

**Telephone:- +44 208 385 1370, Fax:- +44 208 385 1369**
**e-mail:- ualuk@yahoo.co.uk, http://www.ual.uk.com/**

# SELECT

## Estates & Lettings

**ஐரோப்பிய மற்றும் வெளிநாடுளில் இருந்தும் இங்கிலாந்தில் வீடுகள் வாங்க, முதலீடு செய்ய விரும்புவோருக்கான ஆலோசனைகளும் கடன் வசதிகளும் விசேடமாக ஒழுங்கு செய்து தரப்படும்.**

**228 High Street North, Manor Park, London E12 6SA**
www.selhouses.com
**Tel: 020 8470 1500**
**Fax: 020 8470 9800**
Mobile: 07956 150 580
E-mail:raj@selhouses.com

www.padippakam.com



# அம்மாவும் அவரின் 26 அமைச்சர்களும்



புதிய அமைச்சரவை பதவியேற்புக்காக சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபம் குளுகுளு வசதிகள் செய்யப்பட்டு பெரும் விழாக்கோலம் பூண்டிருந்தது. மண்டபத்தினுள் பெருமளவிலான மோப்ப நாய்கள் கொண்டு வரப்பட்டு வெடிகுண்டுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு பலத்த பொலிஸ் காவல் போடப்பட்டது.

நூற்றாண்டு விழா மண்டபப் பகுதி பூரண பொலிஸ் கட்டுப்பாட்டில் வந்தவுடன் அப் பகுதி வீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டன. போயஸ் தோட்டத்தில் இருந்து ஜெயலலிதா வரும் வழி நெடுகிலும் பொலிஸார் வீதியின் இரு மருங்கிலும் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தனர். நடைபாதை தடுப்பு இரும்பு வேலியுடன் சவுக்கு கட்டைகளினால் மேலும் தடுப்பு அமைக்கப்பட்டிருந்தது. பொலிஸாருடன் அ.தி.மு.கவினரும் வீதியின் இரு மருங்கிலும் திரண்டு நின்றனர்.

காலை 10.55 மணியளவில் குதிரைப் படை வீரர்களின் அணி வகுப்புடன் ஜெயலலிதாவின் கார் நூற்றாண்டு மண்டபத்துக்கு வந்தது. ஜெயலலிதாவை தலைமைச் செயலாளர் சங்கர் வரவேற்று மேடைக்கு அழைத்துச் சென்றார். அப்போது அமைச்சர்கள் எழுந்து நின்று வணக்கம் செலுத்த அ.தி.மு.க தொண்டர்கள் வாழ்த்துக் கோஷங்கள் மண்டபத்தை அதிரவைத்தன.

ஆளுநர் ராம்மோகன் ராவ் 11 மணிக்கு தனது செயலாளர் ஷீலா பிரியாவுடன் விழா மண்டபத்துக்கு வந்தார். ஆளுநரை தலைமைச் செயலர் சங்கர் வரவேற்று மேடைக்கு அழைத்து வர அரங்கத்திலிருந்த அனைவரும் எழுந்து நின்று ஆளுநருக்கு மரியாதை செலுத்தினர். விழா மேடையில் வைத்து ஆளுநருக்கு பூங்கொத்து கொடுத்து வரவேற்ற ஜெயலலிதா தனது அமைச்சர்களை ஆளுநருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

பின்னர் பதவி யேற்கும் வைபவம் ஆரம்பமாகியது. முதலமைச்சருக்கும் அமைச்சர்களுக்கும் பதவிப் பிரமாணமும் இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைக்குமாறு ஆளுநரை தலைமைச் செயலர் சங்கர் அழைத்தார்.

முதலில் ஜெயலலிதாவுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்த ஆளுநர் அதன் பின்னர் அமைச்சர்களுக்கும் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். தமிழில் பதவிப் பிரமாண உறுதிமொழி எடுத்துக் கொண்ட ஜெயலலிதா ஆண்டவன் பெயரால் பதவியேற்றுக் கொண்டார்.

பதவியேற்பு விழா முடிவடைந்ததும் தேசிய கீதம் இசைக்கப்பட்ட. அதன் பின்னர் ஜெயலலிதா அமைச்சர்கள் ஆளுநர் ராம் மோகன் ராவுடன் இணைந்து புகைப்படம் எடுத்துக் கொண்டனர். அத்துடன் ஆளுநர் ஜெயலலிதாவிடம் அமைச்சர்களிடமும் விடை பெற்றுச் சென்றார்.

பதவி ஏற்றுவிட்டு விழா அரங்கில் இருந்து விடை பெற்றபோது மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கும் எனக்கு உணர்ச்சிகளை விளக்குவதற்கு வார்த்தைகள் இல்லை. இந்த நேரத்தில் தமிழ் நாட்டு மக்களுக்கு குறிப்பாக ஆண்டிப்பட்டி மக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்று கூறினார்.

விழா முடிந்ததும் ஜெயலலிதா வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார். அமைச்சர்கள் செங்கோட்டைக்குச் சென்றனர். விழாவில் அ.தி.மு. எம்பிக்கள் எம்.எல்.ஏக்கள் நீதிபதிகள், உயர் பொலிஸ் அதிகாரிகள், தொழிலதிபர்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்ட போதிலும் அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது நடிக. நடிகையர் பட்டாளமே.

நடிகர் சங்கத் தலைவர் விஜயகாந்த், மனோரமா, கமல்ஹாசன், பிரபு, கே.பாக்கியராஜ், பூர்ணிமா, சத்தியராஜ், விஜயசாந்தி, ரம்யாகிருஷ்ணன், மீனா, குஷ்பு, இயக்குநர் சுந்தர்.சி, இயக்குநர் பாரதிராஜா, பாண்டியராஜன், ரகுவரன், விஜயகுமார், மஞ்சுளா, எஸ்.எஸ்.சந்திரன், ராதாரவி, பிரசாந்த், முரளி, தியாகராஜன், லிவிங்ஸ்டன், வடிவேலு, ரஞ்சிதா, அம்பிகா, ராதா, அருண்குமார், மன்சூர் அலிகான், குண்டு கல்யாணம், தலைவாசல் விஜய், திரைப்பட தயாரிப்பாளர் சங்கத் தலைவர் இப்ராஹிம் ராவுத்தர், தயாரிப்பாளர் ஜீ.வி., பிரமிட் நடராஜன், இயக்குநர் கே.எல்.ரவிக்குமார், பாலா, ராஜகுமாரன், தயாரிப்பாளர் சித்ரா லட்சுமணன், பாடகி பி.சுசீலா, இசையமைப்பாளர் தேவா உட்பட பெரும் திரளானோர் கலந்து கொண்டனர். மனோரமா ஜெயலலிதாவை கட்டியணைத்து முத்தம் கொடுத்து வாழ்த்தினார்.

ஜெயலலிதா மீண்டும் முதல்வராகப் பதவியேற்ற நிகழ்ச்சி தூரதர்ஷன் தமிழ் ஒளிபரப்பு, ஜெயா டி.வி. போன்றவற்றில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. வானொலியிலும் நேரடி அஞ்சல் செய்யப்பட்டது. சென்னை சேப்பாக்கம் ஏம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் அமைந்துள்ள பெரிய திரையிலும் காட்டப்பட்டது.

பதவியேற்பு நிகழ்ச்சியின் போது அனுமதி அட்டை இல்லாத எவரும் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை. அ.தி.மு.க முக்கியஸ்தர்கள் கூட உள்ளே செல்ல முடியாமல் தவியாய்த் தவித்தனர். இதற்கிடையில் பழைய அமைச்சரவையில் இருந்த அமைச்சர்களில் 10 பேருக்கு புதிய அமைச்சரவையில் இடம் கிடைக்கவில்லை. இஸ்லாமிய சமுதாய அமைச்சராக இருந்த அன்வர் ராஜாவுக்கும் இந்த அமைச்சரவையில் இடம் கிடைக்காமையினால் புதிய அமைச்சரவையில் ஒரு முஸ்லிம் அமைச்சர் கூட இடம்பெறவில்லை.

பதவியேற்பு விழாவில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் க.அன்பழகன், சென்னை மேயர் மு.க.ஸ்டாலின், ஆகியோரும் கலந்து கொண்டனர். விழா தேசிய கீதத்தில் தொடங்கி தேசியகீதத்துடனேயே முடிவடைந்தது. ஆனால் பொதுவாக விழாக்களில் தமிழ் தாய் வாழ்த்துத்தான் முதலில் பாடப்படுவது வழக்கம். இவ்விழாவில் முதலில் தேசிய கீதமும் பின்னர் தான் தமிழ்த் தாய் வாழ்த்தும் இசைக்கப்பட்டன.

ஜெயலலிதாவின் 54 ஆவது பிறந்தநாளின் போது அமைச்சர் பொன்னையனைத் தவிர சகலரும் ஜெயலலிதாவின் காலில் விழுந்து வணங்கி ஆசீர்வாதம் பெற்றனர். ஆனால் பதவியேற்பு விழாவின் போது எந்த அமைச்சரும் ஜெயலலிதாவின் காலில் விழவில்லை.

ஜெயலலிதாவின் உடன் பிறவா சகோதரியான சசிகலா ஜெயலலிதாவுடன் மேடையில் அமராமல் பார்வையாளர் வரிசையில் அமர்ந்திருந்தது அனைவரையும் வியப்பிலாழத்தியது. புதியஅமைச்சரவையில் 27 பேர் அங்கம் வகிக்கின்றனர். இவர்களில் 13 பேர் புதுமுகங்களாகக் காணப்பட்டனர்.

## காஞ்சி சங்கராச்சாரியாருக்கு கூடுதல் பாதுகாப்பு

தொலைபேசி மிரட்டல் எதிரொலியாக காஞ்சி சங்கராச்சாரியாருக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. சங்கர மடத்திலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

காஞ்சி சங்கராச்சார்யார்களான ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் மற்றும் விஜயயேந்திரர் ஆகியோருக்கு திங்கட்கிழமை டெலிபோன் அழைப்பு வந்தது.

அதில் பேசிய நபர் மிரட்டல் விடுத்துள்ளார். இதையடுத்து இருவருக்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விருவருக்கும் ஏற்கனவே 'வை பிரிவுப் பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்தது.

ஆயுதம் ஏந்திய பொலிசார் அவருடன் சென்று வந்தனர். தற்போது மிரட்டல் வந்துள்ளதையடுத்து கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. தற்போது குஜராத்தில் வன்முறைச் சம்பவங்கள் நடந்து வருவதால் முன்னெச்சரிக்கையாக கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சங்கராச்சாரியாருக்கு பாதுகாப்பாக சப் இன்ஸ்பெக்டர் உட்பட நான்கு பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வெளியில் சென்றால் பாதுகாப்பிற்குச் செல்ல கூடுதல் பொலிசாரை அனுப்பவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதேபோல் சங்கரமடத்திற்கும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டள்ளது.

முன்பு சங்கரமடத்தின் நுழைவு வாயிலில் இரு பொலிசார் இரவு பாதுகாப்புப் பணியில் அமர்த்தப்பட்டிருந்தனர். தற்போது மடத்தை சுற்றி இரவு பாதுகாப்புப் பணியில் ஈடுபடக் கூடுதலான பொலிசாரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இது தவிர சங்கராச்சாரியாருக்கு தனிப்பட்ட பாதுகாப்பிற்கு கூடுதலாக இரண்டு பொலிசார் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## இலங்கை ஜனாதிபதியைக் கண்டிக்குமாறு வாஜ்பாயைக் கோருகிறார் நெடுமாறன்

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட்டுள்ள புரிந்துணர்வு உடன்பாட்டை எதிர்க்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கண்டிக்க வேண்டும்என தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார். இது பற்றி மேலும் அவர் தெரிவிக்கையில்: இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்கா முன்னர் ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவும் ஒப்பந்தம் கைச்சாத்திட்ட போது அப்போது பிரதமராக இருந்து ஆர். பிரேமதாஸ எதிர்த்தார். இப்போது விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கைச்சாட்திட்ட ஒப்பந்தத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்க்கிறார். இவர்கள் தங்கள் அரசியல் ஆதாயத்துக்காக தமிழர்பிரச்சினையை பயன்படுத்த நினைக்கிறார்களே தவிர இந்தப் பிரச்சினைக்கு சமூகத் தீர்வை அவர்கள் விரும்புவதாகத் தெரியவில்லை. ஆனால் கடந்த முறையைவிட இப்போது ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த உடன்பாட்டை அவர்கள் விரும்புவதாகத் தெரியவில்லை. ஆனால் கடந்த முறையைவிட இப்போத ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த உடன்பாட்டை உலக நாடுகள் பெரிதும் வரவேற்கின்றன. போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க நோர்வேகுழுவும் வந்துவிட்டது.இதனால்இந்த உடன்பாட்டைச் சீர்குலைக்க இந்த உடன்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகப் பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார். ஜனாதிபதி சந்திரிகாவின் இந்தச் சீர்குலைப்பு முயற்சியை பிரதமர் வாஜ்பாய் கண்டிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

### 610 அடி நீளத்தில் பாற்சோறு

சிரச எவ்.எம். வானொலிச் சேவை தனது எட்டாவது வருட நிறைவை கொண்டாடுமுகமாக 610 அடி நீளத்திலும் இரண்டரை அடி அகலத்திலும் பாற்சோற்றை மேசையில் பரப்பி சாதனை நிலைநாட்டியுள்ளது. 150 பேர். 2000 தேங்காய்களைத் துருவி. ஒரு தொன் அரிசியையும் பொங்கி இந்த பாரிய பால் சோற்றை சமைத்துள்ளனர். இது உலகிலேயே மிகப் பெறியது என்று கின்னஸ் புத்தகத்தில் பதிவாக உள்ளது. எமது முயற்சி விளையாட்டுத் துறை அமைச்சினால் கண்காணிக்கப்பட்டது. கின்னஸ் புத்தகத்தில் எமது சாதனை இடம் பெறுவதற்கு நாம் விண்ணப்பிப்போம் என்று சிரச எவ்.எம். வானொலி சேவையின் இயக்குனர்களில் ஒருவரான கிங்ஸ்லி ரத்னாயக்க தெரிவித்தார்.

படிப்பகம்

www.padippakam.com



## இலக்கியப் பக்கம்

# இலக்கிய 'காய்ச்சல்': பார்த்தசாரதியும் வாலியும்

கவிஞர் வாலிக்கும் எழுத்தாளர் நா.பார்த்தசாரதிக்கும் கொஞ்சநாளாய் ஏதோ லடாய்.

நான் ஒன்னும் செய்யலப்பா அந்த மனுஷனுக்கு என் மேல் கொஞ்சம் காய்ப்பு. சினிமாப் பாட்டு எழுதி நான் புகழோடு திரிவது தான் இதற்கு காரணம் வேறு நமக்குள் எந்த பிச்சல் பிடுங்கல்களும் இல்லை என்று வாலி தன் வாழ்க்கை வரலாற்றில் எழுதுகிறார்.

இந்த வரலாற்றை எழுதிச் செல்லும் கவிஞர் வாலி சில சுவையான சம்பவங்களை எடுத்து முன்வைக்கிறார்.

புகழ் பெற்ற நாடகக் கலைஞர் டி.கே. சண்முகம். பகவதி ஆகியோருடன் கவிஞர் வாலி பேசிக் கொண்டிருந்த வேலையில் எழுத்தாளர் நா.பா.அங்கே வந்திருக்கிறார். கவிஞர் வாலி மீது ஒரு அசூசை பார்வையை வீசினார்.

''மிஸ்டர் வாலி இதென்னையா இந்த பெயரை வைத்திருக்கிறீர் உமக்கு வேற பேர் ஒன்னும் கிடைக்கலியா''

''ஏன் வாலி நல்ல பேர் தானே''

''என்னா நல்ல பேர் ஒரு அர்த்தம் இல்லாத பேரு''

''அப்பிடி இல்ல நா.பா. நாம ஒருத்தரோடு பேசிக்கிட்டு இருந்தா. அவருடைய அறிவிலே பாதி நமக்கு வந்திருமாம். அது தான் வாலி என்ற பெயருக்கு அர்த்தம்.

''அடடா அப்படியா? அப்ப நீர் பெரிய புத்திசாலியாக இல்லே இருக்கனும். உம்ம பார்த்தா அப்படித் தெரியல்லயே''

''என்ன செய்ய நா.பா. இதுவரைக்கும் ஒரு புத்திசாலியும் என் முன்னே நின்று பேசல்லியே'' என்றார் கவிஞர் வாலி நா.பா.வின் முகம் தொங்கிவிட்டது.

நாடகக் கலைஞர்கள் இடி...இடி.. என சிரித்தார்கள்.

பாவம் நாபா அசந்து போனார். என்றாலும் விடாமல் இன்னோர கேள்விக்கணையை வீசினார்.

ஜயா வாலி நீா என்னதான் எழுதினாலும் கவியரசர் கண்ணதாசன் ஆகிவிட முடியாது உமது பெயருக்கு பின்னே நீர் கவியரசு என்று போட்டுக் கொள்ள முடியாது. அவரு மகாகவி நீர் கத்துக்குட்டி? இப்படிச் சொல்லி கை கொட்டிச் சிரித்திருக்கிறார்.

நாடகக் கலைஞர்கள் சிரிக்கவில்லை. என்ன நா.பா இப்படி பேசுராரு என ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்து கேள்வியை போட்டுக் கொண்டார்கள்.

கவிஞர் வாலி ஒரு வெற்றிலைப் பிரியர். சொத சொத வென வாயை குதப்பிக் கொண்டிருக்கும் அவர் பளிச்சென வெற்றிலையைத் துப்பிவிட்டு வந்து சாவதானமாக அமர்ந்து கொண்டார்.

நா.பா. கண்ணதாசன் மகாகவிதான் நான் ஒத்துக்கிறேன். கவியரசர் என்பது கூட அவருக்கு பொருத்தம் தான். அதையும் ஒத்துக்கறேன். அதுக்கு நான் என்ன செய்ய ஏற்கனவே கவியரசர்பட்டம் எனக்கு கெடைச்சிருச்சே.

என்னது கிடைச்சிருச்சா என்ன கனவு கண்கிறீரா?

நா.பா நடுங்கித் தான் போனார். கேள்வி கூட கோபமாகத் தான் பறந்து வந்தது.

வாலி அமைதியாகச் சிரித்தார். நா.பா. நீங்க ராமாயணத்தை கரைச்சு குடிச்சவர். மேடையிலேயே பிரசங்கம் எல்லாம் பண்ரீர். எத்தனையோ பெயர்களுக்கெல்லாம் அர்த்தம் அர்த்தமாக புட்டு புட்டு வைக்கிறீர். வாலி என்பதற்கு கவியரசர் என்று ஓர் அர்த்தம் இருக்கிறதே இது கூடவா உமக்கு தெரியல...!

நா.பா வெலவெலத்துப் போனார். நாடகக் கலைஞர்கள் இடி இடி என கைகொட்டிச் சிரித்தார்கள்.

# பாடகர் எஸ்.ஜி. சாந்தன்

இன்று தமிழர்கள் எங்கேல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் மிக நன்றாக அறியப்பட்ட பாடகர் எஸ்.ஜி. சாந்தன். இவர் தமிழீழத் தேசியத் தலைவரின் விருதினைப் பெற்றவர். கம்பீரம் தொனிக்கும் தன் குரலால் தமிழீழ எழுச்சிப் பாடல்களை அனைவரும் கேட்கும் வண்ணம் பரப்பியவர் இவர்.

எழுச்சிப் பாடல்களில் அதிகமான பாடல்களைப் பாடியவரும் இவரே. வீதிகள் தோறும் ஊர்கள் தோறும் மக்களின் முன்னினையில் பாடித் தன்னுடைய பாடல்களின் மூலம் தமிழீழத் தேசிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதில் கணிசமான பங்கு இவருக்குண்டு. இந்த மண்ணுக்குரிய மனிதனாகப் போராளிகளுடன் இணைந்து நின்று அவ்வப்போதெல்லாம் போர்க்களத்திலும் பணிபுரிந்திருக்கிறார்.

ஒரு மாமாங்கக் காலம் (பன்னிரண்டு ஆண்டுகள்) எமது விடுதலைப் போராட்டத்துடன் தன்னைப் பிணைத்துக் கொண்டு எழுச்சிப் பாடல்களினூடாக இசை பணி செய்து வருகிறார். இவர் ஒரு பாடகர் மட்டுமல்ல ஹரிச்சந்திரா சத்தியவான் சாவித்திரி போன்ற இசை நாடகங்களினூடாக ஒரு நல்ல நடிகராகவும் தன்னை அடையாளப்படுத்தி வருகிறார்.

வீடியோத் திரைப்படங்களில் நடித்த அனுபவம் இவருக்குண்டு. மக்களின் மனங்களில் தனிச்சிறப்பிடம் பெற்ற பாடகர்.

அவர் மேடைப் பாடகராக இருந் தாயக விடுதலைப் பாடகராக வந்தது இப்படித்தான்:

இந்திய இராணுவம் எனது மண்ணில் இருந்த காலத்தில் மாவீரர் நாளுக்காக கிளிநொச்சியில் பெரு கணேசன் என்பவர் ஒரு பாடலை இயற்றியிருந்தார். அந்தப் பாடலை பின்பு புதுவை அண்ணா இந்த மண் எங்களின் சொந்த மண் என்ற ஒலிப்பதிவு நாடாவில் என்னைப் பாடவைத்தார்(அப்போதும் அதற்கு முன்பும் நான் என்னுடைய பெயரில் இசைக்குழு ஒன்றை வைத்திருந்தேன்) தொடர்ந்து பாடி வருகிறேன்.

# எழுக யாழ்ப்பாணமே

கூடு விட்டுக் கூடுபாய்ந்து
குடாநாட்டில் கொலுவிருக்கும்
ஏழு முகங்களுடை
ஆயிரந்தலைவாங்கி. அபூர்வ சிந்தாமணி....
அந்தக் காவல் முனியின் வேள்விக்காய்
காத்திருக்கும் எமது யாழ்ப்பாணமே!
ஆனையிறவானாலும் ஆற்றின் விளிம்பின்
அருகுடையாலும்
கீரிமலையாலும்
ஊர்காவல் பருத்தித்துறையாலும்
பாலியானும் நாவற்குழியானுமென
அந்த எழுதிசைப் பாலகபின்
கடாட்சத்துக்காய் காத்திக்கும் எமது
யாழ்ப்பாணமே!
கட்டுங்கள் உடனே கட்டளையிட்ட
அன்புக்கடிமையின் ஆசையினாலன்று
முற்றவெளியில் முறிந்த ஒன்பது தூண்களும்
நிமிர்ந்து
ஒல்லாந்தர் கோட்டையின்
தூக்குமரத்து தூண்களின்
வரவுக்காய் காத்து நிற்கும் எமது யாழ்ப்பாணமே!
ஒன்பது ஆண்டுகள் முன்னே துலங்கிய
யாழ் நகர் கண் முன்னே உதிக்கும்
முற்றவெளியிலும் பண்ணைக் கரையிலும்
காத்துச் சுகமாய் வீசிச் செல்லும்.
கோட்டையில் அந்நியர் நூதனம் பார்க்கும்
தூக்கு மேடை யொன்றிலிருந்தது கண்டு
அதிசயித்து கணகள் அகலத் திறக்கும்.
தினகரன் விழாவின் வாண வேடிக்கைகள்
வானத் தக்கெங்கும் வர்ணம் காட்டும்.
கள்ளக் கறுவல் கடைசியாய் எழுந்து
சவாரியில் முன்னே பாய்ந்து முந்தும்.
யாழ் பொறித்த மாநகர் மண்டபத்தில்
முத்தமிழ்க் கலைகளும் முனைப்பாய் நடக்கும்.
நூலகத்தில் மாணவர்கள் நுழைந்தாங்கியிருந்து
வித்தைகள் கற்று வினைகள் நிகழ்த்துவர்.
திறந்த வெளி அரங்கும் வீரச்சிங்கம் மண்டபமும்
இறுதியாய் ரிம்மரும் ரீகல் படமாளிகையும்..
முனியப்பர் கோயிலின் முன்னே வெளியிலும்
முற்றவெளி முழுதும் கடற்கரை மணலிலும்
ஊர்வலங்கள் கூட்டங்கள் மேதினத்து நிகழ்வுகள்
நெஞ்சில் கனத்து நினைவுகள் நெருடும் எமது
யாழ்ப்பாணமே!
கீரிமலையில் மீண்டும் அந்தியோட்டி
நாளை நடக்கும் நிச்சயமாய்.
சன்னதியில் காவடிகள் கரங்கள் ஆடும்
நயினையில் பக்தர்கள் தேரை இழுப்பர்.
விகாரையைத் தொழுவர்
பாலைத்தீவு கச்சத்தீவு ஆண்டவரைத் தரிசிக்க
வள்ளங்கள் படகுள் கடலைக் கிழிக்கும்
கதிர்காமக் கந்தனைக் காணபதங்காயங்கே
மாணிக்க கங்கையில் குளிப்பதங்காயங்கே
மீண்டும் மீண்டும் ஆயிரமாயிரமாய்
ஊரெல்லாம் கூடும் நெடும் பயணந் தொடங்கும்.
சிவனொளிபாத உச்சியில் நின்று
உதய சூரியனைக் காண்போம் விரைவோம்.
சுடுகாடும் நெருப்பும் வெள்ளமும் புயலும்.
ஒருபோதும் மக்களைத் தடுத்திடமாட்டா
நேராய் நெடும்பயணம் போரிலே நாம் நடப்போம்.
எழுக யாழ்ப்பாணமே
எழுக எழுகவே.

நன்றி: ஆச்சி


## MARKANDAN & CO SOLICITORS

**Business Analyst £30,000 + Benefits**

We are a Legal Service Commission franchised firm with more than one million annual turn over. We are planning to expand the practice to other categories of Law with the partnerships.

We are looking for an experienced Business Analyst to be responsible for the design and maintenance of a three years business plan and the external analysis of business and competitors. You will be responsible for building relationships between employees, clients, sub contractors.

***Here's what you need to join our team.......***

- Degree in Business Management
- A proven track record of procedure and reporting system implementations
- Strong Excel skills, a knowledge of Access and Word would be advantageous
- Previous experience in a legal firm is essential
- Working knowledge in Tamil Language would be advantageous

If you think you're up to the challenge then please fax your CV to 020 8514 8303 for the attention of Manager Administration or email mm@markandan-solicitors.co.uk

www.padippakam.com



# குடும்பம்

## குழந்தையின் வளர்ச்சி எவ்வகையில் அமைகிறது

**குழந்தையின் வளர்ச்சி எவ்வகையில் அமைகிறது?**

தன் உணர்வுகளை அது எவ்வாறு வெளிப்படுத்துகிறது?

மூன்றாம் மாதத்தில் இருந்து: குழந்தையின் அழுகை குறைய ஆரம்பிக்கும். ஒரே மாதிரியாக அழாமல் வெவ்வேறு விஷயங்களுக்கு வெவ்வேறு மாதிரி அழும். அத்துடன் சிரிக்கக் கற்றுக் கொள்ளும்.

4 மாதங்களில்: குழந்தையின் அழுகையில் ஒரு உறுதி தெரியும். ஒரு சில சப்தங்களை எழுப்பும்.

பேசினால் பேச்சு வருகிற திசை நோக்கி பார்க்கும். சிரிக்கும்.

5 மாதங்களில்: வினோதமான சப்தங்களை எழுப்பி மற்றவரது கவனத்தைத் திருப்ப முயலும்.

6 மாதங்கயில்: பா.மா.தா. என ஒற்றை வார்த்தைகளைப் பேச முயற்சிக்கும் வெவ்வேறு விதங்களில் அதிர்வுகளில் பேசும்.

10 முதல் 12 மாதங்களில்: அம்மா, அப்பா தாத்தா போன்ற வார்த்தைகளைப் பேச ஆரம்பிக்கும் சிரிப்பது களைப்பது இருமுவது போன்றவற்றை மற்றவரைப் பார்த்து தானும் செய்து காண்பிக்கும்.

12 முதல் 15 மாதங்களில்: சின்னச் சின்ன கட்டளைகளைப் புரிந்து கொண்டு மாட்டேன் என்று சொல்ல ஆரம்பிக்கும். பாட ஆரம்பிக்கும். ஒரே ஒரு பிரத்தியோகமான வார்த்தையைப் பிடித்துக் கொள்ளும்.

15 முதல் 18 மாதங்களில்: முத்தம் கொடுப்பது என்றால் என்ன என்று தெரிந்து கொள்ளும். கேட்டால் முத்தம் தரப் பழகும். டாட்டா, பை போன்ற சின்ன சின்ன வார்த்தைகளைக் கற்றுக் கொண்டு உபயோகிக்கும்.

18 முதல் 24 மாதங்களில்: மூன்று வார்த்தைகளை வைத்து ஒரு வாக்கியம் அமைத்துப் பேசக்கற்றுக் கொள்ளும். இப்போது குழந்தையால் மொத்தமாக இருபது முதல் ஐம்பது வார்த்தைகள் வரைப் பேச முடியும்.

2 முதல் 3 வயதில்: நிறைய ஒற்றை வார்த்தைகளைப் பேச ஆரம்பிக்கும். வார்த்தைகளை ஒன்றோடு ஒன்று இணைத்துப் பேசக் கற்றுக் கொள்ளும்.

### பிள்ளைகளுக்கு பொக்கட் மணி கொடுக்கலாமா?

பாடசாலை பிள்ளைகள் பொக்கட் மணி எனப்படும் கைக்காசு கேட்டு அடம் பிடிப்பதால் பெற்றோர் எவ்வித எதிர்ப்புமின்றி பணம் கொடுக்கிறார்கள்.

இது பெரும் தவறு. அதற்கான காரணங்கள்.

- அடம் பிடித்து நிறைய சாதிக்கலாம் என்ற எண்ணம் பிள்ளையிடம் ஏற்படும்.
- பிள்ளை கண்டதை வாங்கித் நாப்பிடுவதால் வருத்தம் வரும்.
- கைக் காசு இல்லையே என்று ஏங்கும் ஏனைய பிஞ்சு உள்ளங்களை வேதனைப்படுத்தும்.

### பெற்றோரின் சண்டை...

அன்று என் தோழி கீதாவுடன் பேசிக் கொண்டு இருக்கும் போது அவள் சொன்னாள்.

என் பெண் ஜெயஸ்ரீ இப்போதெல்லாம் ரொம்ப மாறிவிட்டாள். 9 வயது தான் ஆகிறது. எதற்கெடுத்தாலும் கத்துகிறாள். உணர்ச்சிவசப்படுகிறாள். ஆவேசமடைகிறாள். பொறுமையே இருப்பதில்லை. மற்றவர்களிடம் சண்டை போடுகிறாள். முரட்டுத்தனமாக என்னிடம் நடந்து கொள்கிறாள். வீட்டிற்கு விருந்தினர் நண்பர்கள் வந்திருந்தாலும் நாகரீகமில்லாமல் நடந்து கொள்கிறாள்.

எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. ஒரே பெண் என்பதால் என் கணவரும் செல்லம் கொடுத்து ஒன்றுமே சொல்வதில்லை.. அவள் போனவுடன் நீண்ட நேரம் அவள் சொன்னதை பற்றி யோசித்துக் கொண்டே இருந்தேன்.

நான் கல்லூரி ஒன்றில் பணி புரியும் ஆசிரியை என்னிடம் ஏதாவது ஆலோசனை கிடைக்கும் என்று தான் கீதா இவற்றையெல்லாம் சொன்னாள். ஒரு வாரம் கழித்து அவளுக்கு ஒரு லெட்டர் எழுதினேன்.

குழந்தைகளின் நடவடிக்கை பெரும்பாலும் குடும்பத்திலிருந்தே ஆரம்பமாகிறது. ஒரு குழந்தை தன் ஆக்ரோஷ குணத்தை பெற்றோரிடம் இருந்தே பெறுகிறது. குடும்பத்தினுள் நிலவும் சச்சரவுகள் இந்த குணத்தை தூண்டக் கூடியவை.

பெற்றோரிடம் ஏற்படும் சண்டை வாக்குவாதங்கள் அல்லது சகோதரர்களிடையே நிலவும் பகைமை இவையும் குழந்தைகளிடையே வெகுவாக பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவை.

குழந்தைகளின் வளர்ச்சியில் சுமுகமான குடும்ப உறவுகள் முறையின் நேர்த்தி ஆகியவையும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

உன் பெண்ணின் நடவடிக்கைக்கு மேலே கூறியவற்றில் ஒன்று காரணமாக இருக்கலாம்.

பெற்றோரிடம் இருந்து போதிய அக்கறையும் பாதுகாப்பும் கவனமும் கிடைக்காத போது குழந்தைகளிடையே இந்த குணதடுமாற்றம் ஏற்பட வாய்ப்பு அதிகம்.

உங்கள் மத்தியில் சண்டை பிரச்சினைகள் ஏதாவது இருந்தால் கொஞ்சகாலமாவது ஒதுக்கி வைத்துவிட்டு அவளிடம் முழு கவனத்தையும் செலுத்தி நடத்தை ஒழுங்கையும் கற்றுத் தாருங்கள். அதற்கு நீங்களே முன்மாதிரியா நடந்து கொள்ளுங்கள். என்று எழுதினேன்.

அடுத்த முறை கீதாவை சந்திக்கும் போது தான் தெரியும். ஜெயஸ்ரீ மாறி விட்டாளா என்று.

### "பெண்" மொழிகள்

பெண்களையும் யானைகளையும் புண்படுத்தினால் அதை மறக்கவும் மாட்டார்கள். மன்னிக்கவும் மாட்டார்கள்.

-ஸாக்கி.

பெண்களின் உரிமைகள் புனிதமானவை அவர்களுக்கு உரிய உரிமைகளுடன் அவர்களை போற்றுவதில் கவனமாய் இருங்கள்.

-நபி(ஸல்)

பெண் அண்டத்தில் மிக நுண்ணிய உயிரினம். அவளை ஆள்வதற்கு அரசை ஆள்வதற்கு உரிய அவசியமான திறமை இருக்க வேண்டும்.

-லேம்யல் ஃபுட்.

பெண்களின் நிலை முன்னேறினால் ஒழிய உலகம் நலமெய்தி முன்னேற வாய்ப்பு இல்லை.

**சுவாமி விவேகானந்தர்.**

### உணவுப் பொருட்களைப் பாதுகாக்க....

உப்பு வைத்துள்ள ஜாடியில் ஒரு சிட்டிகை சோள மாவு கலந்துவைக்க உப்பில் ஈரம் கசியாமலிருக்கும். பச்சைக் காய்கறிகளை நியூஸ் பேப்பரில் சுற்றி வைக்க அவை வாடாமல் புதிதாகவே இருக்கும்.

கறிவேப்பிலை மற்றும் கொத்தமல்லியை மெல்லிய மஸ்லின் துணியில் சுற்றி பிரிஜ்னுள் வைத்து விட்டால் எத்தனை நாட்களானாலும் பச்சைப் பசேலென்று இருக்கும்.

காளான்கள் மற்றும் கத்தரிக்காய்களை பிளாஸ்டிக் பைகயில் போட்டு பிரிஜினுள் வைக்க கூடாது. நியுஸ் பேப்பரில் சுற்றி வைத்தால் கெடாமல் இருக்கும்.

மூலிகைகளைப் பாதுகாப்பாக வைக்க அவற்றை பிளாஸ்டிக் பையில் போட்டு பலூன் மாதிரி ஊத வைத்துக் கட்டி வைக்க வேண்டும். பாதியாக நறுக்கிய ஆப்பிள் வெள்ளிக்காய் தக்காளி போன்றவற்றை அப்படியே வைத்தால் கறுத்துக் கெட்டுப் போய்விடும். எனவே அவற்றை தோல் நீக்காமல் பாகம் அடியில் இருக்குமாறு ஒரு பீங்கான் தட்டில் வைத்து விட வேண்டும். கண்ணாடித் தட்டில் வைத்தாலும் கெட்டு விடும்.

தேயிலைகளை மொத்தமாக வாங்கிவிட்ட பட்சத்தில் அவற்றைப் பத்து நிமிடங்களுக்கு அவணில் வைத்து 180 டிகிரி சூடாக்கி காற்று புகாத டப்பாவினுள் போட்டு வைத்து விடவும். ஒரு மாதம் வரை அப்படியே இருக்கும்.


நம்நாட்டில்

விளம்பரம்

செய்யுங்கள்...



# அரங்கேற்றவிழா

தமிழர் நன்கு தெரிந்த எழுத்தாளர், கவிஞர் கரவை மு. தயாளன் எழுதிய, கடல் கடந்து போனவர்கள், மண்ணில் தெரியுது வானம். நூல்களின் அரங்கேற்ற விழா, 10.03.2002 அன்று ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறுகின்றது. விழாவிற்கு தொண்டர் திலகம் திரு.வ.இ. இராமநாதன் தலைமை தாங்குகின்றார். சிறப்பு விருந்தினராக கோப்ரா ஞானம் (ஞானேஸ்வரன்) சட்டத்தரணி நேமிநாதன் கலந்து கொள்கின்றார்கள். மற்றும் சிறப்பு பேச்சாளர்கள் கலந்து சிறப்பிக்கும் இந்த அரங்கேற்ற விழா ஒரு படைப்பாளியின் பன்முகத் தேடல்களின் சங்கமம். விழா நிகழ்ச்சி மாலை 07.00 மணிக்கு தொடங்கும். அனைவரும் வருக ஆதரவு தருக.

தொடர்புகட்கு : 020 8573 0368



www.padippakam.com



# பல்சுவைப் பக்கம்

## ஹிட்லரின் மறுபக்கம்

சர்வாதிகாரி என்று பெயரெடுத்தவர் ஜெர்மனியின் ஹிட்லர். இவர் மிகவும் பாச உணர்வு மிக்கவர் என்று அவரின் உதவியாளரான 81 வயது திராத்ஜஸ் தெரிவித்துள்ளார்.

ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லர் கடந்த நூற்றாண்டின் கொடுங்கோலனாக பெயரெடுத்தவர். அவரது உதவியாளராக இருந்த ஒரே ஒரு ஆள் இன்னும் உயிருடன் இருக்கிறார். அவரது பெயர் திராத் ஜஸ். 81 வயது ஆகிறது. அவருக்கு புற்று நோய் பிடித்துள்ளது. ஜஸ் தனது எஜமானர் ஹிட்லரை சர்வாதிகாரி என்று ஒப்புக்கொள்ள மறுக்கிறார். ஹிட்லர் தனது நாயிடம் கூட பாசம் காட்டுபவர். அவர்தனது கடைசி காலத்தில்உருளைக் கிழங்கு சிப்சை விரும்பி சாப்பிட்டார் என்று ஜஸ் தெரிவித்துள்ளார்.

## அறிவுச் சிந்தனைகள்

நவம்பர் மாதம் ஸ்கேன் செய்து பார்த்த போது டாக்டர் திடுக்கிடும் தகவலை தெரிவித்தார். இரு குழந்தைகளுக்கும் ஒரே இதயம் தான் இருக்கிறதாம். ஒரே கல்லீரல் தான் இருக்கிறதாம். கல்லீரலை பொறுத்தமட்டில் பிரச்சினை இல்லையாம். ஆனால் இதயத்தை ஒருவருக்கு மட்டுமே பொருத்தி வாழச் செய்யலாமாம். இன்னொரு குழந்தையை காப்பாற்ற முடியாது. பெற்றோர் யாரை காப்பாற்றுவது யாரை



ஆப்கானிஸ்தானில் மசார் -இ- சரீப் பகுதியில் ஒரு மனிதரின் தோளில் ஏறி உணவருந்தும் வெண்புறாக்கள். மனிதர்கள் மட்டுமல்ல பறவைகளும் இப்பொழுது ஆப்கானில் சுதந்திரக்காற்றைச் சுவாசிக்கின்றன.

இழப்பது என்று எப்படி தீர்மானிப்பார்கள்? நடாஷா உடலில் தான் இதயத்தின் பெரும் பகுதி உள்ளது. அந்தக் குழந்தையைத் தான் காப்பாற்றுவது எளிது என்று டாக்டர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

## முத்திரை

ஆப்பிரிக்காவில் உள்ள டோங்கா நாடு வாழைப் பழ உருவத்தில் தபால் ஒலை ஒன்றை வெளியிட்டு உள்ளதாம்.

## கறுப்பு பற்கள்

பதினைந்தாம் நூற்றாண்டு ஜப்பானியப் பெண்கள் தம் பற்களை கருமைப் படுத்திக் கொள்வதையே நாகரீகமாகக் கருதினார்களாம்.

## புத்திசாலி

ஒரு குடியானவன் தன் மனைவி மக்களோடு கடைத் தெருவிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தான். மாலை நேரம் கிராமத்தை நோக்கி நடந்து கொண்டிருந்த அவர்கள் அதே ஊரைச் சேர்ந்த ஒரு வண்டியைப் பார்த்தார்கள். வண்டி காலியாகப் போய்க் கொண்டிருந்தது.

``எங்களை வண்டியில் ஏற்றிக் கொள்ளேன். என்ன கேட்கிறாய்?``

வண்டிக் காரனிடம் கேட்டான் குடியானவன்.

``உனக்கும் உன் மனைவிக்கும் ஒரு ரூபாய். குழந்தைகளுக்கு ஒன்றும் கொடுக்க வேண்டாம். உன்னோட மூட்டை முடிச்சையும் சும்மாவே ஏற்றிக் கொள்கிறேன்`` என்றான் வண்டிக்காரன்.

குடியானவன் தன் பிள்ளைகளைப் பார்த்தான். ``பசங்களா. வண்டியிலே ஏறிக்குங்க. இந்த மூட்டை பை எல்லாததையும் பத்திரமா வச்சுக்குங்க. நானும் உங்கம்மாவும் நடந்து வந்துடறோம்.`` என்றான்.

# முதியோர்கள் மகிழ்ச்சியாக வாழ...

## ஒற்றை இதயத்துடன் இரட்டைக் குழந்தைகள்

இங்கிலாந்தின் ஹெர்ட்ஷயர் நகரை சேர்ந்த ஒரு தம்பதியினருக்கு இரட்டை குழந்தை பிறக்கவுள்ளது. ஆனால் அந்த குழந்தைகளுக்கு ஒரே ஒரு இதயம் மட்டுமே உள்ளது. இதனால் அவர்கள் ஒரு குழந்தையை இழக்க துணிந்துள்ளனர்.

இங்கிலாந்து நாட்டின் ஹொர்போர்ட்ஷயரை சேர்ந்தவர்கள் டென்னிஸ் சுமித் தம்பதியர். அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை இருக்கிறது. இப்போது மறுபடியும் டைனா கர்ப்பம் திரித்து உள்ளார். கர்ப்பத்தில் பல சிக்கல்கள். இரட்டை குழந்தைகள் கர்ப்பத்தில் உள்ளன. பெற்றோர் கர்ட்னி நடாஷா என்று பெயரிட்டும் விட்டனர். ஆனால்

## அறிவுச் சிந்தனைகள்

1. அழுவதால் பிரச்சினை தீருமென்றால் நான் அழத் தயார். ஆனால் ஆறுதலுக்காகப் பல நேரங்களில் நான் அழுவதுண்டு. முடிவில் அதன் மூலம் ஒரு நம்பிக்கை எனக்கு உதயமாவதுண்டு.

-கண்ணதாசன்.

2. அசைக்க முடியாத நம்பிக்கையைத் தான் உண்மையான விவேகம் என்கிறோம்.

-நெப்போலியன்

3. நம்பிக்கையுடன் ஈடுபடும் போது எந்தக் காரியத்திலும் கடினம் என்பதே தோன்றுவதில்லை

-ஜோன் ஹெவுட்

4. அச்சமும் அறியாமையும் அகன்றால் தான் ஒருவன் தன் வாழ்வில் நம்பிக்கையுடன் பணியாற்றி எதிர் காலத்தில் தனது வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக் கொள்ள முடியும்.

-இங்கர்சால்.

5. வலிமை தன்னடக்கத்தின் மூலம் கிடைக்கிறது. ஆண்மை நல்லவர்களின் இணைப்பின் மூலம் கிடைக்கிறது. ஆற்றல் நல்ல நம்பிக்கையின் மூலம் கிடைக்கிறது.

-ஜேம்ஸ் ஆலன்.

## சிகரெட் உருவானது

நெப்போலியன் துருக்கி மீது 1799ல் படையெடுத்து வென்றான். ஹுக்கா குடித்து பழகியிருந்த துருக்கிய போர் வீரர்கள். போரில் ஏற்பட்ட தீவிபத்தில் அவற்றை இழக்க நேரிட்டதால் தங்கள் கைவசம் இருந்த புகையிலையை வெள்ளைப் பேப்பரில் சுருட்டி அதைப் பற்ற வைத்து புகையாக இழுத்தனர். இது தான் சிகரெட் உருவாக ஆரம்ப காரணம்.

## கம்யூனிஸ்ட் அல்ல

ரஷியாவில் உள்ள புகழ் பெற்ற செஞ்சதுக்கம் சிவப்பு வண்ணம் கொண்டது. 1917 ல் ரஷ்யாவில் நடந்த கம்யூனிசப் புரட்சிக்கும் இந்த சிவப்பு நிறத்துக்கும் சம்பந்தம் இல்லை. மத்திய கால நூற்றாண்டிலேயே இங்குள்ள பூங்கா சிவப்பு வண்ணத்தில் வடிவமைக்கப்பட்டது. எனவே கம்யூனிசத்துக்கும் சிவப்புக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை.

## அர்த்தமுள்ள குட்டிக்கதை:

### இறைவன் இருக்கிறானா?

முன்னொரு காலத்தில் கடவுள் நம்பிக்கையற்ற ``நான் தான் உயர்ந்தவன்`` என்ற மமதை கொண்ட மன்னன் ஒருவன் இருந்தான்.

ஒரு நாள் தனது அமைச்சரை அழைத்து ``உங்களுக்கு பத்து தினங்கள் அவகாசம் தருகிறேன். கடவுள் என்பவர் யார்? என்பதை எனக்கு விளக்க வேண்டும். இல்லையெனில் நாட்டில் கடவுள் என்ற பெயரையே யாரும் பயன்படுத்தக் கூடாது`` என்றான்.

பத்தாம் நாள் இரவு அமைச்சரிடம் ஓர் சமையற்காரன் வந்தான். அரசரின் தான் பதில் கூறுவதாகச் சொன்னான். அமைச்சரும் இசைந்தார்.

தர்பார் அவசரமாக கூட்டப்பட்டது. சமையற்காரன் பண்டிதர் வேஷத்தில் தர்பாருக்கு ஒருவரை அழைத்து வந்திருந்தான். அந்தப் பண்டிதரிடம் கேள்வி கேட்கத் துவங்கினான்.

``உம் கையில் இருப்பது என்ன?

``பால்``

அதன் நிறம் என்ன?``

``வெள்ளை``

``இதை எந்தப் பசு கொடுத்தது?

``காராம்பசு``

``காராம் பசு என்றால்``

``கறுப்பு நிறப்பசு``

``இந்தப் பாலை உண்டாக்க அது எதைச் சாப்பிடுகிறது?

``பசும்புல். அதாவது பசுமை(பச்சை) நிறப்புல்``

``அரசே உங்கள் கேள்விக்கு இதோ பதில். வெண் பச்சைப் புல்லைக் கறுப்புப்பசுவுக்கு கொடுத்து வெள்ளைப்பாலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறானே. அவன் தான் கடவுள்`` என்றான். அசந்து போன அரசன் தன்னினும் மேம்பட்ட சக்தி ஒன்று இருப்பதை ஒப்புக் கொண்டான்.

## முதியோருக்கு

முதியோர் மகிழ்ச்சியாக வாழ மூன்று அறிவுரைகள்.

- நீங்கள் உங்கள் மருமகளைப் பற்றி வெளியில் யாருடனும் குறையாகச் சொல்லிக் கொண்டு இருக்காதீர்கள். நீங்கள் சொல்வதை அவர்கள் சுவாரஸ்யமாகக் கேட்பார்கள். ஆனால் அவர்கள் மறு நிமிடமே உங்கள் மருமகளிடம் வந்து சொல்லாவிட்டால் அவர்களுக்குத் தலை வெடித்துப் போகும். அதைக் கேட்கும் மருமகள் தாம் செய்து கொண்டிருப்பதையும் செய்யாமல் விட்டு விடுவாள்.
- உங்களுக்குப் பேரப் பிள்ளைகள் கொஞ்சி விளையாடுவதற்காகத் தான். உங்கள் பிள்ளைகளை கண்டித்து வளர்த்ததைப் போல் உங்கள் பேரப் பிள்ளைகளையும் கண்டித்து வளர்க்க முயற்சித்தீர்களேயானால் உங்கள் பிள்ளைகளே இந்தக் கிழம் வீட்டில் இருந்து கொண்டு பசங்களையெல்லாம் துன்பப்படுத்திக் கொண்டு இருக்கிறது. என்று சொல்வார்கள். பேரப் பிள்ளைகளும் நீங்கள் சொல்வதைக் கேட்க மாட்டார்கள். குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்றால் கொண்டு வந்து கொடுத்து உதவமாட்டார்கள். ஆகவே அவர்களை ரொம்பவும் அனுசரித்துப் போக வேண்டும்.
- காசிக்குப் போறேன் ராமேஸ்வரத்துக்குப் போறேன் என்று பெற்ற பிள்ளைகளைப் பார்த்துப் பணம் கேட்டு வருத்தப்படுத்தாதீர்கள். உங்கள் கையில் எப்போதும் பணம் இருக்கட்டும். நீங்கள் அவர்களுக்கு பணம் கொடுக்கலாம். ஆனால் அவர்களிடம் நீங்கள் பணம் கேட்கக் கூடாது.

முடிவாக எப்பொழுதும் மற்றவர்களுக்கு உதவும் கரங்களாக இருங்கள். உலகம் உங்களுக்கு உதவும். மற்றவர்களிடம் அன்பாக இருங்கள். அவர்கள் உங்களிடம் அன்பாக இருப்பார்கள்.

வாழ்க்கை என்பது ஒரு கண்ணடி. அதில் உங்கள் முகம் தான் பிரதிபலிக்கும்

## சமையல் தக்காளி ஸ்பெஷல்

தக்காளி ஊறுகாய்

பழுத்த தக்காளி-1கிலோ, மிளகாய் தூள்-2 டேபிள் ஸ்பூன், வெந்தயம்-1ஸ்பூன், பூண்டு-20பல் உப்பு-தேவையானது, ரீபைண்ட் ஆயில் -கால் லீட்டர், பெருங்காயத் தூள்-1 ஸ்பூன், கடுகு, உ.பருப்பு. -1ஸ்பூன்.

செய்முறை:

தக்காளியை சுத்தமாகக் கழுவி மிக்ஸியில் நைசாக அரைத்து எடுக்கவும். இதனுடன் உப்பு, மிளகாய்த்தூள் சேர்த்து அடுப்பில் வைக்கவும். நன்கு கொதி வந்து கலவை நீர் வந்தி கெட்டியாக வரும் போது ஆயிலை நன்கு சூடு செய்து தக்காளியுடன் சேர்த்து நன்கு கிளறிவிட்டுக் கொண்டே இருக்கவும் அடுப்பை மிதமாக எரிய விடவும் தக்காளி நன்கு கொதித்து சுற்றிலும் தெளிக்கும். ஆகவே வாணலியை மூடிவைத்துச் செய்யவும். கலவை நன்கு ஆயில் கக்கி சுருள் வந்தபின் இறக்கவும்.

வெந்தயத்தை வறுத்து தூள் செய்யவும் பின் கடுகு, உ.பருப்பு, வெந்தயத்தூள் பெருங்காயம் சேர்த்து எடுத்து மூடி போட்டு வைக்கவும். 4 அல்லது 5 நாட்கள் வரை நன்றாக இருக்கும் தக்காளி ஊறுகாய் சாதம் இட்லி தோசை சப்பாத்தி ஆகியவற்றுடன் சேர்த்துச் சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும்.

www.padippakam.com



# வீரகேசரிக் கட்டிடத்தை காடையர் எரிக்காமல் தடுத்த பத்திரிகையாளன்

சென்ற வார தொடர்ச்சி........

அளவிற்கு அவரது நேர்காணலை எழுதினேன்.

அதைப்படித்த திரு வாஸ் மிகவும் நன்றாக இருப்பதாகக் கூறி அன்றைய பிரதான செய்தியாக முதற்பக்கத்தில் பிரசுரித்திருந்தார். அதைப் பார்த்த அடிகளார் என்னை அழைத்து மிகவும் பிரமாதமாக இருப்பதாகப் பாராட்டினார். அன்றில் இருந்து அவர் இந்தியா திரும்பும் வரையில் அவருடனேயே சென்று அவரது பேச்சுக்களை தயாரித்து பிரசுரிக்க முடிந்தது.

## நம்நாடு நேர்காணல்

**கேள்வி: வீரகேசரி ஸ்தாபனத்தில் உங்களால் மறக்க முடியாத சம்பவம் எது?**

நேருஜீ அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது புராதன நகரான

என்று ஒரு கூச்சல் கிளம்பிது. உள்ளே என்னுடன் இருந்தவர்கள் நடுங்கிப் போனார்கள். செய்தி சேகரிப்பதற்காக நான் திரு. பண்டாரநாயக்காவின் றொஸ்மிட் பிளேஸ் வீட்டிற்கு நான் அடிக்கடி சென்று வருவதையும் தொலைபேசியில் அவருடன் தொடர்பு கொள்வதையும் அறிந்திருந்த தொலைபேசி இயக்குனர் என்னை திரு. பண்டாரநாயக்காவுடன் தொடர்பு கொண்டு ஏதாவது உடனடி நடவடிக்கை எடுக்கும்படிகேட்டுக் கொண்டது மட்டுமல்ல திரு. பண்டாரநாயக்காவின் இலக்கத்தையும் முடுக்கி என்னிடம் கொடுத்தார். நான் திரு. பண்டாவிடம் தீவைக்கப் போகிறார்கள் என்று சொல்லி ஏதாவது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டேன்.

அவர் தான் நடவடிக்கை எடுப்பதாகக் கூறி ரெலிபோனை வைத்துவிட்டார்.

ருந்தோம். ஒரு சிறு அமைதி ஏற்பட்ட பொழுது லேக்ஹவுஸ் உரிமையாளர் ரஞ்சித் விஜயவர்த்தன தமது நண்பர் திரு சோமா தர்மரத்தின என்பவருடன் அங்குபு வந்திருந்தார். அவருடன் நாங்கள் ஆலோசனை நடத்தி மேற்கொண்டும் அழிவு ஏற்படுவதைத் தடுக்க வேண்டுமென நான் அவரிடம் கேட்டுக் கொண்டேன். அதற்காக திருமதி பண்டாரநாயக்காவின் குடும்ப நண்பரான மக்கலம் புத்தகசாலை உரிமையாளர் திரு. யு.கே.எட்மண்ட் அவர்களுடன் தொடர்பு கொண்ட சில தகவல்களைக் கொடுக்க ஏற்பாடு செய்வதாக நான் கூறினேன். எட்மண்ட் எனது நண்பராக இருக்கின்ற படியால் நாம் சொல்வதை அவர் ஏற்றுக் கொள்வார் எனவும் தெரிவித்தேன். இப்படி திரு விஜயவர்த்தனாவை எட்மனிடம் அழைத்துச் செல்வதற்கு முன்னர் உப்பாலி விஜயவர்த்தனாவுடன் நாங்கள் ஆலோசனை நடத்தினோம். இதில் ரஞ்சித் விஜயவர்தனா. திரு. சிவகுருநாதன் மற்றது நானுமாக மூவரும் ஆலோசனை நடத்திவிட்டு திரு எட்மண்ட் வீட்டுக்குச் சென்று விபரமாகப் பேசினோம். அதைத் தொடர்ந்து



அழிந்துவிடாமல் பாதுகாக்கவும் துணை போகக் கூடிய சாதனம் பத்திரிகைதான். அதற்குத்தான் ஒவ்வொருவரும் அந்தப் பத்திரிகா தர்மத்திற்கு மதிப்பளித்தல் வேண்டும். நம்நாடு பத்திரகைக்காகக நீங்கள் முன்வந்து நேரிலேயே பேட்டி கண்

# தமிழர்களே, தமிழை வீட்டு மொழியாக்குங்கள்: பாலாவின் உருக்கமான வேண்டுகோள்

பொலநறுவைக்குச் சென்றிருந்தார். மன்னர்களின் பழைய இடிபாடுகள் உள்ளதான கட்டிடங்களையும் இதர புராதன சின்னங்களையும் பார்வையிட்டுச் சென்றபோது மன்னர்கள் ஓய்வு நேரங்களில் அங்குள்ள தடாகத்தில் இருக்கும் ஆமைகளுக்கு உணவு போட்டு மகிழ்வதாக கூறப்பட்டுவரும் கேணி ஒன்றை நேருஜீக்குக் காண்பித்தார்கள். அங்கே ஆமைகள் நீந்திக் கொண்டிருந்தன. அவைகளுக்கு நெல்லுப் பொரியை பலரும் உணவாகப் போட்டுக் கொண்டிருந்தனர். நேருஜீக்கு அதைப் பார்த்ததும் தானும் அவைகளுக்கு உணவு கொடுக்க விரும்பினார். பக்கத்தில் பொரி இருக்கிறதா என்பதை அவதானித்தார். ஆனால் என்னுடைய கையில் மட்டும் இரண்டு பொரிப் பொட்டலங்கள் இருந்தன. நான் அவற்றை அவரிடம் கொடுத்தேன். இதை அவதானித்த சக பத்திரிகையாளர்கள் கொழும்பு திரும்பியதும் நேருவுக்குக் கடன் கொடுத்த பாலா என நேருஜீக்குச் செய்தியைப் பரப்பி விட்டார்கள்.

அடுத்ததாக. மற்றொரு சம்பவமும் நடந்தது. மிகுந்தலை மலையில் ஏறிய நேருஜி அங்கே உள்ள கற்களில் ஒருவகை எழுத்துக்கள் எழுதப்பட்டிருப்பதை அவதானித்துவிட்டு தம்முடன் கூட இருந்த புதைபொருள் ஆராய்ச்சிக் கமிஷனர் திரு. பரணவிதானவிடம் இது என்ன மொழியில் எழுதப்பட்டிருக்கிறது என்று கேட்டார். அதற்கு திரு. பரணவிதான பாளி. சமஸ்கிருதம் இரண்டு மொழிகளும் சேர்ந்து எழுதப்பட்டிருப்பதாக கூறினார்.

இந்தப் பதிலை அங்கு வந்திருந்த திரு பண்டாரநாயக்காவின் கைப்பிரம்பு என்று அழைக்கப்படும் சிங்கள மொழிவாதி எம்.பி.டி.சொய்சா விரும்பவில்லை. உடனே சுத்தச் சிங்களத்தில் அந்தக் கமிஷனரைத் திட்டி சிங்களத்தில் எழுதப்பட்டிருப்பதாகச் சொன்னால் என்ன குறைந்தா போய்விடும் என்று சத்தம் போட்டார். இதைக் கேட்ட நிருபர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள்.

அதைவிட ஆயிரத்தித் தொழாயிரத்தி ஐம்பத்தி எட்டாம் ஆண்டு பயங்கர இனக் கலவரம் வெடித்தது.

அந்தச் சமயத்தில் கொலை. கொள்ளை. தீவைப்பு. கற்பழிப்பு. உயிரோடு எரித்தல் போன்ற சம்பவங்கள் நடந்தது உங்களுக்க ஞாபகம் இருக்கலாம். தமிழர்களுடைய ஸ்தாபனங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. அந்தச் சமயத்தில் வீரகேசரிப் பத்திரகைக் காரியாலயமும் உடைக்கப்பட்டது.. அதேவேளை நானும் ஒரு சிலரும் மட்டும் காரியாலயத்திற்குள் இருந்தோம். தீ வைக்கப் போகிறார்கள்

ஒரு சில நிமிட நேரங்களில் ஒருவாகனம் நிறையப் பொலிஸ்பட்டாளம் வந்து சேர்ந்தது. ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் பறந்தன. அதே வேகத்தில் சிங்களக் காடையர் கூட்டம் ஓடித் தப்பியதுஉள்ளே வந்த பொலிசார் பாதுகாப்புத் தந்து எம்மை வீடுகளுக்கு அனுப்பி வைத்தனர். அன்று அந்த நடவடிக்கையை நான் எடுக்காவிட்டால் வீரகேசரியின் கதையும் முடிந்திருக்கும்.

**கேள்வி: தினகரன் பத்திரிகையில் உங்கள் பணியின் அடையாளம் என்ன?**

பதில்: தினகரன் பத்திரிகையில் பாராளுமன்ற நிருபராகவும். பிரதம நிருபராகவும். கடமையாற்றிய காலத்தில் அணிசேரா இயக்க மாநாடு நடைபெற்றது. சுமார் நூற்றியிருபது நாடுகளில் தலைவர்கள் இதில் கலந்து கொண்டனா. பிரபல்யமான தலைவர்கள் எல்லோரும் இம்மாநாட்டிற்காக வந்திருந்தனர். இம்மாநாட்டுச் செய்திகளை எல்லாம் தயாரித்து உடனுக்குடன் பத்திரிகைக்குக் கொடுத்துக் கொண்டிருந்தேன். லிபியத் தலைவர் கடாபி அவர்களின் பத்திரிகையாளர் மகாநாட்டில் சரமாரியான கேள்விக் கணைகளைத் தொடுத்தபோது அவருக்கும் எனக்கும் இடையில் சர்ச்சை ஏற்பட்டது. சில கேள்விகளை தவிர்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். நான் அதற்கு கேள்வி கேட்க வேண்டியது ஒரு நிருபரின் கடமை. பதில் அளிக்க வேண்டியது உங்கள் கடமை. பதிலளிகாமலும் விடலாம். அது உங்களைப் பொறுத்தது என்று கூறியதும் அவரது மெய்ப்பாதுகாப்பாளர்கள் எனது பக்கத்தில் வந்து நின்றுகொண்டு இதை மற்ற நிருபர்கள் ஆட்சேபித்து இது ஒரு பயமுறுத்தலா என்று கேள்வி எழுப்பி மேற்கொண்டு நிருபர்கள் மாநாடு நடைபெறாத அளவிற்குசர்ச்சை ஆக்கிவிட்டனர்.

மெய்க் காப்பாளர்கள் என்னை விட்டுச் சென்றதும் பத்திரிகையாளர் நடைபெற்றது. அணிசேரா மாநாட்டுச் செய்திகளைத் தயாரித்து தினகரன் பத்திரிகைக்கு வழங்கியமைக்கு டீ.ஆர்.ஜெயவர்தனா பரிசு எனக்கு லேக்கவுசினால் கொடுக்கப்பட்டது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பதவிக்கு வந்த சமயத்தில் லேக்ஹவுஸ் ஸ்தாபனம் உடைத்து நொருக்கப்பட்டது. ஒரு பகுதியில் தீ வைக்கப்பட்டது.. சம்பவம் நடைபெறுவதைப் பார்த்த ஊழியர்கள் அங்கிருந்து ஓடித் தப்பி விட்டார்கள். நானும் தினகரன் ஆசிரியர் திரு. சிவகுருநாதனும் மற்றும் முன்னேநின்று நடப்பவைகளைப் பார்த்து உரியவர்களுக்குத் தொலைபேசி மூலம் தகவல் கெகாடுத்துக் கொண்டி

அன்று இரவு லேக்கவுஸ்மீது எதுவித தாக்குதலும் நடக்கவில்லை. பொலிசாருடைய பாதுகாப்பும் போடப்பட்டது. லேக்கவுசின் பலகோடி சொத்துக்கள் அன்று காப்பாற்றப்பட்டது என்பது உண்மையாகும்.

**கேள்வி: ஒரு தமிழராக இருந்து ஆற்றல் மிகுந்த உழைப்பினால் காத்திரமான பணியும் சாதனையும் கொண்ட உங்களது பத்திரிகைப் பணியில் மறக்க முடியாத பல சுவடுகளைப் பதித்துள்ளீர்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது. ஈழமண்ணில் உங்கள் பிறந்தகம் முதலிய சில தகவல்களைத் தருவீர்களா?**

பதில்: பூர்வீகம் யோகர்சுவாமியால் புனிதம் பெற்ற கொழும்புத்துறை எனது பூர்வீகம். தாயார் தெல்லிப்பழைவாழ்ந்தது நவாலியூர். அங்கே கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் அடிச்சுவட்டில் காலத்தில் சுண்ணாகத்தில் வெளிவந்துகொண்டிருந்த ஈழகேசரி பத்திரிகையின் ஸ்தாபகர் அமரர் பொன்னையாவுடன் தொடர்பு ஏற்பட்டது. சிறு பையனான என்னை கலையரசர் சொர்ணலிங்கம் அவர்கள்தான் அறிமுகம் செய்து வைத்தார். பிற்காலத்தில் நான் ஒரு பத்திரிகையாளனாக உருவாகுவற்கு ஏடுதொடக்கப்பட்ட இடம் ஈழகேசரிக் காரியாலயம் தான் எனநினைத்து நான் பெருமைப்படுகின்றேன்.

பத்திரிகையாளர்களுக்கு நிம்மதியில்லாத வாழ்க்கை என்றுமே இருந்து வந்திருக்கிறது. தினமும் எதைப் படைத்தாலும் மறுநாள் காலையில் ஐந்து.. பத்து. பதினைந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாசகர்கள் படிப்பதுடன் மட்டுமன்றி சரிபிழை பார்த்துவிடுவார்கள். தவறாக இருப்பின் வாசகர்களின் கண்ணோட்டம் விகாரமாகி பத்திரிகைக் காரியாலயத்திற்குள் தொலைபேசி மூலம் புகுந்து பெரிய குழப்பத்தை ஏற்படுத்திவிடும். ஒரு பத்திரிகையாளனுக்கு எசமானன் வாசகர்கள்தான். அவர்கள்தான் மதிப்பீடு செய்து ஒரு பத்திரிகையைத் தரம்கண்டு அதன் நிதானமான போக்கை மதிப்பீடு செய்து அந்தப் பத்திரிகையின் வளர்ச்சிக்குக உதவுகிறார்கள். இதனால் குட்டி நிருபராக இருந்தால் என்ன? பிரதம எழுத்தளராக இருந்தால் என்ன. பத்திரிகை ஆசிரியராக இருந்தால் என்ன? நடுநிலைக் கண்ணோட்டத்தோடு செயற்பட்டாக வேண்டும். இதற்குப் பெயர் தான் பத்திரிகா தர்மம்.

ஒரு மக்களை விழிப்படையச் செய்யவும். பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும், இன உணர்வை ஏற்படுத்தவும் ஒரு இனம்

டிருப்பது எனக்குப் பெருமையாக இருக்கிறது. பலகஸ்டங்களுடனும் நஸ்டங்களுடனும் உறவாடி ஒருஇலக்கியப் பாதையை அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பித்திருக்கும் உங்கள் பணி தொடரட்டும். வளரட்டும். எதிர்காலச் சந்ததியினர் உங்களைப் போன்றவர்களின் பணிகளை என்றுமே நினைவு படுத்திக் கொள்வார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

**நான் இலண்டனில் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருப்பவன். நம்நாடு பத்திரிகையின்வளர்ச்சியில் எனக்கும் பங்குண்டு. அங்கே இப்பொழுது திரு.செல்வா செல்வதுரை அவர்களால் நம்நாடு அச்சாகி வெளிவந்து கொண்டிருக்கிறது. ஆயிரம் வரையிலான நம்நாடு பத்திரிகை வாரா வாரம் விற்பனையாகிறது. பரிசிலே நானூறுக்குக் கிட்டுமான நம்நாடு வாரவாரம் விற்பனையாகிறது. அந்த வகையில் திரு. ஐ.தி. சம்பந்தன் அவர்களின் முயற்சியும் திரு.செல்வா அவர்களின் அயரா உழைப்பும் வாசித்தவர்கள் வாசிக்கத் துடிக்கின்ற அதே நம்நாடு பத்திரிகையை ஐரோப்பாவில் மிளிரச் செய்கின்ற அந்தப் பணியில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள். அந்த வளர்ச்சி ஒரு பெருவளர்ச்சியாக. ஒரு விருட்சமாக வளர்ந்து இன்னும் பல நாடுகளில் பரவி தமிழ் மக்களுக்கு ஒரு உற்ற துணைவனாக வளர்ந்து வர வேண்டுமென்று மனமாரப் பிரார்த்திக்கிறேன்.**

நம்நாடு வாசகர்களே. உங்கள் வீட்டு மொழி தமிழாக இருக்கட்டும். குழந்தைகள் தமிழைத் தெரிந்திருக்க வேண்டும் என்ற நினைப்பு தமிழனிடம் மட்டுமே இல்லை. வேற்று மொழிக்காரர்களை பார்த்தாவது எங்கள் மக்கள் திருந்துகிறார்கள் என்றால் அது இல்லை. தமிழை வீட்டு மொழியாக ஏற்று அந்த மொழியிலேயே எமது குழந்தைகளை வளர்ப்போம்.கல்விமொழி ஆங்கிலம் அது தானாகவே குழந்தைகளிடம் வந்து சேரும். உங்கள் கடமை இது என்று கூறி உங்களிடம் இருந்து விடைபெறுகின்றேன்.

ஆசிரியர்: நன்றி. திரு. பாலா அவர்களே. உங்கள் சிரமத்தையும் பாராது நம்நாடு வாசர்களோடு கலந்து கொண்ட உங்களை நம்நாடு நன்றியுடன் பாராட்டுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



THE HOMELAND

# Prabhakaran Is Merely Carrying The Cross

## *(A response to Canada Post editorial by V. Thangavelu)*

*This refers to your editorial "Declawing the Tigers" (National Post – February 23 2002). The editorial is reflective of your innate prejudice against Tamils in general and LTTE in particular. As the editor of a conservative newspaper with a right wing agenda, it is a waste of time trying to convince you about the legitimacy of the Tamil national liberation struggle. This is because you have already made up your mind that a national liberation war is "terrorism" which no doubt fits your political philosophy.*

*In this respect you are in good company with persons like Rob Anders, Canadian National Alliance M. P. who dubbed Nelson Mandela, former President of South Africa a "terrorist."*

*If you have any civility left in you, you should have accepted the explanation by the organizers of the dinner that it was to celebrate a cultural event. Instead you unashamedly continue to describe the dinner hosted by FACT as a fund raising event despite repeated denials by the organizers. One cannot raise funds by dining in a five star hotel after paying $60 per a plate. If the dinner was indeed for fundraising, I am sure the organizers would have owned-up because that is not a crime.*

*You blame Velupillai Prabhakaran for the two decades old war when you should know that wars are caused by large social and economic forces and not by individuals. In that case you might as well blame Abraham Lincoln for the American civil war.*

*In any event, the demand for Tamil Eelam is not the brainchild of Prabhakaran or the LTTE. Years before in 1976, the Tamil United Liberation Front (TULF) passed a resolution to RESTORE (emphasis mine)* ***" a free, sovereign, secular, socialist State of Tamil Eelam based on the right to self-determination to safeguard the very existence of the Tamil nation in the country." To enforce the resolution, the TULF sought and obtained a mandate at the parliamentary elections held in 1977 by winning 18 out of 23 seats it contested in the Northeast.***

***So in effect Prabhakaran is merely carrying the cross of the Tamil people's aspiration for freedom handed over to him by the TULF.***

*You posed the question "How many hundreds of Sri Lankan lives would have been saved if Canada had acted to shut down Tiger financing in 2000 -- or even earlier, as the United States did -- rather than waiting till after Sept. 11?"*

*There are always two sides to a story. My answer to your question is "Tiger financing" SAVED the lives of thousands of defenceless Tamils getting slaughtered by the Sri Lankan army (99% Sinhalese). If not for the "Tiger financing" the death toll would not be 60,000 (90% Tamils), but 160,000 or more.*

*You should by now understand that Tamils are fighting a war in self-defence against an invading army after exhausting peaceful methods of protest. Suppose the role is reversed, Tamils a majority and the Sinhalese a minority, the latter would have resisted the hegemonic rule by the Tamils in the same way, if not more forcefully.*

*You are dead wrong in assuming that post September 11 events influenced the LTTE decision to enter into peace talks. Long before September 11, in November 1999, Prabhakaran in his Heroes Day speech declared:*

*"Though the LTTE stands today as a formidable force, with the military capability to liberate our homeland, we have not abandoned the path of peace. We want to resolve the Tamil conflict through peaceful means, through civilized methods without recourse to bloodbath and destruction of life."*

*The LTTE leader was referring to the military success of Unceasing Wave 111 operation, a unique historical achievement in the art of contemporary warfare, which saw the sudden collapse of a colossal military structure with its multiple military complexes, well-fortified bases in Vanni like houses built on sand!*

*Prabhakaran re-iterated his desire for a peaceful in 2000 as well after the LTTE captured the well-fortified Elephant Pass military base described by defence analysts as the gateway to Jaffna peninsula. This is what he said:*

***"Our liberation organization is prepared to participate in negotiations to find a political solution to the ethnic conflict through peaceful means. We are not opposed to peaceful process of resolving conflicts. Nor we are reluctant to engage in peaceful dialogue. We are seeking a negotiated settlement that would be fair, just and equitable and that it would satisfy the political aspirations of the Tamil people."*** *(Prabhakaran's Heroes Day Speech-November, 2000)*

*To prove its commitment to a negotiated political settlement, LTTE declared a unilateral cease-fire for 4 long months commencing from December 24, 2000 which came to an end when the government failed to reciprocate.*

*Your enterprising columnist Stewart Bell also suffers from selected amnesia. He also claims " the international terrorist crackdown that followed Sept. 11 has forced Mr. Prabhakaran to settle for less. Blacklisted around the world for their terrorist tactics, the* ***Tamil*** *Tigers have been losing both their legitimacy and outside sources of support." (Sri Lankan guerrilla dream comes to an end- National Post, February 23, 2002)*

*While comment is his prerogative, he should learn to respect facts. Does the signing of the cease-fire agreement brokered by the Royal Norwegian government between Prabhakaran and Prime Minister Ranil Wickremesinghe indicates "loss of legitimacy" or "gain of legitimacy"? In any case, LTTE derives its legitimacy from near unanimous support of the Tamil people.*

*Stewart Bell has also parrot-like repeated the charge without a shred of evidence that "The Canadian Security Intelligence Service has estimated the Tigers raise $2-million a year in Canada through donations, as well as an unknown sum garnered through extortion, fraud, theft, migrant smuggling, passport forgery and other crimes." If "unknown sum is garnered through extortion, fraud, theft, migrant smuggling, passport forgery and other crimes" is indeed true, then what is the Canadian law enforcement authorities are doing about such illegal activities?*

*In the same vein I can also quote Sri Lankan intelligence sources saying that Stewart Bell is in the payroll of the Sri Lankan government; it funded his trip to Jaffna when Northeast was closed to local and foreign media etc. May I respectively submit that this type of yellow journalism is unworthy of even tabloid newspapers! Stewart Bell's mischievous journalistic concoction is extremely derogatory of the Tamil Canadians.*

*Finally I wish to make it clear that Tamil Diaspora is not unduly concerned about the label "terrorist" or "front" attached to those who support the LTTE. Tamils owe no one an apology for supporting the LTTE. Tamils will continue to support the cause one hundred percent, but not necessarily all the means to achieve that objective.*

*Yours truly,*

*V.Thangavelu*

# Govardhanpeeth seer opposes move to hand over land



Shankaracharya of Govardhanpeeth Swami Adhokshajananda Tirth today came out strongly against any move to hand over the acquired land at Ayodhya to VHP saying the Sangh Parivar outfit was a group of "anti-social elements" which was spreading violence in the name of religion.

Addressing a press conference here, (see PTI photo) he alleged that the Kanchi Shankaracharya Jayendra Saraswati, who is mediating in the Ayodhya imbroglio, was "being used and pressured" by the Government to give legitimacy to the VHP's agenda which he said was not different from that of the BJP.

"Even if the acquired land is given to the VHP leaders, I and my followers will not take it lying down. What can be constructed, can be finished also," he threatened.

Criticising the VHP, RSS and Bajrang Dal, he said "they have nothing to do with religion. They are killers who in the name of religion and Ram temple kill innocent people."

Adhokshajananda, part of a parallel "endeavour" by Muslim and non-Sangh Parivar Hindu religious leaders to sort out the contentious Ayodhya issue, had yesterday rejected the mediation of RSS and Kanchi Shankaracharya and demanded a ban on VHP and arrest of its top leaders.

www.padippakam.com



# சுயம்வரம்

**(1).** இலண்டனில் வசிக்கும் 23 வயது நிரம்பிய அழகான தனது தங்கைக்கு அவரது அண்ணன் மாப்பிள்ளை தேடுகிறார். பெண் பொதுநிறம். 5அடி 3அங்குலம் உயரம். இலண்டனில் PR உள்ள வேலைசெய்பவராக இருப்பவர் விரும்பத்தக்கது. **REF:- A/01**

(2). 29 வயது நடுத்தர நிறமுடைய வெள்ளாளர் இனத்தைச் சேர்ந்த படித்த பெண்ணுக்கு தாய் தந்தையர் மணமகன் தேடுகிறார்கள். மணமகன் சைவமாகவும் டாக்டர், இஞ்சினியர், அக்கவுண்டன் ஆகவோ இருத்தல் வேண்டும். **REF:- A/02**

**(3).** 30 வயதுடைய Cambridge Uni யில் படித்து நல்லவேலையில் இருக்கும் அழகான நல்ல குடும்பத்தில் பிறந்த பெண்ணுக்கு பெற்றோர் மணமகன் தேடுகிறார்கள். மணமகன் Cambridge Uni யில் படித்து நல்ல வேலையில் இருப்பவராக இருத்தல் அவசியம். **REF:- A/03**

**(4).** REF:- Accountancy படித்த நல்ல நிறமான 27 வயதுடைய மணமகனுக்கு பெற்றோர் பெண் பார்க்கின்றார்கள். மணமகன் இலண்டனில் வேலை செய்கின்றார். UK P.R உடைய படித்த பெண் விரும்பப்படுவார;. REF:- A/04

**(5).** கொழும்பில் டீயமெ இல் வேலை செய்யும் பெண்ணுக்கு அண்ணன் மணமகனைத் தேடுகிறார். மணமகன் படித்தவராகவும் லண்டனிலோ அல்லது கனடாவிலோ இருப்பவராக இருந்தால் விரும்பப்படும். **REF:- A/05**

**(6).** யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த Batticoloa வில் நல்ல வேலையில் இருக்கும் பெண்ணுக்கு இலண்டனில் இருக்கும் பெற்றார் வரன் தேடுகிறார்கள். வரன் படித்தவராகவும் இலண்டனிலோ, France இலோ இருப்பவராக இருந்தால் நல்லது. **REF:- A/06**

**(7).** அழகான 25 வயது கணக்காளராக France இல் வேலைசெய்யும் தனது தங்கைக்கு அண்ணன் வரன் தேடுகிறார். வரன் படித்தவராகவும், நல்ல பண்பான குணமுள்ளவராகவும் இருத்தல் அவசியம். **REF:- A/07**

**(8).** 32 வயதுள்ள படித்த , லண்டனில் வாழும் நல்ல குணமுள்ள தனது தம்பிக்கு அக்கா பெண் பார்க்கிறார். பெண் அழகானவராகவும், படித்தவராகவும் இருக்க வேண்டும். **REF:- A/08**

(9) யாழ் இந்து குகன் வம்சம், பரம்பரை நகை வியாபாரிகள் தமது மகன் வயது 35 ரோகினி நட்சத்திரம் 8இல் செவ்வாய் உடைய, இலண்டனில் **CHARTERED CERTIFIED ACCOUNTANT** ஆக எட்டு ஆண்டுகள் தொழில் புரியும் மிகவும் நல்ல குணமுள்ள பிரிட்டனில் **P.R.** உள்ள 5' 7" உயரம் உள்ள சிவந்த நிறமான தமது அன்பு மகனுக்கு அழகிய படித்த சிவந்த மணமகளை எதிர்பார்க்கின்றார்கள். பிற உயர் குலத்தவர்களும் விண்ணப்பிக்கலாம். **REF/18**

(10) இலண்டனில் வசிக்கும் அன்ரியார் தமது 33 வயதுடைய Bcom 2ND upper JAFFNA UNIVERSITY, POST GRADUATE DIPLOMA IN BUSINESS MANAGEMENT படித்த 5' 5"உள்ள வேளாளர் குலத்தைச் சேர்ந்த கொழும்பு University யில் Asst. Registrar க பதவி வகிக்கும் தமது மகளுக்கு P.R. உள்ள DOCTOR, ENGINEER OR ACCOUNTANT, LONDON, AUSTRALIA, CANADA அல்லது மற்றைய EUROPEAN நாடுகளில் இருந்து எதிர்பார்க்கிறார்கள். காலம் சென்ற தந்தையார் ஒரு ENGINEER, சகோதரர் PHD படித்துக்கொண்டிருக்கின்றார், சகோதரி INTERNATIONAL COLLEGE IN COLOMBO இல் ஆசிரியையாக இருக்கின்றார். பொருத்தமானவர்கள் விண்ணப்பிக்கலாம். REF A/19

(11) அழகான 31 வயதுடைய கனடா பிரஜா உரிமை பெற்று நல்ல வேலையில் இருக்கும் நல்ல குணமுள்ள மருமகனுக்கு லண்டனில் இருக்கும் மாமா அழகான ஓரளவு படித்த நல்ல குணமுள்ள பொருத்தமான பெண்ணை தேடுகிறார்கள். பொருத்தமானவர்கள் தொடர்பு கொள்ளவும்.. REF A/20

(12) சுவிசிலாந்தில் தேர்ச்சி பெற்ற மருத்துவ தாதியாக தொழில் புரிபவரும் சுவிசில் நிரந்தர வதிவுடமை பெற்ற வரும் 28 வயது உடைய பெண்ணுக்கு லண்டனில் வாழும் அவரது மாமியார் பொருத்தமான வரனை தேடுகிறார்கள். மணமகன் Doctor, Engineer, Accountant, க இருக்க வேண்டும். கூடியளவு லண்டன் ,அமெரிக்கா, கனடா அவுஸ்ரேலியாவில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. மற்றைய ஐரோப்பிய நாடுகளில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்.REF A/21

சுயம்வரத்தில் பங்குகொள்ள விரும்புவவர்கள் **£10 க்கு Cheques,**
**Postal orders cross and made payable to "NAMNADU"**
**Address:- SUYAMVARAM, 1A SIBLEY GROVE, EASTHAM, LONDON E12 6SD.**

## ஸ்ரீகுமரன் சொல் தேடும் பகுதி

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | K | C | A | L | B | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | O | | | | |
| | E | T | I | H | W | | | | D | | | | G | | | | | |
| | | | | | | | | L | | | | I | | | | | N | |
| R | | | | | | | O | | | | D | | | Y | | | E | |
| E | | | | | | G | | | | N | | | A | | | | E | |
| D | | | | | | | | | I | | | R | | | | | R | |
| N | | | N | A | T | | D | | | | G | | | | | | G | |
| E | | | | | | | | E | | | | | L | | E | | | |
| V | | T | | | | | | | R | | | | A | | M | | | E |
| A | | E | | | | | | | | | | | E | | I | | | S |
| L | | L | | | | E | G | N | A | R | O | | T | | L | | | I |
| | | O | | | | | | | | | | | | | | | | O |
| | | I | | | | | | | W | | | | | | K | | | U |
| N | | V | | E | S | O | R | | | O | | | | | N | | | Q |
| W | | | | | | | | A | | | L | | | | I | | | R |
| O | | | | | | | U | | | | | L | | | P | | | U |
| R | | | | | | Q | | | | | | | E | | | | | T |
| B | | | | | A | | | E | U | L | B | | | Y | | | | |

சொல் தேடும் பகுதி - 3 இன் விடை அருகில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அதிஸ்டசாலிகளின் விபரம் அடுத்தவாரம் பிரசுரிக்கப்படும்.



1a Sibley Grove,
Eastham,
London E12 6SD

## சிரியுங்கள்....

விபத்தில் சிக்கிய தம்பதிகளின் மூளை பாதிக்கப்பட்டதால். வைத்தியரிடம் மூளை மாற்று சிகிச்சைக்காக சென்ற போது. ஆணுடைய மூளைக்கு பத்தாயிரம் பவுணும் பெண்ணினது மூளைக்கு ஆயிரம் பவுணும் செலவாகும் என்று டாக்ரர் கூறினார்.

பெண் மகிழ்ந்து டாக்ரரிடம் விளக்கம் கேட்ட போது, "உங்களுடைய மூளை அதிகம் பாவிக்கப் படாததினால்" இந்த விலைக்குறைவு என்றார் டாக்ரர்.

பெண்ணின் முகத்தில் அசடு வழிந்தது.

-மதி

படிப்பகம்

www.padippakam.com



# சோதிடர்: பொன்.எஸ்.சேகர்

| | | | |
|---|---|---|---|
| | செவ் | சனி ராகு | வியா |
| சூரி வெள் | இவ்வாரப் பலன் | | |
| புத | | | |
| | கேது | | |

## மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம்கால்.

மேடம்: பொருட் செலவு, குடும்பத்தில் பிரிவினை. மனக்கவலை. தேக நலக்குறைவு போன்றன ஏற்படல். சில சமையம் அவசிய செலவு. தொழில் வகையில் மாற்றம். பணம் கைவிட்டுப் போகும் என்ற கவலை வாட்டவும் செய்யும். கடின உழைப்பு ஏற்படல். எதிலும் பயந்து பயந்து காரியம் பார்க்கும் தன்மை ஏற்படல். தொழில் உத்தியோகத்தில் தொல்லைகள் ஏற்படவும் ஏதுவாகும். புதிய உறவுகள் உண்டாகும். அரச காரியங்களில் அனுகூலம் ஏற்படும். பிறர்மரியாதை மதிப்பு ஏற்படும். தந்தையினால் உதவி ஒத்தாசை ஏற்படும். சகோதரர்கள் மூலம் நன்மைகள் உண்டாகும். அவ்வப்போது தேவைக்கேற்ப பணவசதிகள் ஏற்படும். குடும்பத்தில்தகராறுகள் வந்து விடும். சொத்து வகையில் பிணக்குகள் ஏற்படவும் ஏதுவாகும்.பிறஇட சஞ்சாரம் மேற்கொள்ளும் தன்மையும் சிலருக்கு ஏற்படும்.

## இடபம்

கார்த்திகை 2, 3,4ம் பாதங்கள்.
ரோகினி, மிருகசீரிடம் 1, 2ம் பாதங்கள்.

இடபம் உற்றார் உறவினர்களுடன் மனக்கசப்பு. சண்டை சச்சரவுகள் போன்றன ஏற்படவும் ஏதுவாகும். ஒரு சிலருக்கு வீட்டை விட்டுப்பிரிந்து செல்லும் நிலையும் ஏற்பட ஏதுவாகும். செய்தொழில் வகையில் மாற்றம் ஏற்படவும் ஏது உண்டாகும். மனநிலை பாதிக்கப்படும். காரியங்களில் தாமதம். தடங்கல்கள் போன்றன ஏற்படும். திருமண காரியங்களில் தடங்கல்களுக்கு மேல் கைகூடும் தன்மை ஏற்படும். தமது குடும்பத்தில் உள்ளவர்களின் ஆதரவு பெறஇயலாத நிலை ஏற்படல். உடல் நலக்குறைவு ஏற்படல். காரணமின்றி மனதில் ஒருவித பயம் உண்டாகும். வருவாய் குறைவு ஏற்படும். சிலர் பொய்யான குற்றச்சாட்டிற்கு பொறுப்பேற்க வேண்டிய நிலையும் ஏற்படும். செய்யாத குற்றத்திற்கு. தந்தைக்கு தேகநலக்குறைவு ஏற்படலாம். எனினும் ஏதும் வகையில் முன்னேற்ற வாய்ப்புக்கள் வரவும் ஏதுவாகும். பணப்பிளக்கம் புதிய நட்பு விவாக காரியங்களில் அனுகூலம் போன்றனவும் ஏற்பட ஏதுவாகும். வாய்சாதுரியத்தினால் சில முக்கிய காரியங்கள் அனுகூலமாதல்.

## மிதுனம்

மிருகசீரிடம் 3, 4-ம் பாதங்கள்.
திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ம் பாதங்கள்.

மிதுனம்: உடல்நலக்குறைவு ஏற்பட ஏதுவாகலாம். வீண் செலவுகள் ஏற்படல். வருவாய் குறைதல். வீண்பழி கேட்கும் தன்மை. செய்தொழில் வகையில் ஏதும் மாற்றம் சிலருக்கு ஏற்படல். வீண் சச்சரவுகளும் ஏற்பட ஏதுவாகல். மனதில் கவலை ஏற்படல். கட்டுப்பட்டு நடத்தல். மறைமுக எதிர்ப்பு போன்றன ஏற்படலாம். திருமண காரியங்களில் அனுகூலம் ஏற்படல். பிள்ளைகள் மூலம் நன்மைகள் ஏற்படல். பூமி வகையில் லாபம் ஏற்படவும் ஏதுவாகல். மாணவர்களுக்கு கல்வியில் மனநாட்டக்குறைவு ஏற்படல். சில தம்பதியர்களுக்குக் குழந்தைச் செல்வம் ஏற்படவும் ஏதுவாகல். எதிர்பாராத உதவி ஏற்படல். புதிய பொருட்கள் வாங்கும் சூழ்நிலையையும் ஏற்பட ஏதுவாகல். ஆன்மீக உணர்வ மேலோங்கும். ஸ்தல தரிசனம் ஏற்படல். குடும்பத்தில் அடிக்கடி சச்சரவுகள் தோன்றி விளங்கும்.

## கடகம்

புனர்பூசம் 4-ம்கால், பூசம், ஆயிலியம்.

கடகம்: செய்தொழில் வகையில் முன்னேற்ற வாய்ப்புக்கள் ஏற்படல். கல்வியில் தேர்ச்சியும். புதியகல்விப்பலிதமும் சிலருக்கு ஏற்படல். சகதொழிலாளர்களின் ஆதரவு ஏற்படல். எண்ணங்கள் நிறைவேறும் தன்மை ஏற்படல். சிறுசிறு பிரயாணங்கள் சிலருக்கு ஏற்படஏதுவாகல். வழக்கு வகையில் சாதகமான நிலை ஏற்படல். தாய்க்கு நோய் நீக்கம் ஏற்படல். சத்ருஜெயம் ஏற்படல். தடைப்பட்ட காரியங்களில் அனுகூலம் போன்றன ஏற்படல். திருமண காரியங்களில் சிலருக்குத் தாமதம் ஏற்படல். பிரயாணத்தினால் வீண் செலவுகள் உண்டாகல். பங்குத்தொழில் புரிபவர்களுக்கிடையில் மனவேற்றுமை ஏற்படலாம். தந்தைக்கு எதிர்பாராத செலவுகள், நோய்கள் ஏற்படலாம். அனைவருக்கும் மனக்கஷ்டம். தொழில் வகையில் மந்தநிலைப்பாடு போன்றன எற்படலாம்.

## சிம்மம்

மகம், பூசம் உத்திரம் 1-ம் பாதம்.

சிம்மம் தர்ம செய்கை.திருமண காரியங்களில் பங்குபற்றும் தன்மை. நண்பர்களினால் உதவி ஒத்தாசை லாபம் போன்றன எற்படலாம். பணப்பிளக்கம் ஏற்படல். செய்தொழில் வகையில் முன்னேற்ற வாய்ப்புகள் ஏற்படல். பிரயாணங்களினால் லாபம் ஏற்படல். தூரஇடச் செய்தி மனநிம்மதியை ஏற்படுத்தல்.கடித செய்திகள் மூலம் மனநிறைவு ஏற்படல். சில தம்பதியர்களுக்கு குழந்தைச்செல்வம் ஏற்படல். குடும்பசுகம் மனமகிழ்ச்சி ஏற்படல். செய்தொழிலில் பதவி உயர்வு. ஊதிய உயர்வ போன்றன சிலருக்கு ஏற்படல். தொழிலாளர்களின் உதவி ஒத்தாசை ஏற்படல். தடைப்பட்ட சிலமுக்கிய காரியங்களில் அனுகூலம் ஏற்படல். சிலருக்கு இருதொழில் பலிதம் ஏற்படல். உடல் நரம்பு ஏற்படல். எனினும் குடும்பத்தில் சண்டைசச்சரவுகள் ஏற்படவும் ஏதுவாகும். பிறர்மீது பொறாமை ஏற்படல். தாம்பார்க்கும் காரியங்கள் தொழில்களில் கவனக்குறைவு ஏற்படல்.

## கன்னி

உத்திரம் 2, 3-ம் பாதங்கள். அத்தம்
சித்திரை 1, 2-ம் பாதங்கள்.

கன்னி: செய்தொழில் வகையில் ஏதும் மாற்றம் ஏற்பட ஏதுவாகல். உத்தியோகஸ்தர்களுக்கு இடையூறுகள் ஏற்படலாம். சிலருக்குஉத்தியோகத்தில் ஏதும் மாற்றம் ஏற்படலாம். இருப்பிடமாற்றமும் சிலருக்கு ஏற்பட ஏதுவாகும். மேல் அதிகாரிகளுடன் கருத்து வேற்றுமை ஏற்படவும் ஏதுவாகலாம். எனினும் வேலைமாற்றத்தினால் புதிய சூழ்நிலையில் பணியாற்றும் நிலையும்.பணப்பிளக்கத்தில் குறை வரவும் ஏதுவாகலாம். தாய்க்கு தேகநலகம் ஏற்படல். உறவினர்களுடன் மனவேற்றுமை உண்டாகல். தெய்வ நம்பிக்கை குறைதல். செய்தொழில் வகையில் லாபக்குறைவு ஏற்படல். ஓய்வின்றி அலைந்து திரியும் தன்மையும் ஏற்படலாம். உறவினர்களுக்குள் மனக்கஷ்டம் ஏற்படவும் ஏதுவாகல். எண்ணங்கள் பிரயாசையின் மேல் பகைகூடல். மனைவியுடன் மனவேற்றுமை. வயிற்றுடன் சம்பந்த ரோகம் போன்றன ஏற்படலாம்.

## துலாம்

சித்திரை 3,4-ம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2,3-ம் பாதங்கள்.

துலாம்: பொருள் செலவு. பெண்களினால் ஆண்களுக்கும் ஆண்களினால் பெண்களுக்கும் சில அவமானங்கள். சச்சரவுகள். செலவுகள் போன்றன ஏற்பட ஏதுவாகல். தேகத்தில் காயம் ஏற்பட ஏதுவாகல். ஒருசிலருக்கு ஆயுதத்தினால் காயம் ஏற்படவும் ஏதுவாகும். மனைவிக்கு தேகநலக்குறைவு ஏற்படவும் ஏதுவாகலாம். தமது குடும்பத்தில் உள்ள உறவினர்களுக்குள் உடல் நிலை பாதிக்கப்படலாம். வேண்டாத செலவுகள் ஏற்படலாம். செய்காரியங்களின் கவனக் குறைவு ஏற்படலும். அதனால் தொல்லைகளும் உண்டாகல். கீழ்தரமானவர்களின் நட்பால் துன்பங்கள் ஏற்படலாம். செய்தொழில் வகையில் கஷ்டங்கள்அதிக வேலை போன்றனவும் ஏற்படல். சிலருக்கு ஏதும் வகையில் விபத்துக்கள், காயங்கள் ஏற்படவும் ஏதுவாகல். போன்றன ஏற்படல். வேறு சிலர் சூதாட்டத்தில் பொருள் இழக்கும் வகையும் ஏற்பட ஏதுவாகல். எதிர்பாராத செலவுகள்.

## விருச்சிகம்

விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை.

விருட்சிகம்: பிரயாணத்தினால் கஷ்டங்கள் ஏற்படல். பணம் பற்றாக் குறை ஏற்படல். அரச காரியங்களில் தாமதம் ஏற்படல். இனபந்துகளுடன் மனவேற்றுமை உண்டாகல். புத்திர புத்திரிகளையிட்டு மனக்கஷ்டம் உண்டாகல். மனதில் எந்நேரமும் ஒருவித கவலை ஏற்பட்ட வண்ணமிருக்கும். களத்திர சுகக்குறைவும் ஏற்பட ஏதுவாகும். திருமண காரியங்களில் தாமதம் உண்டாகும். உடல்நலக்குறைவு ஏற்படல். மனைவியினால் மகிழ்ச்சி ஏற்படாத நிலையும் உண்டாகல். மேல் அதிகாரிகளுடன் கருத்துவேற்றுமை ஏற்படல். சமூகத்தில் அவப்பெயர் கேட்கவும் ஏதுவாகும். தாம் இருக்கும் இல்லம்விட்டு வெளியேவரும் வகையும் சிலருக்கு ஏற்படும். செலவுகள் ஏற்பட்டாலும்அதற்குத் தகுந்த வருவாயும் சிலருக்கு ஏற்பட ஏதுவாகும். வாகனவகை செலவுகள் ஏற்படல். விருந்துபசாரங்களில் பங்குபற்றும் வகையும் ஏற்படலாம்.

## தனுசு

மூலம். பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்.

தனுசு: பெரியோர்கள் நட்பு ஏற்படல். புத்திரபாக்கியம் சில தம்பதியர்களுக்கு ஏற்படல். பணப்பிளக்கம் உண்டாகல். திருமண காரியங்கள் கைகூடிவரல். பிரயாணல்பலன் ஏற்படல். அரசகாரியங்களில் அனுகூலம் ஏற்பட ஏதுவாகல். பிரிந்தவர்கள் ஒன்றுசேரும் தன்மை ஏற்பட ஏதுவாகல். சத்ருஜெயம் ஏற்பட ஏதுவாகும். செய்தொழில்கள் மூலம் முன்னேற்ற வாய்ப்புக்கள் ஏற்படல். பிறர்மதிப்பு மரியாதை ஏற்பட ஏதுவாகல். நண்பர்கள் உதவி ஒத்தாசை அற்ற சமையத்தில் ஏற்படும். பணப்பிளக்கம் ஏற்படல். தேக சுகம். தேக அழகு போன்றனவும் மனதில் ஒருவித தைரியமும் உற்சாகமும் ஏற்பட ஏதுவாகும். புதிய தொழில் பலிதம் ஏற்படல்.

## மகரம்

உத்தராடம் 2, 3ம்
பாதங்கள், திருவோணம்,அவிட்டம்1,2ம்பாதங்கள்.

மகரம்: மனதில் காரணமின்றி பயம் உருவாகல். கண்ணுடன் சம்பந்தமான ரோகம் சிலருக்கு ஏற்படல். குடும்பத்தில் சிறுசிறு சண்டை சச்சரவு. மனபேதம் போன்றனவும் ஏற்பட ஏதுவாகும். சிலரின் மனைவிக்கு தேக நலக்குறைவு ஏற்படலாம். இனபந்துக்கள் அல்லது தனது குடும்பத்தில் குழப்பம் ஏற்படவும் ஏதுவாகலாம். வசதி வாய்ப்புக்கள் குறையும் தன்மை ஏற்படல். சோம்பல் குணம் ஏற்படும். எனினும் செய்தொழில் வகையில் எந்தவித பாதிப்பும் ஏற்படமாட்டா. செலவுகள் அதிகரிக்கும் புதிய தொழில் முயற்சிக்கு முன் முயற்சித்தவர்களுக்கு கல்வியில் முன்னேற்ற வாய்ப்புகள் ஏற்பட ஏதுவாகல். பெரியோர் உதவி ஏற்படல். புதிய நட்பினால் மனமகிழ்ச்சி ஏற்படல். பிரயாண சுகம் சிலருக்கு ஏற்படல்.

## கும்பம்

அவிட்டம் 3, 4ம் பாதங்கள். சதையம்,
பூரட்டாதி 1, 2,3ம்பாதங்கள்.

கும்பம்: கல்விப் பலிதம். புத்திக் கூர்மை. உயர் அதிகாரிகளின் நட்பு போன்றன ஏற்படல். தமது காரியங்களில் அலைச்சல் திரிச்சல் போன்றன ஏற்படல். சிலருக்குத் தாம் ஏமாற்றப்படுதலுக்கு ஆளாகவும் நேரும். பணச்செலவுகள் சூட்டுரோகம் போன்றனவும் ஏற்படல். தந்தைக்கு தேகநலம் ஏற்படல். செய்தொழில் வகையில் மனத்திருப்தி ஏற்படல். தெய்வவழிபாடு. தெய்வ தரிசனம் போன்றன ஏற்பட ஏதுவாகல். பிறருக்கு உதவிடும் தன்மையும் சுபச்செலவுகளும் ஏற்பட ஏதுவாகும். நண்பர்களின் உதவி ஏற்படல். பிரயாணத்தினால் நன்மை ஏற்படவும் ஏதுவாகல். தர்மசெய்கை ஏற்படல்.

## மீனம்

பூரட்டாதி 4ம் பாதம். உத்
தரட்டாதி ரேவதி.

மீனம்: செல்வநிலையில் பற்றாக் குறை ஏற்படல். உறவினர்களுக்குள் நண்பர்களுக்குள் ஏதும் மனக்கஷ்டங்கள் எற்படலாம். தாயின் உடல்நிலை பாதிக்கவும் ஏதுவாகலாம். எனினும் செய்தொழில் வகையில் பிரச்சனைகள் ஏற்படமாட்டா. தேகநிலையில் நல்ல மாற்றம் எற்படல். பிரிந்தவர்கள் ஒன்றுகூடும் தன்மையும் ஏற்பட ஏதுவாகும். திருமண காரியங்களில் அனுகூலம் ஏற்படல். தமது திட்டங்களில் தாமதித்தாலும் பின் நிறைவேறும் வகை உண்டாகல். பிறர் ஜாதிமதத்தினர் உதவிஒத்தாசை சகோதர வகையினரின் உதவி. போன்றன ஏற்படல். எதிலும் ஒருவித பற்றும் தன்நம்பிக்கையும் ஏற்படலாம். பிரயாணத்தினால் சிலருக்கு நன்மைகள் ஏற்படமாட்டாது. வயிற்றுடன் சம்பந்த ரோகம் ஏற்படவும் ஏதுவாகும்.

உங்கள் சோதிடத்
தேவைகளுக்கு:

பொன்.சேகர்

படிப்பகம்

www.padippakam.com



# கையெழுத்திட்டான் கரிகாலன் சோழன்



கையெழுத்திட்டான் கரிகாலன் சோழன்
மையாலல்ல, மாண்டவர் உயிரால்!
பொய்யாதிருந்து பொறுமையாய்ப் போராடி
மெய்யை இந்த மேதினிக் குணர்த்திய
ஐயன் தலைவன் அவன் திருக்கரங்கள்
வையத் தமிழரின் வாழ்வினை உயர்த்திடச்
செய்யும் பணியிது! சிங்கள இனமும்
உய்யும் படியாய் உலகோரை அணைத்திடும்
மையம் ஆகியே மாண்புடன் விளங்கினான்!
ஐயம் யாவையும் அகற்றிட இணங்கினான்!

மனிதர் நாமென மதிக்கப்படும் வரை
புனிதப் போரொன்றைப் புரிந்திடுவோமெனத்
துணிவாய் இயங்கியே தூய்மையின் வழி நின்
றான்!
"பணிவேன் நீதிக்குப் பாதை தவறேன்!
அணிகள் திரட்டுவேன் அறவழி உயர்வேன்!"
எனவே தனது இலட்சியப் பயணத்தில்
இனமும் இணைந்திடும்படி படைகூட்டினான்!
இனியும் அடிமைகள் இலையெனக் கூவினான்
வனவாழ்வினையும் வல்லார் எதிர்ப்பையும்
தனதாய் ஏற்று தவவாழ் வியற்றினன்
கனவிற்கூடக் கண்ணியம் காத்தனன்

கொதிக்கும் தாருக்குள் குளித்த தமிழனின்
விழிக்குள்ளிருந்து விரிந்த சோதியாய்
விதிக்குச் சவாலிட்டு வெற்றிகள் கூடினன்
விடுதலைப் பொறியென வீரத்தில் ஆடினான்

ஐம்பது ஆண்டுகள் அடிமைப் பட்டு நாம்
துன்ப அலைகளிற் துறைதேடி மிதந்தோம்!
தின்பதும் உடுப்பதும் தீனிக்கு உழைப்பதும்
என்பதே வாழ்வாய் இதயம் எரிந்தோம்!
எங்கள் மண்ணிலும் எங்கள் கடலிலும்
பங்கு கேட்கும் பாவியராகினோம்!
எங்கு பார்க்கினும் எதிரியின் படைகள்
தங்கு போசறை கண்டு குமுறினோம்!

இந்த அரசியல் தந்த இழப்புகள்
கண்டு பொங்கிய காவியத் தலைவர்கள்
வந்து எங்களின் வரலாற்றை மீட்டதால்

இன்று எம்மண்ணில் இந்நிலை கண்டனம்
பந்த பாசங்கள் அனைத்தும் தமையீன்ற
சொந்தத் தாயக விடிவுக்காயத் தந்தவர்
முந்து வீரராய் முப்படை அணிகளிற்
சென்று தம்முயிர் ஈந்தவர் தியாகங்கள்
வென்று சிங்கள மக்களின் சிந்தையிற்
கொண்டு வந்ததோர் மாற்றத்தை நமதுமுன்

வாழ்ந்த பூமியை விட்டுப் பிரிந்து நாம்
வாழ்வு தேடியே அலைந்த கொடுமைகள்
சூழ்ந்து எங்களைச் சுட்டு எரித்ததும்,
சுதந்திரம் ஒன்றே ஒட்டி நடந்ததும்.
தாழ்ந்து போவதோ தமிழினம் தரணியில்?
தட்டு ஏந்தியே பிச்சை எடுப்பதோ?
விழ்ந்து போவதோ எங்கள் தாயகம்?
விதியை நம்பி நாம் வாளாவிருப்பதோ
என்ற கேள்விகள் எம்முனேயெழுந்து
இதயச் சுவர்களை மோதியுடைத்ததும்
நேர்ந்த இழப்புகள் நெருப்பாய் எம்முன்னே
நீண்டு எரிந்ததும் நினைவு கசந்ததும்...
ஈண்டு நினைக்காத தமிழன் இருப்பானோ?
எண்ணிப் பார்க்காத இளைஞர் இருப்பரோ?

தாண்டிக் கடந்த ஏரிகள் குட்டைகள்
தவழ்ந்து கடந்த கிடங்குகள் பள்ளங்கள்
ஆண்டிக் கோலமும் அழுத விழிகளும்
அகதி முகாம்களின் அலங்கோல வாழ்க்கையும்
ஈண்டு நினைக்காத தமிழன் இருப்பனோ?
எண்ணிப் பார்க்காத இளைஞர் இருப்பரோ?
நீண்ட பயணத்தில் நெருப்பினை உண்டோம்!
நெஞ்சக் களத்திலே உணர்ச்சிகள் வென்றோம்!

எழுத்துக் கடங்கா இன்னல்கள் யாவும்
எங்கள் வாழ்விலே பட்டுத் தெளிந்தோம்!
விழுத்த விழுத்த மீண்டும் எழுந்தோம்!
வெட்ட வெட்ட மீண்டும் தளிர்த்தோம்!
கொழுத்தக் கொழுத்த குளிர்மேக மாகினோம்!
கொத்தக் கொத்த மலையாக நிமிர்ந்தோம்!
அழுத்த அழுத்த ஆகாயமாகினோம்!
அந்நியப் புயல்களைத், தமிழால் அடக்கினோம்!

வழுத்தினோம் எங்கள் தமிழர் மரபினை!
வாழ்த்தினோம் எங்கள் முன்னோர் மறைகளை!
இழுத்து மூடினோம் எட்டப்பர் மேடையை!
இசையையும் கலையையும் எம் தாய்க்கு வழங்
கினோம்!

சாதி ஒன்றது தமிழ்ச்சாதி!
சமயம் ஒன்றது மனிதத்தின் நீதி!
வேதம் அன்பு என்று நாம்உணர்ந்தோம்!

எந்த முடிவினை எங்கள் தலைமகன்
எடுப்பினும் அதனை ஏற்றிடும் கூட்டமாய்
நின்று அவனுக்கு நெடுபலம் வழங்கும்...
நிச்சயம் இந்த உலகத் தமிழினம்!
இந்த முடிவுக்கு இணைந்த ரணிலுக்கு
எங்கள் நன்றிகள் ஆயிரம் ஆயிரம்!
"வந்தாய் ஐயா" சண்டாளி செய்த
வரலாற்றுக் கொடுமைக்கு வரம்பொன்று போட!

பிந்தாமல் விரைவிற் பிக்குகள் சபையிலும்
பிரச்சனை வராமல் விளக்கங்கள் தருக!
பந்தாடும் அரசியற் பாரம்பரியத்தை
அடியோடு மாற்றிடும் அனைவர்க்கும் நன்றி!

இந்த நாள் வரை எமது இனத்தின்
துன்பந்துடைப்பதே தீர்வெனக் கொண்டு
நின்ற நோர்வேக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்!
பண்பாடு கொண்டோர் பாரெங்கு முள்ளதைப்
பறைசாற்றும் உங்களைப் பாராட்டி மகிழ்
கிறோம்!
கண்டம் ஒன்றாய்க் கண்களும் ஒன்றாய்......
அண்டை நாடாய்....அயலின் உறவாய்
நின்றும் எங்களை நினைக்கத் தயங்கும்
இந்திய மண்ணே! உனக்கும் நன்றி!
என்றோ ஒருநாள் எம்மைப் புரிவாய்!
அன்று உனது கடமையைப் புரிவாய்!

உலகத் தரையெல்லாம் உலவும் எனது
உறவுக் காரரே! உங்களை அழைக்கிறேன்!
அழகுத் தாயகம் இதுவரை கண்ட
உடைவுகள் போக்க உழைத்திட எழுங்கள்!

செல்லும் குண்டும் சிதைத்த பூமியை
மெல்லத் தடவி மருத்துவம் செய்ய
எல்லாத் தமிழரும் எழுந்து நடவுங்கள்!
கல்லும் துண்டுமாய்ச் சிதறிய கட்டடம்
கரித்துண்டாகிய கூரைகள் வீடுகள்
பள்ளிக் கூடங்கள் மருத்துவ விடுதிகள்
எல்லை வரம்புகள் இழந்த தோட்டங்கள்....
பள்ளந் திட்டியாய்ப் பாழான பாதைகள்
பயணம் காணா வீதிகள் தெருக்கள்
எல்லாம் திருத்தி எங்கள் மக்களை
இன்பப் படுத்தும் இனிய நாளிது!

எங்கள் கதிரையும் எங்கள் நிலவையும்
எங்கள் கடலையும் எங்கள் நிலத்தையும்
கண்கள் குளமாகக் கட்டி அணைக்கும்
காலம் பிறப்பதைக் காணும் நாளிது
வாழ்ந்த நிலத்தை விட்டுப் பிரிந்தவர்
மீண்டு களிக்கப் பிறக்கும் நாளிது
கூண்டுச் சிறைகளில் துடித்த பறவைகள்
மீண்டும் பறக்கும் மேலான நாளிது

திசைகள் தோறும் பிரிந்து வாழ்ந்து
உறையும் எங்கள் இனிய இனமே!
நகையும் புடவையும் நமது வாழ்வென
நகைப்புக் காளாய் நடந்தது போதும்!
புகையும் மதுவும் போலிச் சிரிப்பும்
புதுமை யென்று கிடந்ததும் போதும்!
சிகையலங்காரமும் சினிமாமயக்கமும்
சிந்தனைக் குழப்பமும் இதுவரை போதும்!
திரைகள் தோறும் தோன்றும் முகங்களைத்
தோத்திரம் பாடித் திரிந்தது போதும்!
பகைவன் கூடத் தன்னிலை மாறித்
தலைவன் கரங்களைத் தழுவிட நிற்கிறான்!
முகில்கள் விலக முழுமதி நிலவாய்
முன்னே வந்தான் எங்கள் தலைவன்!

முகவரி நமக்கும் உண்டு உண்டென்று
முடிவுகள் செய்து முயற்சிகள் எடுக்கும்
பகலவன் அங்கே செய்திடும் பணிக்குப்
பணபலம் மனபலம் அனைத்தையும் தருவீர!
உலக அரங்கில் ஈட்டிய அனுபவம்
இளைய தலைமுறை ஈட்டிய அறிவு
அனைத்தையும் எமது அன்னைக்குத் தருவீர!

பறந்து பறந்து பிறந்த நாள் வாழ்த்துக்கள்
பாடிப்பாடி மகிழ்ந்தது போதும்!
சிறந்த கலையையும் சீரபண்பாட்டையும்
கூடிக்கூடி விற்றதும் போதும்!

மறந்து போன மண்ணை யொருமுறை
மனதில் இருத்தி மணித்துளி கழிப்பீர
இறந்து போன உறவுகள் பெயரில்
உங்கள் நாட்டிற்கு உழைப்புத் தருவீர!

கையெழுத்திட்டான் கரிகாலன் சோழன்
மையால் அல்ல, மாண்டவர் உயிரால்!
தையும் பொங்கலும் தாழ்விலா வாழ்வும்
கையிற் கிடைக்கும் காரணி யாகினான்!
தையின் பொங்கலும் சித்திரைத் திங்களும்
மெய்யாய் எங்கள் மண்ணிலே பிறக்க
வையத் தமிழரே வாழ்த்திவீர் நின்று!
வாழிய எங்கள் தாயக மண்ணே!
நன்றி! வணக்கம்!



- புலவர் சிவநாதன்

உ

# சைவமுன்னேற்றச் சங்கம் (U.K)
# வெள்ளிவிழா சிறப்பு நிகழ்ச்சி-1

இலண்டன் ஸறே பகுதியில் வாழும் தமிழ் மக்களுக்கு நல்லதொரு கலைவிருந்து சனிக்கிழமை (23-02-02) கிடைத்தது. (U.K) சைவமுன்னேற்றச் சங்கத்தினர் தமது சங்க வெள்ளிவிழா ஆண்டில் நடத்தும் முதலாவது சிறப்பு நிகழ்ச்சியாக ஸறேயிலுள்ள Grove Hall இல் இக் கலைவிருந்தைப் படைத்தனர். மாலை 7.30 மணியளவில் பூசைவழிபாட்டுடன் நிகழ்ச்சிகள் தொடங்கியபோதே மண்டபம் ஆர்வலர்களால் நிரம்பி விட்டது. தலைவர் திரு. வ.இ.இராமநாதன் சங்க வளர்ச்சிபற்றிக் கூறி, எதிர்காலத்திட்டம் பற்றியும் விளக்கினார். இவ்வருடம் ஆகஸ்டு 31 ஆம் நாள் வெகுவிமரிசையாக நடக்கவிருக்கும் வெள்ளிவிழா நாடே வியக்கும் முறையில் அமைய ஆர்வலர்களின் ஆதரவை வேண்டினார். அன்றைய சிறப்பு விருந்தினர்களான திரு.செ.யோகநாதன், Dr ந.ராஜன் ஆகியோர் சங்கம் ஆற்றிய பணியை பாராட்டியும், ஆற்ற இருப்பனவற்றை வாழ்த்தியும் முறையே பொற்பதக்கமும் பொற்கிழியும் வழங்கினர்.

செல்வி சகானா குலேந்திரன்,செல்வி பிரதீபா குகராஜா ஆகிய மாணவிகளின் உரைகளும் வாய்ப்பாட்டு,வயலின்,புல்லாங்குழல்,மிருதங்க இசை நிகழ்ச்சிகளும் புலம் பெயர்ந்த ஈழத்தமிழ் மக்கள் தம் சமயம்,கலை, கலாசாரங்களை மறந்துவிடவில்லை–மறக்கவும்மாட்டார்கள் என்ற நம்பிக்கையை நிலை நாட்டுவனவாக அமைந்திருந்தது.

செல்வன் முத்துக்குமாரசாமி சர்மா செல்வன் திவ்யசாந்தன் செல்வன் செந்தூரன் இராஜமனோகரன், செல்வி சிவகாமி இராஜமனோகரன் செல்வன் சரவணன் தெய்வேந்திரன்,செல்வன் குமார் விஸ்வநாதன் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரியும் திருமதி சௌந்தரலக்ஷ்மி செல்வராஜனின் வீணைக்கச்சேரியும் அமிர்தவர்ஷினியாக இருந்தன. நிகழ்ச்சிகளுக்கு மகுடம் வைத்தாற்போல அமைந்தது செல்விகள் மேனகா இந்திரகுமார், மாதினி குகபாலன் ஆகியோரின் நடன நிகழ்ச்சி.

முத்தமிழ்க் கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்கள் அனைவர் நெஞ்சங்களையும் நிறைத்தமை வியப்பன்று. சிற்றுண்டியுடன் விழா நிறைவெய்தியது.

அடுத்த நிகழ்ச்சி எங்கே? எப்போது? என்று பலரும் பேசிக்கொண்டது காதில் விழுந்தது.

–தேனு

# பெண் விடுதலை

சுதந்திரம் வந்ததென்று
சுருதியுடன் சொல்லுகின்றீர...........
எமக்கு

எம்மினத்தின் துயர் தீர்க்க
எங்கோ ஒரு மூலையிலே
A.K. தூக்கி விட்டால்
எல்லோர்க்கும் சுதந்திரமா?.......
இன்னும்.
கருவிலே கலைக்கின்றார்.
கள்ளிப்பால் கொடுக்கின்றார்.
துள்ளித் திரியும் பருவத்திலும்.
துவட்டி எறிகின்றார்.

பருவம் அடைந்து விட்டால்.
பதைபதைத்து நிற்கின்றார்
காமம் தீர்ந்த பின்னர்
கருக்கி விடுகின்றார்

படுக்கையறைப் பொம்மைகளாய்ப்
பயன்படுத்திக் கொள்வதற்கு.
ஒன்றுக்கு மேலே.
வைத்துள்ளார் பெண்டாட்டி.

மாற்றுத் தாரமொன்று
மணவாட்டிதேடிட்டால்.
வேசி என்று கூறி
விலக்குகின்றார் சபைதனிலே.

மனைவி மலடியென்றால்.
மறுதாரம் தேடுகின்றார்.
நீயே மலடென்றால்
உன்னை அவள் மறுத்ததுண்டோ?

ஆண்பிள்ளை பெற்றுவிட்டால்
அம்மாவுக்கும் மரியாதை
ஆஸ்பத்திரி : வார்ட்டை :
அலங்கரிக்கும் அவர்கள் படம்.

ஆணுக்குப் பெண்ணிக்கு
அடிமையில்லையென்று.
அடிக்கொரு தடவை
அடித்து முழக்கிடுவோர்

அவரிலும் பார்க்க
அவள் உயரே போய்விட்டால்.
அடித்து அமுக்கி விட
அணுவளவும் தயங்க மாட்டார்.

எம்மினத்தில் மட்டும்.
பெண்ணடிமையில்லையையா.
இனத்துக்கு. இனம்
இக் கொடுமை உண்டல்லோ......?

மூடி முக்காடிட்டு.
மூழி கூடத் தெரியாமல்.
கறுப்புடை அணிந்து- அக்
காரிகை செல்கையிலே.
கனக்குதையா எம்மிதயம்.

கலாச்சாரம் காக்க அக்
கண்மணிதான் கிடைத்தாளோ...?

கற்பெனப் படுவது.
காரிகைக்கு மட்டுமல்ல.
பிள்ளை பெற்று வளர்ப்பது மட்டும்.
பேதையவள் பொறுப்பல்ல.
அடுப்பூதுவது மட்டும்
அவளுக்கு விதியல்ல.

வீணை மீட்டுபவள்.
விண்வெளியைக் கடந்து விட்டாள்.
ஏ கே தூக்கிக் கொண்டும்.
ஆக்கிப் போடுகிறாள்.
பட்டங்கள் அனைத்தையும்
பாவையவள் பெற்று விட்டாள்.
பாரிய வாகனங்கள்
காரிகையின் கையின்று.

அவளால் ஆகாதது
அணுவளவும் இல்லையையா........
பூ.... என்று சொல்லிப்
பூகி மெழுகாதே - அவள்
புயலாக மாறி விட்டால் - நீ
புல்லாகிப் போய் விடுவாய்

உடலில் மென்மையுண்டு.
உள்ளத்தில் உறுதியுண்டு
தெள்ளு தமிழ் உதட்டிலுண்டு.
தெரிந்து கொள்வீர் பெண்மையென்
று.

என் இனிய பெண்ணினமே......!

சுதந்திரம் என்று கூறிச்
சுக்கு நீறாய்ப் போய்விடாதே.

குடும்பம் பாங்கோடு- நீ
கொள்கையிலே குறிவைத்து
குல விளக்காய் விளங்கிட்டால்.
கும்பிடுவர் குணமுடையோர்

எம்மவரே.......!

எமக்கும் நீர் வேண்டுமையா....
உமக்கும் நாம் வேண்டுமையா
நாமின்றி நீர் இல்லை.
நீர் இன்றி நாமில்லை

இரு கையும் இணைந்தாலே.
இனிய நாதம் பிறந்திடும் தேள்.
இதிலேதும் சந்தேகம்
இன்னமும் தான் இருக்கிறதோ........?

உபதேசம் செய்வது.
இன்றோடு முடியட்டும்.
செயலிலே சீர்திருத்தம்
செழித் தோங்க வேண்டுகின்றேன்

நான்கு திசைப் பயமின்றி
நட்ட நடு றோட்டினிலே.
நங்கை பொருத்தியவள் - நலுங்
காமல்
நடந்து செல்லும் நாளே.
நம்மவர்க்கு சுதந்திரநாள் என்று
அன்றே மொழிந்திட்டார்
அண்ணல் காந்தியவர்
அந்நாள்தான் எந்நாளோ.......?

-நன்றி-
கூடலூர் ஆனந்தி
இலண்டன்

படிப்பகம்

நம்நாடு
Europe Edition

JR PRINT
சகல அச்சு வேலைகளையும் உரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
ஜே ஆர் அச்சகம்
57, Boundary Road, Walthamstow
London E17 8NQ
Tel: 020 85036643
Web: www.jrprint.com email: contact@jrprint.com

# வவுனியா-பாஸ் வழங்கும் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிப்பு!

வவுனியாவில் கடந்த சுமார் பதினொரு ஆண்டுகாலமாக நடைமுறையில் இருந்துவந்த வதிவிட அனுமதிப் பத்திரமுறை உடனடியாக நீக்கப்பட்டிருக்கிறது. வவுனியா சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் டபிள்யூமகாநாயக்கா இதனை அறிவித்தார். பாதுகாப்பு அமைச்சின் உத்தரவுக்கமைய பொலீஸ் தலைமையகத்தில் இருந்து விடுக்கப்பட்ட பணிப்பை அடுத்தே வவுனியாவில் இந்தக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டிருக்கின்றன. வவுனியா மாவட்டத்தில் பாதுகாப்புக் காரணங்களுக்காக பொது மக்களின் நடமாட்டம் மற்றும் தங்குமிடம் தொடர்பான கட்டுப்பாடுகள் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு - ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்தில் முதன்முதலில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அதன்பின் அந்த ஆட்சியிலும். அடுத்துவந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியிலும் பொதுமக்கள் மீதான இந்தக் கெடுபிடிகள் படிப்படியாக இறுக்கப்பட்டுவந்தன. ஒருகட்டத்தில் வவுனியா மாவட்டத்தில் வசிப்போரும், வெளியிடங்களில் இருந்து அங்கு வருவோரும். வெளியேறுவோரும் சுமார் 21வகையான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றிருக்க வேண்டி இருந்தது. இந்த அனுமதிப்பத்திரங்களை (பாஸ்) விநியோ கிப்பதற்காகப் பல லட்சம் ரூபா செலவில் 21இடங்களில் அதற்கான நிலையங்களும் அமைக்கப்பட்டிருந்தன. வவுனியாவில் வசிப்போர் நிரந்தர 'பாஸ் அனுமதிபெற்றிருக்கவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டது.

தென்னிலங்கையில் இருந்தும் - வவுனியா தவிர்ந்த வன்னியின் ஏனைய பிரதேசங்களில் இருந்தும் - வவுனியா மாவட்டத்திற்கு வருவோர் 'பாஸ் என்ற பெயரில் பல்வேறு பாதுகாப்புக் கெடுபிடிகளையும் சந்திக்க நேர்ந்தது. இதனால் ஆயிரக்கணக்கானோர் நலன்புரி நிலையங்களில் அடைபட்டு அல்லலுறும் நிலைமையும் ஏற்பட்டது. புதிய அரசு பதவியேற்று. நல்லெண்ண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபோது வவுனியாவில் வசிப்போருக்கு நிரந்தர 'பாஸ் ஓ அனுமதியும். தென்னிலங்கையில் இருந்து வருவோருக்கு 14 நாள் தங்குமிட அனுமதியும். வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் இருந்து வருவோருக்கு 10 நாள்கள் தங்குவதற்கான அனுமதியும் வழங்கப்பட்டது. தற்போது இந்த வதிவிட அனுமதி முறைமுற்றாக நீக்கப்பட்டிருக்கிறது.

இதனால் வவுனியாவில் இருந்து வெளியிடங்களுக்கும். ஏனைய பிரதேசங்களில் இருந்து வவுனியாவுக் கும்மக்கள் சுதந்திரமாகச் சென்று வரவாய்ப்பேற்பட்டிருக்கிறது.

# புலிகள் மீதான தடைநீக்கம் குறித்து ஆக்கபூர்வமான முடிவு உரிய நேரத்தில் எடுக்கப்படும் - பிரதமர்

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறும் சூழல் ஏற்படும்போது அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீது சிறிலங்காவில் விதிக்கப் பட்டுள்ள தடையை நீக்குவது தொடர் பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கும் என்று பிரதம மந்திரி திரு. ரணில் விக்கிரமசிங்கா இன்று வியாழக் கிழமை நண்பகல் அளவில் பாராளுமன்றத்தில் தம்முடன் பேச சுவார்த்தை நடத்திய தமிழ்க்கட்சிகள் கூட்டமைப்பின் பாராளுமன்றத்துதுக் குழுவினருக்குத் தெரிவித்தார்.

# மகாசிவராத்திரி விழாவுக்கு திருக்கோதீஸ்வரத்தில் ஏற்பாடு!

வரலாற்றுச் சிறப்புமிக்கதும். தேவாரப் பாடல்பெற்ற தலங்களில் ஒன்றுமான திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மகாசிவராத்திரி விழா நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு கும்பபூசை. அபிஷேகம் என்பன இடம்பெற்றுத் தொடர்ந்து பிரதோஷப் பூசை நடை பெறும். இரவு 8 மணிக்கு முதலாம் சாமப்பூசையும். 10.30 மணிக்கு இரண்டாம் சாமப்பூசையும். நள்ளிரவு 12.15 மணிக்கு மூன்றாம் சாமப் பூசையும் மறுநாள் அதிகாலை 3 மணிக்கு நான்காம் சாமப்பூசையும் தொடர்ந்து காலை 6 மணிக்கு பாலாவி புனித தீர்த்தத்தில் தீர்த்தமாடலும் இடம்பெறும். பன்னிரு திருமுறைப் பண்ணிசை. திருக்கேதீஸ்வரத் திருப்பதிகம். சமயச் சொற்பொழிவு. மேளவாத்தியக் கச்சேரி என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும். திருமுறைப் பண்ணிசையிலும், சமயச்சொற்பொழிவிலும் தென்னிந்தியாவின் புகழ் பூத்த சமயப் பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

மகா சிவராத்தி நிகழ்ச்சிகள் அனைத்தும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் ஒலி.ஒளி பரப்புச் சேவைகளிலும் நேரடி ஒலி ஒளிபரப்புச் செய்யப்படும். வேறு மாவட்டங்களில் இருந்து ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களின் நன்மை கருதி அன்னதானம், தாகசாந்தி வசதிகளும் ஆலயத்தின் திருப்பணிச் சபையினரால் செய்யப்பட்டுள்ளன. திருக்கேதீஸ்வரம் ஆலயம் தற்போது பாலஸ்தாபனம் செய்யப்பட் டுள்ளதால் அபிஷேகங்கள், அர்ச்சனைகள் பாலாவிப் பிள்ளையார் ஆலயத்திலும் நடைபெறும்.



# களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் கைதிகளில் இருவர் மயக்கம்

களுத்துறைச் சிறையில் சாகும் வரையிலான உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ள 5 தமிழ் அரசியல் கைதிகளில் இருவர் நேற்று மயக்கமடைந்தனர். தம்மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப் படுத்தவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த முதலாம் திகதி தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 5 கைதிகளில் இருவரே நேற்று மயக்கமடைந்தனர். இவர்கள் கடந்த மூன்றரை வருட காலத்துக்கும் மேலாகக் களுத்துறைச் சிறையில் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளன ர்.

இதேவேளை - சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கைதிகளுடன் மேலும் பல கைதிகள் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

VIDEO VISION
வோல்தம்ஸ்ரோவில்
பெயர்பெற்ற ஒரேயொரு
வீடியோ ஸ்தாபனம்
ஒரிஜினல் வீடியோ பிரதிகள் விற்பனைக்கும் வாடகைக்கும்
Best Quality DVD, VCD and Video Cassettes, for sale and Rental
Audio CDs & Cassettes on sale, Electrical Appliances Repaired
Video Filming
76 Hoe Street, Walthamstow, London E17
Tel: 020 8520 5403 Mobile: 07733 353 218, 07957 110 093

